பாரதி

1962

மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை-2

கேடயங்கள் பெறும் தமிழறிஞர்கள்

புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன்

★

★



மகாவித்துவான்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

பாரதி

மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர்

பத்தாவது

மாநாடு

1962, டிசம்பர், 30.

விலை : ரூபாய் ஒன்று

தமிழ் எழுத்தாளர் சங்கம்

சென்னை-2

தமிழ் எழுத்தாளர் பத்தாவது மாநாடு

வரவேற்புக் குழு

தலைவர் :

திரு. கே. ஜி. இராதாமணாளன்

உறுப்பினர் :

சங்கச் செயற்குழு உறுப்பினர் அனைவரும்.

உட்குழுக்கள்

மலர்க் குழு :

அமைப்பாளர் :

திரு. மா. இளஞ்செழியன், எம். ஏ.

உறுப்பினர்கள் :

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி
,, ஊ. ஜயராமன்
,, கே. பி. சுந்தரம்
,, கோமதி சுவாமிநாதன்
,, பூவண்ணன்

விளம்பரக் குழு

அமைப்பாளர் :

திரு. சிறுவை. மோகனசுந்தரம்

உறுப்பினர்கள் :

திரு. இளம்பாரி
,, கே. ஆர். கலியாணராமன் (மகரம்)
,, ந. பழனியப்பன்
,, கா. வேழவேந்தன்
,, சையது முகம்மது

தமிழ் எழுத்தாளர் சங்கம்

1962-ஆம் ஆண்டின் செயற்குழு

தலைவர் :

புலவர் அன்பு கணபதி

துணைத்தலைவர்கள் :

திரு. அழ. வள்ளியப்பா
திரு. மயிலை சீனி. வேங்கடசாமி
பேராசிரியர் அ. பழனிச்சாமி
திரு. அப்துல் வகாப்

பொதுச்செயலாளர் :

திரு. பா. பாலசுப்பிரமணியன்

துணைச்செயலாளர்கள் :

திரு. நா. பாண்டுரங்கன்
திரு. அ. செ. செல்லப்பன்

பொருளாளர் :

திரு. கே. பி. சுந்தரம்

குழு உறுப்பினர்கள் :

திரு. மா. இளஞ்செழியன்
திரு. கே. ஆர். கல்யாணராமன் (மகரம்)
திரு. கோமதி சுவாமிநாதன்
திரு. ஊ. ஜயராமன்
திருவாட்டி. கலைச்செல்வி
திரு. பூவண்ணன்
திரு. க. அறிவழகன்
திரு. கா. வேழவேந்தன்
திரு. நெ. சி. தெய்வசிகாமணி
திரு. ந. ஜகந்நாதன்
திரு. நா. அறிவழகன்
திரு. சையத் முகம்மது
திரு. வி. ஏ. பாலகிருட்டிணன்
பண்டித. இராம. மீனாட்சிசுந்தரனார் (கோவை)
திரு. பி. ந. வெங்கடாச்சாரி (கல்கத்தா)

பொருளடக்கம்

பக்கம்

1. மொழிக்கோயில் 9
—தெ. பொ. மீ

2. சோவியத்து நாட்டிற் கல்வி 13
—டாக்டர் அ. சிதம்பரநாதன் எம்.ஏ.,எம்.எல்.சி.

3. மாசு ஒன்று உள்ளது 15
—டாக்டர் மு. வரதராசனுர்

4. நாவல் இலக்கியம் 17
—நா. பார்த்தசாரதி

5. இலங்கையின் சிறுகதையாசிரியர்கள் 20
—சிற்பி

6. சிறுவர்க்கான திரைப்படம் 23
—பூவண்ணன்

7. கவிதை மங்கை 26
—கா. வேழவேந்தன் பி.ஏ., பி. எல்

8. தமிழில் விஞ்ஞானம் 27
—பெ. நா. அப்புஸ்வாமி

9. மலையாளத்தில் சிறுகதை வளர்ச்சி 33
—ஜி. ஸ்ரீதரன்

10. தெலுங்கு வீரப் பெண்மணிகள் 39
—சல்லா. இராதாகிருஷ்ணசர்மா

11. கேரளம் தந்த கிருஷ்ணன் நாயர் 42
—நா. ஜகந்நாதன் எம். ஏ.

12. ஆட்சியாளருக்கு எழுத்தாளர் வேண்டுகோள் 45
—மயிலை. சீனி. வேங்கடாசாமி

13. அறம் வென்றது! 47
—சாலை இளந்திரையன்

14. தமிழ் எழுத்துலகில் பெண்கள் 49
—கோமகள்

15. யானையின் நிலவு 54
—நா. பாண்டுரங்கன் எம். ஏ.

16. ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் 55
—கா. அப்பாத்துரை

17. புரட்சிக் கவிஞர் 57
—பா. பாலசுப்பிரமணியன் எம். ஏ., எம். லிட்.

18. மகாவித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை 60
—கோ. சங்கரராசன்

19. இலக்கியப் பாலம் ரா. வீ. 63
—பி. எஸ். மணி

20. தமிழில் சிறுகதை வளர்ச்சி 65
—நாரண. துரைக்கண்ணன்

பதக்கம் பெறும் அறிஞர்கள்



டாக்டர்
எஸ். கே. நாயர்

ரா. வீழிநாதன்

அன்னைக்குச் சூட்டும்

அலங்கல்

1962 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 30 ஆம் நாள் சென்னை, பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில் நடக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கப் பத்தாவது மாநாட்டை யொட்டிப் "பாரதி" இதழின் இச்சிறப்பு மலர் வெளிவருகிறது. மாநாட்டை இந்தியத் துணைக்கண்டத்தின் முன்னாள் ஆளுநகையாளர் - தலைவரும் **(Governor - General),** முதுபெரும் அரசியல் - ஞானியும், பழுத்த தமிழ் எழுத்தாளருமான மேதக்க இராஜாஜி அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். "நவ இந்தியா" என்ற நாளிதழின் துணையாசிரியரும், ஆற்றல் வாய்ந்த இளம் எழுத்தாளருமான திரு. கே. ஜி. இராதாமணாளன் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டைத் திறம்பட நடத்துகிறார்கள். சங்கத்தின் தலைவரும், பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியருமான புலவர் அன்பு கணபதி அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கீழ்த் திசை ஆராய்ச்சித் துறைத் தலைவரான புலவர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களின் தலைமையில், "தமிழில் புதிய முயற்சிகள்" என்ற பொருள் குறித்து ஒரு கருத்தரங்கு நடைபெறுகிறது. கருத்தரங்கில் பல விழுமிய எழுத்தாளர்கள் தத்துவம், வரலாறு, உளவியல், பொது விஞ்ஞானம், நகைச்சுவை, திறனாய்வு, திரைக்கதை, வானக்கலை, மருத்துவம் - என்ற 9 - பொருள்களைக் குறித்து உரை நிகழ்த்துகிறார்கள்.

வழக்கம்போல் இம்மாநாட்டிலும் தமிழ் இலக்கியத்துக்கு மேதக்க தொண்டு புரிந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மாப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை - ஆகிய இரண்டு அறிஞர்களுக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. தமிழ் இலக்கியத்தைச் சீரிய முறையில் பிறமாநிலத்தாருக்கு அறிமுகப்படுத்தி வரும் எழிலார்ந்த எழுத்தாளர்களான திரு. ரா. வீழிநாதன், டாக்டர் எஸ். கே. நாயர் - ஆகியோருக்குப் பதக்கம் வழங்கிப் பாராட்டுத் தெரிவிக்கப்படுகிறது. கேடயங்களையும், பதக்கங்களையும் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், தமிழ்ப் புரவலர் கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்களும் அறிஞர்களுக்கு வழங்குகிறார்கள். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்களும், நாடறிந்த புலவர், புரவலர் ஏ. கே. வேலன் அவர்களும் விருந்தினரைப் போற்றிப் பேசுகிறார்கள். இவ்வாண்டு மாநாட்டின் சிறப்புக் கூறு கவியரங்காகும். இந்தியத் துணைக்கண்டத்தை இன்று அலைக்கழித்துவரும் "எல்லைப் போரைப்" பொருளாகக் கொண்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் 8 - கவிஞர்கள் தம் கவிதைப் பீரங்கியை முடுக்கிவிட்டு வல்லடி வழக்குப் புரியும் இழி குணச் சீனனை நோக்கி வகையாகச் சுடுகிறார்கள். மாலையில் "தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஓர் பத்தாண்டுத் திட்டம்" என்ற பொதுத்தலைப்பில் 'பத்திரிகை இலக்கியம்,' 'படைப்பு இலக்கியம்', 'அறிவியல் - கலை இலக்கியம்' என்ற பொருள்கள் குறித்து முறையே "தினமணி" ஆசிரியர் திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி அவர்கள், பொருளாதார வித்தகர் டாக்டர் ப. நடராஜன் அவர்கள், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் - ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள். இத்துணைப் பெருமை சான்ற பத்தாவது மாநாட்டின் நினைவாகவே இம்மலர் உங்கள் கைகளில் தவழ்கிறது.

இம்மலரில் பல எழுத்தாள விற்பன்னர்களும், தமிழ் வல்லுநர்களும் அழகழகான கட்டுரைகள் வரைந்து நம் நாட்டு இன்றைய இலக்கிய வளர்ச்சியைப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். முதலில் கேடயம், பதக்கம்

பெறுவோர் பற்றிய நேர்த்தியான அறிமுகங்கள் இடம் பெறுகின்றன. பிறகு இலக்கிய மலர்களின் நவநவமான வண்ணங்களைக் குறித்த பலப்பல கட்டுரைகளும், கவிதைகளும் ஒளிர்கின்றன. நம் பக்கத்து மாநிலங்களான மலையாள - தெலுங்கு நாடுகளைப் பற்றி இரண்டு சுவையான கட்டுரைகள் இடம்பெறுவது இம்மலரின் ஒரு தனிச் சிறப்பாகும். கட்டுரையாசிரியர்களின் கருத்துக்கு அன்னாரே பொறுப்பு எனினும், அவர்கள் வழங்கும் தமிழ் விருந்து நம் அனைவர்க்கும் சொந்தமானது என்பதில் ஐயம் என்ன இருக்கமுடியும்? கட்டுரைகளைக் கேட்டவுடன் அன்போடு கொடுத்துதவிய வல்லுநர்கள் யாவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரியது. இம்மாநாட்டு மலருக்கு விளம்பரம் தந்தருளிய வாணிப நிலையங்களுக்கும், அவற்றை வாங்கித் தந்த நல்லன்பர்களுக்கும், இது வெளிவருவதற்கான உதவிகளைப் புரிந்த நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைப் புலப்படுத்திக்கொள்கிறோம்.

கடந்த பத்தாண்டுகளாக உலகத் தமிழ் எழுத்தாளர் அனைவரின் உயர்வுக்காகவும் அரும்பாடுபட்டுவரும் தமிழகத் தலைநகரான சென்னை மாநகரத்தின் இதயத்தில் கொலுவீற்றிருக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இப்பத்தாண்டு விழா மலரைத் தமிழன்னைக்கு நாங்கள் சூட்டும் ஓர் எளிய அலங்கலாகக் கருதி அகமகிழ்கின்றோம். எங்கள் மகிழ்ச்சியில் பங்குகொள்ள உங்கள் யாவரையும் அழைப்பதில் தவறு ஒன்றும் இல்லையே? வணக்கம்.

இங்ஙனம்,

மலர்க் குழுவினர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும்,

'பாரதி'க்கும்

எமது வாழ்த்துக்கள்

சுதேசமித்திரன்

மவுண்டு ரோடு, :: சென்னை-2.

தமிழ் எழுத்தாளர்கட்கும்
'பாரதி'க்கும்
எம் இதயங்கனிந்த
வாழ்த்துக்கள்

※

டி. அன்ராஜ் & கோ.

ஜுவல்லர்ஸ்

வடக்கு மாடவீதி, மயிலை.

எமது வெளியீடுகள்

அன்பு வாழ்க்கை			
அறிஞர் அண்ணா	எழுதியது	1	50
அறிவிச் சாரல்			
தி. பத்மகுமாரி B.A	,,	2	50
திருவாளர் தேசியம் பிள்ளை			
மு. கருணாநிதி MLA	எழுதியது	1	50
நிலவும் தாமரையும்			
T. K. சீனிவாசன்	,,	1	50
திருமணப் பரிசு			
இரா. தியாகராஜன்	,,	1	50
இன்பத்தின் மடியில்			
முல்லை. சக்தி	,,	2	50
உலகம் தெரியாதவள்			
மா. தங்கவேலர்	,,	2	50
முதற் பரிசு			
தமிழ் பித்தன்	,,	1	50
மங்களமாய் வாழ்க			
சீதாலக்ஷ்மி	,,	1	50
குறளும் வாழ்வும்			
பெரியார் ஈ. வெ. ரா.	,,		

தயாரிப்பு

K. R. நாராயணன்

131, பிராட்வே : : சென்னை-1

Phone : 85124.

Specialists in American Styles

No. 1, State Bank Street, Mount Road,

MADRAS-2.

மொழிக்கோயில்

[தெ. பொ. மீ.]

"**யா**தும் ஊரே யாவரும் கேளிர்" என்பது பழங்காலத் தமிழகம் கண்ட உண்மை. அந்த அடிப்படைக் கொள்கையில் வளர்ந்த தமிழ்ப் பண்பாட்டினை உலகம் அறிய வேண்டும். தமிழ்ப் பண்பாடு என்பது தமிழ் மொழி என்ற வடிவம் கொண்டு எல்லோருக்கும் காட்சி அளிக்கிறது. மேலே கூறிய பொதுமைக்கண் கொண்டு பார்க்கும்போது, இஃது உலகப் பொதுச்சொத்து என்பது விளங்கும். எனவே, இதனை ஒரு சிறந்த சொத்து என நாம் அறிவதும் வேண்டும்; அதனை நம்மவர் எல்லாம் உணர்ந்து பயன்படுத்தவும் வேண்டும். முன்னோர் சொத்தைத் தின்று தீர்த்துவிடாது நாமும் உழைத்துப் பின்னோர்க்காகப் பெருக்கிவைத்தலும் வேண்டும். இதுமட்டும் போதுமா? உலகப் பொதுச் சொத்தானால், உலகம் அறியாமல் நாம்மட்டும் அதன் பயனைத் துய்ப்பது அறம் ஆகுமா? ஆதலின் அதனை உலகத்தினரனைவர்க்கும் விளக்கி உதவுதல் வேண்டும்; அவர்கள் அனைவரும் அதனை உணர்வதற்காக ஏதாவது நாம் செய்யவேண்டும். தமிழைத் தமிழனிடம் முன்னோர் ஒப்படைத்ததன் நோக்கம் இதுதான். தமிழ்த்தாய் என்கிறோம்; தமிழ்க் கடவுள் என்கிறோம்; தமிழ் என்பது பண்பாட்டுக் கோயில்; அந்த அறநிலையப் பாதுகாவலர் தமிழர் அனைவருமே ஆவர்.

"தமிழனே தமிழை உணரவில்லை, அவனை உணரச் செய்வதுதான் முதற் கடமை" என்பது உண்மை. தமிழ் பொதுச் சொத்தாதலின்—பிறநாட்டுக் கலையெல்லாம் தமிழ்க் கலையேயாம் ஆதலின், அவற்றைத் தமிழில் எழுதி வளர்ப்பதும் தமிழனது தலையாய கடமை என்பதனைப் பாரதி முதலானோர் வற்புறுத்தியுள்ளார்கள். "ஆனால் அதுவரையிலும் பொதுச்சொத்தினை மறைத்து வைப்பது பொருத்தமாகுமா?" என்பதே கேள்வி. "உலகத்தினர் இந்தப் பொதுச்சொத்தை அறிவது எப்படி?" என்பது இரண்டாம் கேள்வி. அவரவர்கள் தம்தம் மொழியைத்தான் உணர்வார்கள். தமிழ் நூல்களை அவரவர்கள் மொழியில் கூறுவதுதான் சிறந்த வழி.

ஆனால் இது முடியுமா? மனிதனால் முடியாதது எது? மனிதன் தன் வரலாற்றைத் தொடங்கியபோது அவன் நிலை என்ன? இரத்தவெறி கொண்ட அரக்கர்களிடையே வீசி யெறியப்பட்ட பச்சிளங் குழந்தையின் நிலைதான், எத்தனை தடைகள்? என்ன என்ன வடிவமான தடைகள்? மரங்கள், விலங்குகள், பறவைகள் எல்லாம் அவனை எதிர்த்து நின்றன. இன்று எங்கே அத் தடைகள்? அவை இன்று அன்பாக வாலைக் குழைத்து அவனோடு ஒத்துழைக்கின்றன; அல்லது அஞ்சி நடுங்கி அவன் கூட்டிற் புகுந்து அவன் சொல்லியபடி யெல்லாம் ஆடுகின்றன. எனவே தடைகளை யெல்லாம் அவன் தன் வழியாக மாற்றுவதே மனித வரலாற்றின் நற்செய்தி.

இப்படி எண்ணும்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இன்று தொண்டாற்றும் எனக்கு ஒரு கனவு தோன்றியது. ஆம், நான் ஒரு கனவுலகில் வாழ்பவன். என் நல்ல காலம் என் கனவு பலித்துவருகிறது. நாடு விடுதலையடைய வேண்டும் என்பது நான் கண்ட கனவுகளில் மிகப் பெரியது. இந்தக் கனவே நனவாக வில்லையா? கனவு நனவாகக்கூடிய சூழ்நிலையில் கனவு காண்பதுதான் கனவு பலிப்பதற்குச் சிறந்த வழி. என்னுடைய கனவுகள் எல்லாவற்றிற்கும் இத்தகைய சூழ்நிலை வாய்த்துள்ளது என்று மனப்பால் குடிக்கின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக்கழகம்; இந்த நம்பிக்கை பரவி வருகிறது. அண்மையில் காலஞ்சென்ற இதன் துணைவேந்தர், இதன் மாணவர்கள் எல்லாம் எதிர்காலத்தில் உலகத்திற்கு வழிகாட்டிகளாய்ச் சிறக்கவேண்டி அவர்களது குறிக்கோளை வள்ளுவர் அடியொற்றிக் குறளாகப் பாடியுள்ளார்:

"அகர முதல எழுத்தெல்லாம் அண்ணு
மலேமுதற் றேபல் கலே."

இங்கே போட்டி மனப்பான்மையைக் காண்ப தாகாது. தாம் பொதுச்சொத்துக்குரியவர் கள் என்பதனை உணர்ந்து மாணவர்கள் உலகத்திற்கு உதவும் வகையில் தலேசிறந்து விளங்கிச் சுந்தரர்போல "அடியார்க்கு அடியேன்" என்று தொண்டில் முந்தவருவதுதான் இங்கே குறிக்கோள். "பாரினில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்—பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பாரதி பாடுவதும் இந்தக் குறிக்கோளேத்தான்.

இவ்வாறு முந்துற முந்திப் பொதுச்சொத்தைப் பாதுகாத்து வளர்க்கும் பல்கலேக்கழகம் நான் முன்கூறியதற்கேற்ப எல்லா மொழிகளேயும் கற்கும் வாய்ப்புள்ள பல்கலேக்கழகமாக எதிர்காலத்தில் கண்ணெதிரே காணக் கனக் கண்டேன்; கனக் காண்கிறேன். இந்திப் பூசல், ஆங்கிலப் போராட்டம்,கிழக்கு –மேற்கு மோதல், மொழிச்சிக்கல்—இவற்றையெல்லாம் கடந்த நிலேயில் எழுகின்ற கனவு இது. ஆதிக்கம் செலுத்த மொழியைக் கற்பிப்பது வேறு. இன்று இந்தியாளர் சிலர் முயல்வது இது. சுரண்டல் கொள்கைக்காகவும், அடிமைகளே உருவாக்கவும் மொழியைக் கற்பிப்பது வேறு. முன் ஆங்கிலேயர் முயன்றது இது. இவ்வாறெல்லாம் அன்றி அன்பை வளர்த்து, அமைதியைப் பெருக்க முயல்வதனேயே இங்கு வற்புறுத்துகின்ருேம். இன்று ஆங்கிலம் கற்பது நமது அறிவுக்கே ஆகும். எனவே மொழிச்சிக்கலே யெல்லாம் தீர்த்துவைக்கின்ற கனவாகவும் இது மாறலாம். "மொழிகளே எளிதில் எவ்வாறு கற்பது?" என்ற விளக்கம் உலகனேத்திற்கும் இங்கே தோன்றலாம். மொழிகளின் பகைமை வளராதபடி அன்பும், ஆர்வமும் அவற்றிற்குத் தகுந்த ஈடுபாடும் எழக்கூடிய சூழ்நிலே இங்கே உருவாகலாம். இதன் பயனுக ஒருவர் இருவர் தமக்குப் பிடித்தமான பிற மொழியைத் தமிழோடு முழு விருப்போடும் கற்றுத் தேறலாம். அம்மொழியில் தமிழ் நூல்களின் கருத்துக்களேப் பரப்பலாம். அப்பிற மொழிக் கருத்துக்களேத் தமிழ் உருவில் தமிழ்நாட்டில் உலாப்புறம் போகச் செய்யலாம். இது வானத்தைக்கீறி வைகுந்தம் காட்டும் முயற்சி என எண்ணிவிட வேண்டாம். கூரை ஏறிக் கோழி பிடிக்கும் முயற்சியும் ஆகும் இது. தமிழில் பிறமொழி கற்ற தமிழர் பிறநாடுகளில் நம் நாட்டுத் தூதர்களாகச் சென்று செல்வமும் சீரும் பெற்றுச் சிறக்கலாம்.

பிற நாட்டு மொழிகளே எண்ணுவதற்கு முன் நம் நாட்டு மொழிகளேப் பற்றி எண்ண வேண்டாமா? அவ்வாறு எண்ணும்படி செய்தார் திரு. உமாயூன் கபீர் அவர்கள். நான் கனவுகண்ட சில மாதங்களுக்குள் எங்கள் பல்கலேக்கழகப் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவாற்ற வந்தார் இவர். அண்ணுமலேக் கருகில் உள்ள புதுச்சேரியில் வாழ்ந்த மரிய தாஸ் பிள்ளே என்பவரை அறிமுகம் செய்து வைத்தார். 18-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் அவர். மகஸ்தனீஸ் தன் காலத்தில் வாழ்ந்த இந்திய அரசனே சந்திரகொத்தாரஸ் என்று எழுதியுள்ளது அசோகனின் பாட்டனை சந்திரகுப்தனேத்தான் என்று முதன்முதல் கூறியவர் மரியதாசுப் பிள்ளேதான் என்று சுட்டிக் காட்டினர். மேனுட்டு மொழிகளேக் கற்றிருந்த பிள்ளேயவர்கள் வடமொழியோடு அம்மொழிகளுக்குள்ள ஒற்றுமையையும் எடுத்துக் காட்டினர். இவ்வாறு மேற்கையும், கீழ்நாட்டையும் ஒன்றுபடுத்திக் காட்டிய பிள்ளேயவர்களின் நினேவு நம் மனத்தில் நிலேயாக வாழவேண்டும் என்று விரும்பினர் கபீர் அவர்கள்; அவர் பேரால் ஒரு பரிசுத் திட்டத்தைப் பல்கலேக் கழகத்தில் நிறுவினர். இந்தியல்லாத பிற வடநாட்டுமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கவும், தமிழிலிருந்து அம்மொழிகளில் மொழிபெயர்க்கவும் பல்கலே மாணவர்கள் முந்தவேண்டும் என்பதே இங்குள்ள குறிக்கோள். அத்தகைய முயற்சியில் ஒவ்வோர் ஆண்டில் வெற்றிபெறும் மாணவருக்கும் பரிசில் தருவதாக இந்தத் திட்டம் உருப்பெற்று வருகிறது.

ஆனல் பிறமொழிகளேக் கற்க வாய்ப்பில்லாதபோது இந்தத் திட்டம் எவ்வாறு நிறைவேறும்? முதலில் வங்காள மொழியை மாணவர்கள் கற்பதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. கவிஞர் தாகூரின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடும்போது இந்த எண்ணம் எழுவது இயல்பேயாம். வங்காள மேல்சபையின் தலேவர் திரு. சுநீதி குமார் சாட்டர்ஜி அவர்களிடம் இதனேப் பற்றிப் பேசினேன். அவர்கள் உடனே காலஞ்சென்ற ராய் அவர்களிடம் இதனேக் குறிப்பிட்டனர். அப்

பெரியார் இதன் இன்றியமையாமையை உணர்ந்து, உடனே ஒரு வழி செய்தார். பல்கலைக்கழகம் கேளாத முன்பே அவர் முன் வந்ததுதான் இங்குள்ள சிறப்பு. வங்காள ஆசிரியப் பதவியை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் வங்காளத் துரைத்தனம் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் கொடுத்துவரும் என்ற அறிக்கையை வெளியிட்டருளினர். வங்காளிகள் இதில் ஈடுபடுகிறார்கள் என்பதுமட்டும் போதுமா? தமிழ் நாடும் இதில் ஈடுபடுகின்றது என்று காட்ட வேண்டுமல்லவா! அண்ணுமலைப் பல்கலைக் கழகம் இதற்கென எவ்வளவு செலவு செய்ய முயல்கின்றதோ அவ்வளவுக்கும் ஒத்த தொகையை, ஐயாயிரத்திற்கு மேற்படாமல், வங்காளத் துரைத்தனம் தருமென்று அந்த அறிக்கை உறுதிகூறியது. நம் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் செல்வத்தில் திளைப்பன அல்ல; வள்ளல்களையோ, துரைத்தனத்தையோ எதிர்பார்த்தே நிற்கின்றன. இந்த நிலையில் சென்னைத் துரைத்தனம் தன் பங்காக நாலாயிரம் ரூபாயை ஆண்டுக்கொரு முறை இதற்கெனத் தருவதாக ஒப்புக்கொண்டது. பல்கலைக்கழகம் மிகுதி நிற்கும் ஆயிரத்தைச் செலவு செய்ய உறுதிகொண்டுள்ளது.

இந்த முயற்சியெல்லாம் இந்திய மொழிகளை மாணவர்கள் கற்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதில் முடியும்; இந்த முயற்சியில்கூட நாம் முழுதும் முயல்கிறோம் என்பதற்கில்லை. அயல் மொழி என நம் நாட்டு மொழிகளையும் ஒதுக்கித் தள்ளும் மனப்பான்மை அவ்வாறு வேரூன்றிக் கிடக்கின்றது. அந்த நச்சுவேரை வெட்டி எறிய முயன்றவரில் காலஞ் சென்ற வங்காள முதலமைச்சர் ராய் அவர்களைக் குறிப்பிட வேண்டும். குஜராத்தும், மகாராட்டிரமும் ஒன்ருக இருந்தபோது திரு. சாவன் அவர்கள் சிறந்ததொரு வழிகாட்டினர். தம் நாட்டுக்கு வெளியே இந்தியாவில் எந்தப் பல்கலைக்கழகமேனும் குஜராத்தியையோ, மராத்தியையோ புதிதாகக் கற்பிக்கத் திட்டமிட்டால் அதற்காகும் செலவில் சரிபாதியைத் தம் துரைத்தனம் தருமென உறுதிகூறினர். தமிழகத் துரைத்தனமும் இவ்வாறு கூறி உஸ்மானியப் பல்கலைக் கழகத்திற்கும், கேரளப் பல்கலைக்கழகத்திற்கும் உதவியது; அதனேடு அலகாபாத், காசி முதலிய வடநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழைக் கற்பிப்பதற்கும் தானகவே வேண்டிய பணத்தைத் தந்துதவியது. இந்த இடங்களில் தமிழரல்லாதார் தமிழ் கற்க வேண்டுமென்பதே குறிக்கோள். அங்கு வாழ்கின்ற தமிழர் தமிழ் கற்பதற்கும் இது வாய்ப்பாக அமையலாம். ஆனல் அதனையே குறிக்கோளாகக் கொள்ளுதல் கூடாது. தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மாணவர்களை இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு அழைப்பது பணத்தை வீணுக்குவதாக முடியும். தமிழ்ப் படையெடுப்பு என்று பிறர் பேச இடந்தரும்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் இவ்வாறு பிற இந்திய நாடுகளும் தத்தம் மொழியைக் கற்பிப்பதற்கு வேண்டிய திட்டங்களை அந்தந்தத் துரைத்தனங்கள் ஏற்படுத்தும் காலம் வரலாம். மொழிச்சிக்கலைப் பற்றி ஆராய்ந்த குழு இந்திய மொழிகளையெல்லாம் ஆராய்ந்து கற்க ஒரு பொதுநிலையம் அமைத்தல் வேண்டுமென வற்புறுத்தியுள்ளது. இந்தி பேசாத இடத்தில் அஃது அமையவேண்டும் என்றும் உறுதிகூறியுள்ளது. ஐதராபாத்தே இதற்குத் தக்க இடமென அக்குழுவினர் குறித்துள்ளனர். பல சிக்கல்களுக்கு இடமளிக்கும் நகரச் சூழ்நிலையில் இருப்பதை விடப் பழைய குருகுலம்போல் நாட்டுப்புறச் சூழ்நிலையில் இத்தகைய நிலையம் எழுந்தோங்குவதே சிறப்பாகும். முன்னரேயே போராட்டத்தை விளைத்துள்ள இந்தச் சிக்கல் அன்புநெறியில் தீர்வதற்கு அமைதி ததும்பும் சூழ்நிலை வேண்டும். இந்தியல்லாத பிறமொழிகளை வளர்ப்பதற்குத் தமிழ் நாடு முன்னரே பண்பட்டுள்ளது. மராட்டியர், மார்வாரிகள், கன்னடிகர், தெலுங்கர், மலையாளிகள், குஜராத்தியர் என்ற இவர்களெல்லாம் தமிழ் நாட்டில் பல ஆண்டுகளாகத் தமிழகக் குடிகளாக வாழ்ந்து வருகின்றர்கள் என்பதை இங்கே மனத்திற் கொள்ள வேண்டும். இத்தகைய நிலையம் மொழியியல் ஆராய்ச்சி நடைபெறும் பல்கலைக்கழகத்தோடு இணைந்திருப்பது இன்றியமையாததாகும்.

இத்தகைய நிலையம் ஒன்றைப் பிற நாட்டினரும் விரும்புகின்றர்கள். அத்தகைய நிலயத்தைப் பூனவில் நிலைநாட்ட அமெரிக்கர்கள் முன்வந்துள்ளார்கள். நம்முடைய

கடமையை நாமறியாததற்காக நமக்கு ஒரு சூடு கொடுப்பதுபோல் உள்ளது அவர்கள் முயற்சி. நம் நாட்டில் எங்கும் இவ்வாறு மொழிக்கோயில்களை ஏற்படுத்துவதோடு ஒரு பெரிய கோயிலையும் அமைப்பதெனப் பேச்சளவிலும் நம்மில் பலர் பேசாதிருக்கும் போது, இதன் சிறப்பினை அறிந்து அமெரிக்கர்கள் இந்தத் தொண்டைச் செய்ய முந்துவதனை யார்தான் வரவேற்காமல் இருப்பார்கள்? ஆனால் அவர்கள் நோக்கம் வேறு. அமெரிக்கர்கள் நம் மொழிகளை அறிவதற்கும், நம் கலை, வரலாறு முதலியவற்றை உணர்வதற்கும் ஒரு நிலையம் அமைக்கின்றார்கள். அந்த முறையில் அவர்கள் கையாளும் முறை நாம் கையாளும் முறையினும் வேறாகவே நிற்குமென்று கூறவும் வேண்டுமா? அவர்கள் மொழியோடும், அவர்கள் பண்பாட்டோடும் ஒப்பிட்டுக் கற்பதே அவர்களுக்குச் சிறந்த வழியாகும். அவ்வாறே நாமும் நம் மொழியோடும், நம் பண்பாட்டோடும் ஒப்பிட்டுக் கற்பதன்றோ நமக்குச் சிறந்த வழி! எனவே மொழிக்கோயில் நமக்கென ஒன்றும் வேண்டும். அதனால் அக்கோயில் அமெரிக்க நிலையத்தோடு ஒத்துழைக்கலாம். அதனால் சிறந்த பயனும் விளையலாம்.

நம்முடைய மொழிக்கோயில் உலக மொழிகள் அனைத்தையும் கற்பதற்கேற்ற வாய்ப்போடும், சூழ்நிலையோடும் விளங்கவேண்டும். இதுதான் என்னுடைய கனவு. சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழிலக்கியத் துறையைத் தொடங்க நான் சென்றிருந்தபோது, இந்தக் கனவை அவர்களிடம் கூறினேன். என்னை வழியனுப்பும்போது அங்கு செயற்பட்டு வரும் தென்னாசியத் திட்டத்தின் நெறியாளர் திரு. மில்டன் சிங்கர் அவர்கள், "அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சிகாகோ பல்கலைக்கழகமும் ஒத்துழைப்பதால் இது கனவாக நில்லாமல் நனவாக முடியுங் காலம் தொடங்கிவிட்டது எனலாம்" என்று உறுதிமொழி கூறினார். மலேயாப் பல்கலைக்கழகத்தில் நான் பேசியபோது, இந்தக் கனவைப் பற்றி அங்கும் கூறினேன். மலேயா மொழியைத் தமிழகத்தில் கற்பிப்பதற்கு மலேயா துரைத்தனம் உதவிசெய்ய வரலாமென மலேயா அமைச்சர் திரு. சம்பந்தம் அவர்கள் கூறினார்கள்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன், சாந்துணையும் கல்லாத வாறு" என்ற பாடலை இத்தகைய மொழிக்கோயிலில் நின்றுதான் வள்ளுவர் பாடினார் போலும்! ஆனால் இத்தகைய கோயில் எழுமென நம்ப முடியுமா என்று கேட்போர் நம்மிடத்தே நம்பிக்கை இல்லாதவர்களேயாம். வள்ளுவர் கூறிய ஒன்றைத் தமிழர்கள் இன்று மனத்திற் கொள்ள வேண்டும்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்." [எண்ணியர்

தமிழ் எழுத்தாளர்கட்கு

✡

எங்கள்

நல்வாழ்த்துக்கள்

✡

ஸ்டார் பிரசுரம்

66, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி :: சென்னை-5.

சோவியத்து நாட்டிற் கல்வி

[டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.ஏ.,எம்.எல்.சி.]

சோவியத்து நாட்டிற் கல்விக்குப் பெரிய மதிப்பு அளிக்கப்படுகிறது. இருபது ஆண்டுகளுக்குமுன் அத்தேசத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து பேரே எழுதப் படிக்க அறிந்தவராய் இருந்தனர். இப்பொழுதோ இந்நாட்டில் எழுத்தறியாமை என்பது அறவே நீங்கி விட்டது. அரசாங்கம் மக்களுடைய பல திறக் கல்வியில் மிக்க கவனம் செலுத்துகிறது. உயர்தரப் பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படும் சாதாரணக் கல்வி அல்லாமலும், தொழில்துறைக் கல்வியை அளிக்கக்கூடிய வசதிகள் நிரம்பிய புதுவகைப் பள்ளிக்கூடங்கள் பற்பல அமைக்கப்பட்டு, அவை வாயிலாக மாந்தர் அனைவரும் பலதிறக் கல்வி பெறுதற்கு வாய்ப்புக்கள் வகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. புதுவகை உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் கணக்கு, வேதிநூல், உயிர்நூல், வரலாறு, இலக்கியம் ஆகியவை கற்பிக்கப்படுவதோடன்றி, ஓரளவு பொறியியல் அறிவும் அளிக்கப்படுகின்றது. சோவியத்து உருசியாவில் ஏறத்தாழ எட்டு இலட்சம் பொறியியல் வல்லுநர்கள் உள்ளார்கள். இன்னொரு சிறப்பு என்னவென்றால், அந்நாட்டிலுள்ள இருபது கோடி மக்களில் ஏறத்தாழ ஐந்து கோடி மக்கள் ஏதாவதொரு வகைக் கல்வியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர் என்பது. மற்றொரு சிறப்பு தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே கற்பதற்கு வசதிகள் பெற்றிருக்கிறார்கள் என்பது. நாடோறும் பகலில் அவர்கள் வேலை பார்த்தபிற்பாடு பள்ளிக்கூடத்திற்குப் போய் இரவில் மேற்படிப்பு பெற்றுத் தேர்வுகள் எழுதிச் சான்றிதழ்களும் பட்டங்களும் பெறுதற்கு வசதிகள் செய்துதரப்பட்டுள. இவ்வாறு, படிக்க விரும்புபவர்கள் தொழிற்சாலைகளிற் பகல்நேர வேலைசெய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இத்தகைய தொழிலாளர்கள் அவர்களுக்கு இயல்பில் கிடைக்கக்கூடிய விடுமுறை நாட்களைவிட அதிகமான விடுமுறை நாட்கள் தேர்விற்கெனக் கற்பதற்கும், தேர்வு எழுதுதற்கும் பெறுகிறார்கள்.

முப்பது ஆண்டுகளுக்குமுன் உருசிய தேசத்தில் மொத்தத்தில் இருபத்தொரு நகரங்களில்தான் கல்லூரிகளோ பல்கலைக்கழகங்களோ இருந்தன. ஆனால், இப்பொழுதோ ஏறத்தாழ இருநூற்றிருபது இடங்களிற் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் உள. அவைதம்முள் நாற்பது உயர்தரக் கல்வி நிலையங்கள்—பல்கலைக்கழகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலெனின் குன்றில் அமைக்கப்பட்டுள்ள மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் பதினையாயிரம் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆசிரியர்கள் உள்ளார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் ஆறாயிரம் பேர் ஓரே இடத்தில் தங்குதற்கு அழகான பெரியதொரு முப்பத்திரண்டு அடுக்கு மாளிகை விடுதி கட்டப்பட்டுள்ளது. அதனுள் ஒவ்வொரு மாணவருக்கும் வசதியானதோர் அறை தரப்பட்டுள்ளது. அறையின் மருங்கு ஒவ்வொரு மாணவருக்கும் தனித் தனியே குளியலறையும் முகங்கழுவிடமும் அமைந்திருப்பதால், நம் நாட்டு மாணவர்கள் குளிப்பதற்காக நெடுநேரம் காத்திருப்பது போன்ற நிலையில் அவர்கள் இல்லாததால், அந்நேரத்தையும் அவர்கள் படிப்பிற்குப் பயன்படுத்துகிறார்கள். ஆசிரியர்கள் வாழும் இடங்களாக மிக்க வசதியோடு இருநூற்றுக்கு மேற்பட்ட தட்டுகள் பல்கலைக்கழக எல்லையுள் அமைந்துள்ளன. இலெனின்கிராட் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழப் பத்தாயிரம் மாணவர்கள் சேர்கிறார்கள். கீய்வு (KIEV) பல்கலைக்கழகத்தில் ஏறத்தாழ ஆறாயிரம் மாணவர்கள் சேர்கிறார்கள். குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், மாணவர்களிற் பெரும்பாலோர் தொழிற்சாலையர் குடும்பங்களிலிருந்தும், குடியானவர்கள் குடும்பங்களிலிருந்தும் வருபவர்கள் என்பது. அவர்களெல்லாம் காசின்றிக் கல்வி பெறுகிறார்கள். அன்றியும், நூற்றுவரில் எண்பது பேர் அரசாங்கப் பணவுதவி வேறு பெறுகிறார்கள்.

அஸ்பெக்கிஸ்தான் (UZBEKISTAN), கசாக்ஸ்தான் (KAZAKHSTAN), டாஜிகிஸ்தான் (TAJIKISTAN) போன்ற தேசிய குடியரசுப் பகுதிகளில் உயர்தரக் கல்வியும் பல்கலைக் கழகக் கல்வியும் தாய்மொழியில் அல்லது உருசியன் மொழியில் அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் கிர்கீஷியா (KIRGHIZIA) பகுதியைச் சார்ந்த மக்கள் எழுத்துவளமுடைய மொழியைப் பெற்றிருந்தாரில்லை. ஆனால், நல்ல முயற்சியின் பயனாய் இப்பொழுது கிர்கீஷிய மக்கள் எழுத்துவடிவுள்ள மொழியைப் பெற்றிருப்பது மாத்திரமல்லாமல், ஒரு பல்கலைக்கழகமே பெற்றுள்ளார்கள் என்பது மிகவும் வியக்கத்தக்கது. அங்கே பல்கலைக்கழகம் ஒன்றும், மகளிருக்கு எனத் தனிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றும், ஆசிரியர் பொதுப் பயிற்சிக் கல்லூரிகள் ஐந்தும், முப்பது தொழில்துறை உயர்தரப் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டுள்ளன என்பது பாராட்டத்தக்கது. அதனால், மக்களும் அரசாங்கமும் மனம் வைத்தால் வளம்படாத மொழியைக்கூட எவ்வளவு வளம்படுத்திவிட முடியுமென்பது தெரியவரும். அவ்வாறு இருப்பவும், நல்ல வளமுடைய மொழியாக, செம்மைசால் மொழியாகப் பண்டுதொட்டே அமைந்து இன்றளவும் வாழ்ந்து வளர்ந்து பயன்பட்டு வருகின்ற தமிழ் மொழியை மேலும் வளம்படுத்த மக்களும் அரசாங்கத்தாரும் முன்வருவார்களேயானால், உலகத்திலுள்ள பெருவளர்ச்சியுற்ற மொழிகள் என்று மதிக்கப்படும் மொழிகளில் வைத்து எண்ணக்கூடிய பெருமை தமிழ்மொழிக்குக் கட்டாயம் கிட்டும் என்பது தெளிவுறும்.

எங்கள் சிறந்த வெளியீடுகள்

❋

கனரகத் தொழில் அமைச்சர்
சி. சுப்பிரமணியம்

தமிழால் முடியும்	4	00
வளரும் சக்தி	3	00
சாதனைக்குரிய சிந்தனைகள்	2	50
தேசிய ஒருமைப்பாடு	1	50

நா. பார்த்தசாரதி

மணி பல்லவம்	15	00
குறிஞ்சி மலர்	10	00
வெற்றி முழக்கம்	7	50
பட்டுப் பூச்சி	3	00

கோவி. மணிசேகரன்

பொற்காலப் பூம்பாவை	7	50
செர்பியன் செல்வி	7	50
பொன் வேய்ந்த பெருமாள்	5	00
நீலமல்லிகை	6	00

ரா. கி. ரங்கராஜன்

முதல் மொட்டு	4	00
ஊஞ்சல்	2	00

வே. கபிலன்

பாண்டியன் திருமேனி	5	00

❋

வள்ளுவர் பண்ணை

131, பிராட்வே :: சென்னை-1.

மாசு ஒன்று உள்ளது

[டாக்டர் மு. வரதராசனார்]

கருத்துத் தெளிவும் கற்பனைத் திறனும்··
பொருந்திய சிறப்பின் அருந்தமிழ்ப் புலவீர் !
நும்மருந் தொண்டுகள் நுந்தா தொளிர்க !
சிலசொல் உரைப்பன் சினவீர் கேண்மின் ;

முன்னாள்,
வேந்தனர் வாழ்ந்தனர் தீந்தமிழ் கேட்டனர்
ஈந்தனர் பரிசில் ஓம்பினர் புலவரை ;
வேளிர் வண்மைப் பெரும்புகழ் ஈகையர்
நாளும் போற்றி நலிவறக் காத்தனர் ;

இந்நாள்,
வேந்தரும் இலரால் வேளிரும் இலரால்
சான்றோர் அவர்தாம் மீண்டும் பிறவார் ;
கால மாறுதல் கடக்கவொண் ணாதே
புரவலர் இல்லாப் புவியிது காணீர் ;
தேர்வுகள் எழுதியும் தேர்ச்சிகள் பெற்றும்
தொழில்பெறும் வழிகள் தோன்றா தலையும்
இளந்தமிழ்ப் புலவர் உளரால் மிகப்பலர் ;
ஆக்கும் நூல்களை அச்சிடல் இயலார்
ஏக்கமுற் றிரங்கும் ஏழ்மையர் பலரால் ;
சொல்லும் கருத்தினைச் சிந்தையிற் கொள்வோர்
இல்லையென் றலமரும் இன்னலர் பலரால் ;

ஆதலின்,
தமிழைக் கற்றது தவக்குறை எனவும்
வழியறி யாமல் வாடினம் எனவும்
தொழிலியல் துறந்து தொலைந்தனம் எனவும்
அறிவியல் இன்றி மறிந்தனம் எனவும்
பற்பல நினைந்து பலவா றுழந்து
தம்மையும் நொந்து தமிழையும் நோவர் ;
அவர்தம் இடுக்கண் அகற்றிட முனைவீர்
இந்நிலை மாற்ற ஏற்றது செய்ம்மின் ;
தாய்மொழி பேசல் தாழ்வெனுஞ் சூழ்நிலை
தமிழினில் எழுதல் தகவிலை எனுநிலை
தமிழ்மொழி கற்றல் தவிர்க எனுநிலை

எல்லாம் அகன்றன எனினும் சிலகுறை
இன்னும் அகலா திந்நாட் டுள்ளன ;
அருந்தமிழ் மொழியை அன்னையாக் கொண்டும்
கற்றோர் என்பவர் கற்கும் நாளிதழ்
ஆங்கிலத் தாளா அமைதல் காணீர் ;
பிறமொழி வாயிலாப் புகட்டும் கல்வியே
சிறந்ததென் றுன்னும் சிந்தையர் பெற்றோ
தம்மரு மக்களைத் தமிழ்வாயி லாகப்
பயிற்று தடக்கும் பான்மையை உணர்மின் ;
தாய்மொழி திகழும் நிலையம் தம்மினும்
பிறமொழி மிளிரும் பெற்றிய யாவும்
பொருளும் வளமும் பெருஞ்செல் வாக்கும்
உயர்ந்து வளர்ந்தே ஓங்குதல் காணீர் ;
தனியுயர் பழமைத் தமிழ்ப்பெரு மக்களின்
மனநிலை தனிலே மாசொன் றுள்ளது ;
தாய்மொழி போற்றுத் தாழ்மனப் பான்மை
மாயா துள்ள மாசது துடைக்க
ஒல்லும் வகையால் ஓர்ந்தே
நல்லது புரிமின் நலமுற நாடே.

மூன்று மலையாள நாவல்கள்

செம்மீன் ரூ. 5 00

தகழி சிவசங்கர பிள்ளை

சாகித்திய அகாடமியின் ரூ. 5,000 பரிசு பெற்ற இந்நூல், ரஷ்யன், செக், ஆங்கிலம் முதலிய பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, உலகின் பல பாகங்களிலும் பிரபலமடைந்துள்ளது. செம்படவர்களின் காதல் - வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை இது போல் வேறெந்நூலும் விளக்கவில்லை என்பது அறிஞர்களின் கருத்து.

இரண்டு படி ரூ. 2 50

தகழி சிவசங்கர பிள்ளை

குடியானவர்களின் வாழ்க்கையைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் இந்த நாவல், இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஐயப்பன் ரூ. 4 00

டாக்டர் எஸ். கே. நாயர்

சபரிமலை ஐயப்பன் பாண்டிய மன்னர்களோடு தொடர்பு கொண்டவர் என்பதை விளக்கும் மிகச் சிறந்த சரித்திர நவீனம் இது.

பாரி நிலையம்

59, பிராட்வே : : சென்னை-1

நாவல் இலக்கியம்

[நா. பார்த்தசாரதி]

நன்னூல் இலக்கணத்தைப்போல நாவல் இப்படித்தான் பிறக்கவேண்டும் என்று யாரும் நாவலுக்கு இலக்கணம் எழுதிவைக்க வில்லை. அப்படி யாராவது இலக்கணம் எழுதிவைத்திருந்தாலும் அந்த இலக்கணத்தையும் மீறி நிறைவான அழகுகளோடு நாவல் இலக்கியம் மேலும்மேலும் புதுமையாக வளரத் தடையில்லை. 'அழகுக்கு இலக்கணம் என்ன?'—என்றால்—அந்த இலக்கணத்தை யாராவது எல்லை வகுத்துச் சொல்லிவிட முடியுமா? எல்லை வகுத்துச் சொல்லிவிடுகிற கட்டுப்பாட்டுத் தன்மை நாவலுக்கோ, நாவலைப்போல அழகுடைய படைப்புக்கோ பொருந்திவருமா என்பதும் ஆராயத்தக்கது. அழகுடைய பொருளுக்கு இலக்கணம் அழகாயிருத்தல் என்பது தானே தவிர 'இப்படி மட்டுமே அழகாயிருத்தல்' என்பதன்று. 'இலக்கியத்துக்காகத்தான் இலக்கணம்'—என்பது பழைய நூல்களே ஒப்ப முடிந்த உண்மை. இலக்கிய அநுபவத்திலிருந்துதான் இலக்கணம் பிறந்தது. அநுபவத்துக்கும், பழக்கத்துக்கும் வராமலிருக்கப்போகிற பொருளுக்கு இலக்கணம் சொல்லியும் பயனில்லை. 'கற்பனையும் வர்ணனையும் காட்டிக் கதை வளர்க்கும் விற்பனர்தம் செய்கைக்கு, முடிந்த முடிவாக வரையறை என்று ஏதேனும் ஏற்படுத்திவிட முடியுமா?நாளுக்கு நாள் வளரும் தமிழில் நேற்றுவரை பிறந்த நாவல்கள் ஒரு விதத்தில் அழகாக இருந்தன. இன்று பிறக்கும் நாவல்களும் புதுப்புது அழகுகளைத் தருகின்றன. இனிமேல் நாளைக்குத் தோன்றுவதற்கு இருக்கும் நாவல்களில் இன்னும் புதிய புதிய அழகுகள் இருக்கலாம். பூகோளப் புத்தகத்தின் மூலமாக அட்சரேகை, தீர்க்க ரேகைகளோடு இணைத்துச் சூரியனைப் பார்த்தால் அதில் புதுமையும், கற்பனையும் இல்லைதான். ஆனால் கவிகளின் சிந்தனை அநுபவத்தில் சூரியனைப் பற்றி வித விதமான கற்பனைகளையும், தற்குறிப்பேற்றங்களையும், பிற அலங்காரங்களையும் பார்த்தால் அப்படியே மலைத்துப்போகிறோம். எத்தனை எத்தனை அழகிய கோணங்களில் **புனைந்து புனைந்து கூறியிருக்கிறார்கள் என்று** வியந்து நிற்கும்படி செய்துவிடுகிறார்கள், கவிகள். 'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து, விண்ணை வெளியாக்கி விந்தை செய்யும் சோதி'—நாள்தோறும் உதித்து நாள்தோறும் அத்தமித்தாலும் கவிதைக்குப் புதிது புதிதாய் அழகிய கற்பனைகளைத் தர வில்லையா? காவியங்களுக்கும், நாவல்களுக்கும், கதைகளுக்கும் பாத்திரங்களாக வாய்க்கும் கற்பனை மனிதர்களும், மனித குணங்களும்கூட அப்படிப்பட்டவைதாம். 'டிராய் நகரம்' அழிந்தால் என்ன? இலங்கை நகரம் அழிந்தால் என்ன? ஹெலன் துன்பப்பட்டால் என்ன? சீதை துன்பப்பட்டால் என்ன? டால்ஸ்டாயின் 'அன்னா கரீனினா' ஆனால் என்ன? இந்திய நாட்டுச் சரத்சந்திரரின் 'அசலா' ஆனால் என்ன? ஒரே விதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ள இந்தக் கதாபாத்திரங்கள் வேறுவேறு ஆசிரியர்களின் வேறுவேறு கற்பனைகளில் மலர்ந்தவர்கள்தாம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு கதாபாத்திரமும் அழகாகவும், உயிருணர்வு தரும்பவும் தான் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. உலகில் மனித குணங்கள் என்பனவற்றின் பட்டியலை நேற்றோடு எவரும் ஐந்தொகை போட்டு முடித்துவிடவில்லை. யாரோ ஐந்தொகை போட்டு 'ரெடிமேடாய்' வைத்து விட்டதாக நினைத்து மலைப்பதுதான் வீண் பிரமை. நாவல் இலக்கியம் இருபதாம் நூற்றாண்டின் உரைநடைக் காவியம். கதைகளைக் காவியங்களில்தான் புனையவேண்டுமென்ற அவகாசமும், அவசியமும் இல்லாத நூற்றாண்டில் நாம் வாழ்கிறோம். ஆகவே உரைநடையில் மலர்வதோடு காவியத் தகுதி உடையதாகவும் நாவல்களை உருவாக்க விரும்புகிறோம். நாவல் இரசிகர்கள் எல்லாரும் காவிய இரசிகர்களுக்குரிய தகுதி பெற்றவர்களாகவும், நாவல்

ஆசிரியர்கள் எல்லாரும் காவிய ஆசிரியர்களின் தகுதி பெற்றவர்களாகவும் இருக்கிறார்களா என்று ஆராயப் புகுவது வேறு பிரச்சினை. ஒரு நாவலைப் பிறப்பிக்கிறவன் அந்த நாவலைப் பொறுத்தமட்டில் அதில் வருகிற உலகத்தை நாவலில் வரும் கதாபாத்திரங்களின் கண்களால்தான் காணவேண்டும். அப்படிக் காண்பதுதான் சாத்தியமுமாகும்.

"என் கண்ணை மறந்து உன் இரு கண்களையே
என் னகத்தில் இசைத்துக் கொண்டு
நின் கண்ணாற் புவியெல்லாம் நீ எனவே
நான் கண்டு நிறைவு கொண்டு"—என்று

கவியரசர் பாரதியார் ஓர் இடத்தில் பாடியிருப்பது போலத்தான் நாவலின் கதாபாத்திரங்களைப் பொறுத்தவரை கதாசிரியன் அவர்கள் கண்களால் உலகத்தைப் பார்க்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இனிமேல் நாவலின் கதை—எல்லையைப் பற்றிச் சில வார்த்தைகள். இந்த உலகில் என்றும் அழகுடைய பொருள்களுக்கு எல்லை சொல்லத் தோன்றவில்லை என்று கூறினேன். இராமாயணத்தை ஒரு வாக்கியத்திலும் சுருக்கிச் சொல்லலாம்; கம்பனைப்போலப் பல்லாயிரக் கணக்கான பாடல்களிலும் வளர்த்துப் பாடலாம். நாவலின் கதையைச் சுருக்கமாகச் சொல்லுவதும் விரிவாகச் சொல்லுவதும் இப்படித்தான். அழகாயிருப்பதன் இலக்கணம் சுருக்கமாயிருப்பதுதான் என்று முடிவு செய்வதோ, விரிவாயிருப்பதுதான் என்று முடிவு செய்வதோ தவறு. குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகி விடக்கூடாது. 'ஹெமிங்வே'யின் 'கடலும் கிழவனும்'—நாவலின் கதைச் சுருக்கத்தையும், தத்துவத்தையும் நான்கே நான்கு வாக்கியங்களில் கூறிவிட முடியும். ஆனாலும் ஹெமிங்வே அந்தச் சுருங்கிய தத்துவத்தை ஒரு விரிவான நாவலாக எழுதவில்லையா? நாவலின் கதை—எல்லையைச் சுருக்கமாக அமைத்துக்கொள்வதும், விரிவாக அமைத்துக்கொள்வதும் யாருடைய கட்டுப்பாட்டுக்கும் அடங்கிய ஒன்றன்று. நாவலைப் படைக்கிற ஆசிரியன் தன் சாமர்த்தியத்துக்கு ஏற்ப அதை விரிவாகவோ, சுருக்கமாகவோ அமைத்துக்கொள்ள உரிமையுண்டு. அந்த உரிமை கதாசிரியனுக்குச் சொந்தமானது. நாவலின் கதாபாத்திரங்களைப் பற்றிச் சில வார்த்தைகள். வாழ்க்கையை முற்றிலும் மறக்கச் செய்யும்படியான சொப்பனவஸ்தை இலக்கியத்தைப் படைப்பதில் இந்த நூற்றாண்டின் எழுத்தாளன் அக்கறையோ, சிரத்தையோ காண்பிக்கமாட்டான் என்பது நிச்சயம். உயிர்த் துடிப்புள்ள கதாபாத்திரங்கள் வேண்டும். சமுதாய வாழ்க்கையின் எல்லாவிதமான சுகங்களுக்கும் கற்பனைப் பிரதிநிதிகளாக வருகிற கதாபாத்திரங்கள் மட்டும் நமக்குத் தேவையில்லை. சமுதாய வாழ்க்கையின் சகலவிதமான கஷ்டநஷ்டங்களையும், சுகதுக்கங்களையும், அவலக் கவலைகளையும் பிரதிபலிக்கிற கற்பனைப் பிரதிநிதிகளும் நமக்கு வேண்டும். கதாசிரியன் ஒருதலைப்பட்சமான கற்பனைக்கே தன் மனத்தில் இடமளித்துத் தன்னையும், சமூகத்தையும் ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. எழுத்தாளன் சமூக நியதிகளுக்கும், சமுதாய நியாயங்களுக்கும் காவலனாக இருக்க வேண்டியவன். நாவலாசிரியன் ஏதாவது ஒரு கதையை வளர்த்துப் புனைவதோடு தன் இலக்கியப் பணிக்குத் திருப்தி தேடிக்கொண்டு விடுவதில் பயனில்லை. நியாயமான, நிலையான சமூக உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் சத்தியப் பணியையும் அவன் செய்ய வேண்டும். காவிய காலத்தில் கவிகளுக்கு இருந்த பெரும் பொறுப்பு இன்று இந்தச் சமுதாய யுகத்தில் கதாசிரியர்களுக்கு இருக்கிறதென்பதை நினைவுகூர வேண்டும்.

ஒரு வாரப்பத்திரிகையில் யாரோ ஒருவர் எழுதிய நாவல் ஒன்றைப் படித்தேன். என்ன படித்துக் கிழித்தேன் என்று கேட்கிறீர்களா? படித்ததும் எதைப் படித்தேனோ அதைக் கிழித்துவிட வேண்டுமென்று தோன்றியதென்னவோ உண்மைதான்! 'மாடிவீட்டுப் பையன் கோடிவீட்டு மரகதத்தைக் காதலித்தது' பற்றிய நாவல். ஒருவேளை கதை என்றாலே காதலைப் பற்றித்தான் எழுதியாக வேண்டுமென்று இன்றைய எழுத்தாளர்கள் தாங்களாகவே புரிந்து கொண்டிருக்கிறார்களோ என்று சந்தேகமாகி விட்டது எனக்கு. உச்சி வெயிலில், வெயில் தன் மண்டையைப் பிளந்துகொண்டிருக்கிற நேரத்தில் தான் நடுத்தெருவில் நின்று விறகைப் பிளந்து கொண்டிருக்கிறானே; அவன் இலக்கியத்தில் இடம் பெறுவதற்கு விதிவிலக்கு அல்லவே? இதோ! கலகலப்பான சாலையில் இத்தனை கார்களுக்கும் லாரி

களுக்கும் பயப்படாமல் குறுக்கே ஓடிவருகிறதே; இந்தக் குழந்தை—இது இலக்கியத்திற்கு விதிவிலக்கு அல்லவே! சமூகத்தில் நடைமுறையாக இல்லாத காதலைப் பற்றி அதுவே சமூகமெங்கும் நிரம்பிக்கிடப்பதைப் போல ஒரு பிரமை உண்டாகும்படி எழுதிக் கொண்டிருக்கிற இலக்கிய கர்த்தா எவனோ அவன் அதர்ம இலக்கியத்தைப் படைக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும். எல்லாத் தொழிலிலும் தார்மிக நிலை என்று ஒன்று இருப்பது போல் இலக்கியத் தொழிலிலும் தார்மிக நிலை ஒன்று உண்டு. சமூகத்தின் அவல நிலைகளை மறைத்துச் சொப்பனவஸ்துகளையே சித்திரித்து ஏமாற்றக்கூடாது. உலகத்தில் மாடிவீட்டுப் பையன்களும், கோடிவீட்டு மரகதங்களும் உண்டுதான். ஆனால் அவர்கள்மட்டுமே இலக்கிய கர்த்தாவின் தொழிலுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற அவசியமும், தவிர்க்கமுடியாத சூழ்நிலையும் என்ன வந்து விட்டது' தூக்க மருந்தைப் போலவோ, 'மார்பியா இன்ஜெக்ஷனைப்' போலவோ சோர்வை உண்டாக்கிக் கொண்டே தீரவேண்டிய அளவுக்கு எத்தனை காலம் தேவைக்கு மீறிய அதிக விழிப்போடு இருந்துவிட்டோம்?

உலகத்து மகாகவிகளில் காளிதாசனும், ஷேக்ஸ்பியரும்கூடத்தான் காதலைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இன்றைக்கு வாரப் பத்திரிகையின் பக்கங்களுக்கும், படங்களின் கவர்ச்சிக்கு ஏற்றாற்போல் வருவதற்குமாக நாவல் எழுதுகிற பாமர எழுத்தாளனுந்தான் காதலைப் பற்றி எழுதுகிறான். இவன் தன்னுடைய நாவலில் எழுதுகிற காதல் எதுவோ அது காவியங்களில் வருகிற உயர்ந்த தரத்துக் காதலாகவும் இல்லை; இன்றைய நடைமுறையில் பார்க்கிற உலகத்துக் காதலாகவும் இல்லை. ஏதோ ஓர் அசட்டு உணர்ச்சியை அப்படியும் முடியாமல் இப்படியும் முடியாமல் தவித்து எப்படியோ சொல்லி முடிக்கிறான் இந்த எழுத்தாளன். காதலைத் தவிரவும் வாழ்க்கையில் விதவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. அப்பன் மகனிடம் வைக்கிற காதல் (அன்பு), மகன் தாயிடம் வைக்கிற காதல் (பாசம்), அண்ணன் தம்பியிடம் வைக்கிற காதல் என்று வேறுவிதமான காதல்களும் உலகத்தில் இருக்கின்றன. அவற்றுக்கும் இலக்கியத்தில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டாமா? வழங்காமலிருப்பது தர்மமாகுமா என்று நான் பல முறை நினைத்து வேதனைப்பட்டிருக்கிறேன். இலக்கியத்திலும் அசட்டுக் காதலைப் பற்றி மட்டுமே எழுதிக்கொண்டிருப்பது குறைவுடையதே. சமூகத்தை முழுமையாக உணரவோ மதிக்கவோ பழகிக்கொள்ளாதவன் தான் இப்படி ஒன்றைப் பற்றியே எழுதிக் கொண்டிருக்க முடியும்! பழைய காவிய ஆசிரியர்கள் எல்லாரும் காதலின் மறுபுறமாய் வீரத்தை இணைத்து வாழ்க்கையின் எந்தப் பகுதியும் நலிந்துபோகாதபடி எழுதியிருக்கிறார்கள். இன்றோ வீரத்தைப் புறக்கணித்து விட்டு ஏதோ ஒருவிதமான அசட்டுக் காதலைப் பற்றி மட்டுமே எழுதவும் படிக்கவும் பழகிக் கொண்டிருக்கிறோம். வாழ்க்கையில் சமமாக விரவியிருக்கிற உணர்ச்சிகளிலே சிலவற்றைமட்டும் பெரிதுபடுத்திப் பலவற்றை மறைத்துவிடுகிற இலக்கிய கர்த்தாவை அதர்மம் செய்கிறவனைச் சொல்லிக் குற்றஞ்சாட்டத்தானே வேண்டும்? அப்படிப்பட்ட இலக்கியத்தைப் படைக்கிறவன் தன்னளவில் மட்டும் குற்றவாளி இல்லை; அவன் ஒரு சமுதாயக் குற்றவாளி. வருகிற தலைமுறையின் சிறந்த நாவலாசிரியர்கள் இப்படிப்பட்ட சமுதாயக் குற்றவாளிகளாகிக் கெட்ட பெயர் எடுக்க விரும்பமாட்டார்கள் என்று நம்புவோமாக!

இலங்கையின் சிறுகதையாசிரியர்கள்

[சிற்பி]

சிறுகதைகள் படிக்க வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை தமிழ் நாட்டு வாசகர்களிடம் இருப்பதைப்போல் ஈழநாட்டு வாசகர்களிடமும் நிறைய இருக்கின்றது. இன்றைய பத்திரிகைகள் எல்லாமே சிறுகதைகள் பலவற்றைத் தவருது வெளியிட்டு வருகின்றன. வாசகர்களைத் திருப்தி செய்வதற்காகப் பத்திரிகைகள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை, சில சிறந்த சிறுகதையாசிரியர்கள் தோன்றுவதற்கு வழிகோலி விட்டது; வழிகோலி வருகின்றது. சிறந்த சிறுகதையாசிரியர்கள் பலர் தமிழ் நாட்டில் இருக்கின்ருர்கள். இவர்களுடன் ஒன்ருக வைத்தெண்ணக் கூடிய சிலர் ஈழத்திலும் இருக்கின்ருர்கள். பலர் ஈடுபாட்டுடன் உழைத்துவரும் சிறுகதைத் துறை பற்றி ஒரு சிறு கட்டுரையில் கூறி முடிப்பது கஷ்டம் என்ருலும், இங்குள்ள சிறுகதை எழுத்தாளர்கள், சிறுகதைகள் பற்றி, இந்திய நண்பர்களுக்குச் சில குறிப்புகளைக் கூறலாம் என நினைக்கிறேன்.

இப்போதைய சிறுகதை உருவம் தமிழுக்குப் புதிது; இது மேல்நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டது—என்பதைப் பலரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆங்கிலம் படித்த இந்தியத் தமிழரான வ. வே. சு. ஐயர் அவர்கள் சிறுகதையைத் தமிழில் புகுத்தினுர். அவரைத் தொடர்ந்து வேறு பலரும் இத் துறையில் முழுமூச்சுடன் ஈடுபடலாஞர்கள். புதுமைப்பித்தன், கு. ப. ரா., பிச்சமூர்த்தி, பி. எஸ். ராமையா முதலானேர் சிறுகதைத் துறையில் பெருவெற்றி பெற்றவர்கள். இவர்களுடைய எழுத்தினுல் கவரப்பட்ட இலங்கையர்களான சி. வைத்தியலிங்கம், சிவபாத சுந்தரம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் சில தரமான சிறுகதைகளை எழுதினுர்கள். ஆகவே, சிறுகதை மேல் நாட்டிலிருந்து இந்தியா வழியாக இலங்கைக்கு வந்தது என்பது ஓரளவு பொருந்தும். ஈழகேசரி, கலைமகள், கிராம ஊழியன் முதலிய பத்திரிகைகளில் இவர்களுடைய கதைகள் வெளிவந்தன. சென்னை அல்லயன்ஸ் கம்பனியார் வெளியிட்ட "கதைக்கோவை"களிலும் இவர்களுடைய கதைகள் இடம்பெற்றன. தூய்மை இனிமை எளிமை கலந்த தமிழ் நடை, நாடு பிரதேச வேறுபாடின்றி எல்லா வாசகர்களாலும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதான காதல், குடும்ப வாழ்க்கை சம்பந்தமான கதைக்கரு—இவை இந்த எழுத்தாளர்கட்குரிய சிறப்பான அம்சங்கள். இவற்றுடன் ஈழத்துச் சரித்திர நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கதையாக்கி வெற்றி கண்டார் இலங்கையர்கோன். காலப்போக்கில், சிவபாத சுந்தரம் கட்டுரை, விமர்சனம் ஆகியவற்றிலும், இலங்கையர்கோன் வானெலி நாடகத்திலும் அதிகக் கவனம் செலுத்த, மற்ற இருவரும் தொடர்ந்து சிறுகதை யாசிரியர்களாகவே இருந்துவருகின்றனர்.

ஈழநாட்டில் சிறுகதை வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவிபுரிந்த பத்திரிகைகளுள் "ஈழகேசரி"யை முதலில் குறிப்பிட வேண்டும். இராஜ. அரியரத்தினம், கனக. செந்திநாதன், வ. அ. இராசரத்தினம், அ. ந கந்தசாமி முதலியோர் "ஈழகேசரி"யில் வளர்ந்தவர்கள். ஈழத்தின் சிறந்த உருவகக் கதைகளின் ஆசிரியரான சு. வே. எனப்படும் சு. வேலுப்பிள்ளை இப்போது சிறுகதைத் துறையிலும் தன் கவனத்தைச் செலுத்தி வருகின்ருர். இவரும் "ஈழகேசரி" எழுத்தாளரே.

இந்தியாவில் "மணிக்கொடி"க் குழு இருப்பதுபோல், ஈழத்தில் "மறுமலர்ச்சி"க் குழு இருக்கின்றது. இலக்கியத் தாகமும் எழுத்தார்வமும் நிறைந்த இளைஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட "மறுமலர்ச்சி" மாத இதழ் பல புதிய சிறுகதை எழுத்தாளர்களை உருவாக்கியது. வரதர், அ. செ. முருகானந்தன், சொக்கன், இராஜ நாயகன் முதலியோர் "மறுமலர்ச்சி"க் குழுவைச் சேர்ந்தவர்கள்.

இந்தியாவில் தி. மு. க. ஏற்படுத்திய கருத்துப் புரட்சி இலங்கையிலும் பரவியது. ஆரம்

பத்தில் தி. மு. க. தலைவர்களின் அடுக்கு மொழிகளாலும் ஆவேசப் பேச்சுக்களாலும் கவரப்பட்ட இளைஞர்கள் நாளடைவில் அந்தத் தலைவர்களின் போக்கிலேயே சிந்திக்கத் தொடங்கினர்; சாதிசமயப் பாகுபாடு, சிங்கள—தமிழ் வேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு—முதலியவற்றைப் பற்றி இங்குள்ள இளைஞர்கள் ஆழ்ந்து ஆராயத் தொடங்கினர்கள். இலங்கை அரசியலில் தமிழரின் நிலை கீழ்நிலையடையத் தொடங்கியது. இந்த நேரத்திலே தமிழர்களின் உரிமைக்குரலான ''சுதந்திரன்', ஒலிக்கத் தொடங்கியது. அதன் ஆசிரியரான எஸ். டி. சிவநாயகம் புதிய இளைஞர்கட்கு நிறைய சந்தர்ப்பம் கொடுத்தார். புதுமைலோலன், பித்தன், எஸ். பொன்னுத்துரை, புதுமைப்பிரியை, டானியேல், டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கன், இ. நாகராஜன், உதயணன், தளையசிங்கம், நவம் முதலியோர் ''சுதந்திரன்'' பண்ணையில் வளர்ந்தவர்கள். இவர்களுள் சிலரின் கதைகள் ஒருபக்கச் சார்புடையன; சிலரின் கதைகள் அப்பட்டமான பிரசாரத்திற்காக எழுதப்பட்டவை. என்றாலும், இன்றைய ஈழத்துச் சிறுகதை யாசிரியர்களுள் இவர்களுக்குச் சிறப்பான இடம் உண்டு.

அரசாங்க ஊழியர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டரை ஆண்டுகள்வரை நடாத்தப்பட்ட ''உதயம்'' மாத இதழ் சிறுகதை வளர்ச்சிக்குத் தன்னுலான சேவை செய்தது. புதிய எழுத்தாளர் எவரையும் ''உதயம்'' தோற்றுவிக்கவில்லை எனினும், ஏற்கனவே சிறுகதைத் துறையில் புகுந்துவிட்ட சில ஆசிரியர்களின் சிறந்த கதைகள் ''உதயம்'' இதழில் வெளிவந்தன.

இலங்கையின் நாளிதழ்களைப் பொறுத்தவரை, க. கைலாசபதி ஆசிரியராக இருந்த காலத்தில் ''தினகரன்'' இதழில் வெளியான பல சிறுகதைகள் தரத்தில் உயர்ந்திருந்தன. ''தினகரன்'' மூலம் முன்னுக்கு வந்தவர் அ. முத்துலிங்கம். தினகரனில் பொ. தம்பிராசன் எழுதிய ''தலைக்கொள்ளி'' என்ற சிறுகதை Illustrated Weekly of India-வில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது.

ஈழத்திலிருந்து தரமான இலக்கிய இதழை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ''கலைச்செல்வி'' யில் சிறந்த சிறுகதைகள் சில வெளிவந்து கொண்டிருக்கின்றன. வயதில் சிறியவர்களான யோகநாதன், கதிர்காமநாதன், துருவன், யாழ் நங்கை முதலியோர் ''கலைச்செல்வி'' மூலம் அறிமுகமான நல்ல எழுத்தாளர்கள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் அதிக அளவில் விற்பனையாகும் காரணத்தினுல், இந்தியப் பத்திரிகைகளில் தங்கள் சிறுகதைகள் இடம்பெற வேண்டும் என்ற ஆசை இங்குள்ள எழுத்தாளர்களிடம் என்றும் இருந்து வருகின்றது. ஆரம்ப காலத்தில் கலைமகளும், கிராம ஊழியனும் இலங்கை எழுத்தாளர்க்கு இடமளித்தன. ''கல்கி'' மூலம் தாழையடி சபாரத்தினம், அன்புமணி ஆகியோர் அறிமுகமாயினர். பொன்னி, காதல், உமா, சரஸ்வதி, தாமரை, புதுமை ஆகியவற்றிலும் ஈழத்தாரின் படைப்புகள் வெளிவந்தன. கல்கி நடாத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டியின் மூலம் சில எழுத்தாளர்கள் இந்திய வாசகர்கட்கு அறிமுகமாயினர். அருள். செல்வநாயகத்தின் சரித்திரக் கதைகள் இந்திய மாத இதழ்களில் அவ்வப்போது வெளியாகின்றன. ''கலைமகள்'' மீண்டும் ஈழத்து எழுத்தாளர்கட்குச் சந்தர்ப்பமளித்துவருவது மகிழ்ச்சிக்குரியது.

ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதிகள் வெளிவராத காரணத்தினுல், அவர்களின் படைப்புகளை எடைபோடுவது முடியாத காரியமாக இருந்து வந்தது. இந்தக் குறையை நீக்கிய முதலாவது தொகுதி செ. கணேசலிங்கனின் ''நல்லவன்''. இதற்குப் பின், ஈழத்துச் சிறுகதைகள்—1 (பன்னிரண்டு சிறுகதையாசிரியர்களின் கதைகள் கொண்டது தொகுப்பாசிரியர்: சிற்பி), தாம்பூல ராணி அருள். செல்வநாயகம்), கண்ணீரும் தண்ணீரும், பாதுகை (டொமினிக் ஜீவா), ஓரே இனம், சங்கமம் (செ. கணேசலிங்கன்) கயமை மயக்கம் (வரதர்), குழந்தை ஒரு தெய்வம் (காவலூர் ராசதுரை), மேடும் பள்ளமும் (நீர்வை பொன்னையன்), தோணி (வ. அ. இராசரத்தினம்), கடவுளரும் மனிதரும் (பவானி), வெள்ளிப் பாதசரம் (இலங்கையர்கோன்), சிறுகதைப் பூங்கா (பல்கலைக் கழக மாணவர்களின் பன்னிரண்டு சிறுகதைகள் கொண்டது; தொகுப்பாசிரியர்கள்: க. குணராசா, க. நவசோதி), பசி (மாதகல் செல்வா) ஆகிய தொகுதிகள் வெளிவந்தன.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் சிலர் சிறுகதைத் துறையில் முன்னேறி வருகின்றார்கள். செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் முதலியோரும், நான் முன்பு குறிப்பிட்ட யோகநாதன், துருவன், கதிர்காமநாதன் ஆகியோரும் பல்கலைக்கழக மாணவர்களே.

ஈழநாட்டாரின் பழக்க வழக்கங்களை, ஏக்கங்களை, நோக்கங்களை வைத்துத் தேசிய இலக்கியம் படைக்க வேண்டும் என்ற ஆசை முன்னையினும் பார்க்கச் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. டொமினிக் ஜீவாவின் "கண்ணீரும் தண்ணீரும்" தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டலம் அளித்த ஆயிரம் ரூபாய்ப் பரிசு இலங்கை எழுத்தாளர்கட்குப் புதிய உற்சாகத்தை ஊட்டியுள்ளது. ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் எழுத்தாளர் சங்கங்கள் நடாத்தும் இலக்கிய சர்ச்சைகளில் எழுத்தாளர் பலர் கலந்து கொண்டு கருத்துப் பரிமாறல் செய்கின்றனர். இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் சிறுகதைகளை நுணுகிப்படித்து விமர்சனம் செய்யும் பழக்கமும் ஏற்பட்டு வருகின்றது. "எழுத்து" இதழில் வெளியாகும் சில விமர்சனக் கட்டுரைகள் ஈழத்தாரிடையே சில புதிய கருத்துக்களைத் தோன்றச் செய்து வருகின்றன. புதுமைப்பித்தன், கு. ப. ரா., கல்கி, வல்லிக்கண்ணன், அகிலன், விந்தன், ஜெயகாந்தன் முதலியோர் ஈழத்துச் சிறுகதையாசிரியர்களின் ஆதர்ச எழுத்தாளர்களாக இருக்கின்றனர். மிகப் பழைய எழுத்தாளர்களான லா. ச. ராமாமிருதம், மௌனி ஆகியோரைப்பின்பற்றி இப்போது சில இளைஞர்கள் எழுதி வருகின்றார்கள். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, ஈழத்துச் சிறுகதையாசிரியர்கள் வெகு வேகமாக முன்னேறி வருகின்றார்கள் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

—

கருத்துச் சுவை மிகுந்த கவின்மிகு ஏடுகள்

தென்னாட்டு வீரர்கள்

ஆசிரியர்: வித்துவான் வை. சுப்பிரமணியன். இராஜா தேசிங்கு, கட்டபொம்மன் ஆகிய மாவீரர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல்.

விலை. ரூ. 0-87

தென்னிந்தியப் பெருமக்கள்

ஆசிரியர்: புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர். கொடைவள்ளல் பச்சையப்பர், நீதிபதி முத்துசாமி ஐயர் ஆகியோரின் வரலாற்றை விரித்துரைக்கும் ஏடு.

விலை. ரூ. 0-75

தமிழ்த் தென்றல் திரு. வி. க.

ஆசிரியர்: த. சே. உமாபதி. திரு. வி. கலியாணசுந்தரரின் வாழ்க்கைச் சிறப்புகளை எடுத்துரைக்கும் சுவடி.

விலை. ரூ. 0-87

பூம்புகார்

ஆசிரியர்: புலவர் ப. திருநாவுக்கரசு. பழந்தமிழ் நாட்டுத் துறைமுகமாகிய புகார் நகரம் பற்றிய ஏராளமான செய்திகளை எடுத்துக் கூறும் நூல்.

விலை. ரூ. 0-87

நாடும் மக்களும்

ஆசிரியர்: துரை பழனிவேல். எகிப்து, பெர்சியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளைப் பற்றியும், அந்நாட்டு மக்களைப்பற்றியும் தெளிவாக விளக்கும் நூல்.

விலை. ரூ. 1-00

தொண்டை நாட்டு மன்னர்

ஆசிரியர்: புலவர் கா. கோவிந்தன். தொண்டை நாட்டு வேந்தர் ஐவர் பற்றிய அரிய விளக்க நூல்.

விலை. ரூ. 1-00

கிள்ளிவளவன்

ஆசிரியர்: தாமரைக்கண்ணன். ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு.

விலை. ரூ. 1-25

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
94-95, புதுத்தெரு, சென்னை-1.

சிறுவர்க்கான திரைப்படம்

பொன்மானும் பொன்மீனும்

['பூவண்ணன்']

இன்றைய சிறுவர்கள் படம், பட்டம் என்ற சொற்களைக் கற்றுக்கொள்ளும் முன்பே, சினிமா நடிகர், டைரக்டர் என்பன போன்ற சொற்களைக் கற்றுக் கொள்கின்றனர். 'அறம் செய்ய விரும்பு', 'ஆறுவது சினம்' என்ற வரிகளை மனப் பாடம் செய்வதற்கு முன்பே, 'அத்தான் என் அத்தான்,' 'போனால் போகட்டும் போடா' முதலிய பாடல்களைப் மனம்பாடம் செய்து பாடி மகிழ்கிறார்கள். தாங்கள் படிக்கும் பாடங்களைப் பற்றி உடன் படிக்கும் சிறுவர் களுடன் பேசுவதற்குப் பதில், அண்மையில் வெளியான திரைப்படம் பற்றி விமரிசனம் செய்கிறார்கள்; அடுத்து வரப்போகும் படம் எப்படி யிருக்கும் என்று ஜோஸ்யம் கூறு கிறார்கள்.

சிறுவர்களின் திரைப்படப் பித்தை உணர்ந்த பின்னரே—பெரியோருக்குத் தயா ரிக்கப்படும் படங்களைச் சிறுவர்கள் பார்ப்ப தால் விளையும் தீமைகளை அறிந்த பின்னரே —சிறுவர்க்கென்று தனியே படம் எடுக்க வேண்டியதின் அவசியத்தைப் பலரும் உணர்ந் தனர்.

பிற நாடுகள் அற்புதமான சிறுவர் திரைப்படங்களை உருவாக்கின. அவை கோடிக்கணக்கான இளம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. விதைகள் நல்லவை களாக இருந்தன; விளைவும் நல்லதாகவே அமைந்தது. இதனைக் கண்ட பின்னரே நம் நாட்டிலும் சிறுவர் திரைப்படங்களை உரு வாக்கத் தொடங்கினர். அந்தப் பணிக் கென்றே சங்கம் ஒன்றும் தோன்றியது. சிறுவர் படங்களை வெளியிடுவதற் கென்றே 'பாலர் அரங்க'ங்கள் தோன்றின.

சென்னை பாலர் அரங்கத்தின் முன் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் கூடும் சிறுவர் கூட்டத்தைப் பார்த்தாலே சிறுவர் படங்களுக்கு எவ்வளவு வரவேற்பு உள்ளது என்பதை உணரலாம்.

அரங்கத்தில் செய்திப் படங்களோடு 'சுட்டியும் சிட்டியும்,' 'கலங்கரை விளக்கம்,' 'ஸ்கௌட் கேம்ப்' முதலிய சிறுவர் படங் கள் வெளியிடப்பட்டன. பாராட்டுகிறோம்.

ஆனால் இளம் உள்ளங்களுக்கு ஏற்காத செயல்களும் மொழிகளும் அடங்கிய படங் களை வெளியிடுவது அதிக ஆபத்தானது.

போலீஸ் இலாகாவின் நூற்றாண்டு விழாவிற்காக 'உங்கள் நண்பன்' என்ற படத்தைத் தயாரித்தனர். அது விறுவிறுப்பு நிறைந்த சுவையான செய்திப் படந்தான். ஆனால் அது சிறியவர்க்கு ஏற்றதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

வரிசையாக நிற்கும் சைக்கிள்களில் பூட்டாத சைக்கிளை வகையாகக் கண்டுபிடித் துத் திருடிச் செல்கிறான் ஒருவன். கன்னி ஒருத்தியைக் காமுகன் ஒருவன் கற்பழிக்க முயல்கிறான். கள்ளச் சாராயம் காய்ச்சும் கயவர்கள் பெண்ணோடு சேர்ந்து கூத்தடிக் கிறார்கள்—இவை 'உங்கள் நண்பன்' படத் தில் வரும் சில காட்சிகள். இவை சிறுவர்க்கு ஏற்றவையா ?

இத்தகு காட்சிகள் கொண்ட 'உங்கள் நண்பன்' ஒரு வாரம் இரு வாரமல்ல; பல வாரங்கள் பாலர் அரங்கிலே சிறுவர்க்காகவே திரையிடப்பட்டது. இதைத் தவிர்க்க வேண்டும். நல்லது கெட்டதைப் பிரித்துணர முடியாப் பிஞ்சு நெஞ்சங்கள் நல்லதை மட்டும் பார்க்க, பாலர் அரங்கமாவது ஆவன செய்ய வேண்டாமா ?

'உங்கள் நண்பன்' பெரியவர்களுக்காகத் தயாரித்த படம். இனி, சிறுவர்க் கென்றே தயாரித்த மற்றொரு படத்தைப் பார்ப்போம். படத்தின் பெயர் 'குருபக்தி'. ஏகலைவனின் கதையைக் கூறும் படம். இப்படம் ஏகலை

வனுக்கு வில்வித்தையைப் பயில்வதில் இருந்த வேட்கையை நன்கு விளக்கியது. ஆனால் ஒன்று. ஏகலைவனின் தாயாகப் 'பருவமங்கை' ஒருத்தி வருகிறாள். அவள் ஆடை அணிந்து தோன்றும் காட்சி வாலிபர் கண்களுக்கு விருந்து என்று சொல்ல வேண்டும். பருவப் பூரிப்போடு திகழும் அவள் மார்பு மேலாடை யின்றித் திகழ்வதைச் சிறுவர்கள் காண்பதும், அவர்களுள் சிலர் அதை மிகவும் ரசிப்பதும் விரும்பத்தக்கவையா? 'குருபக்தி' படத்திற்கு விமரிசனம் எழுதிய சென்னையிலிருந்து வெளி வரும் நாளிதழ் ஒன்று, "'வயது வந்தவர்க்கு மட்டும்' என்று குறிப்பிட வேண்டிய படம் இது'' என்று எழுதியது. இந்த விமரிசனம் மிகையானது அன்று என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பாலர் அரங்கத் தார் இத்தகைய படங்களையும் திரையிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிறுவர் பார்க்கக் கூடாத படங்கள் இரண்டைப் பற்றிப் பார்த்தோம். சிறுவர்க் கேற்ற இரு திரைப்படங்களையும் பார்ப் போம்.

ஒன்று 'பொன் மான்'. இது இந்திய அரசினரின் திரைப்படத் துறையினர் (Films Division of India) தயாரித்த படம். பொன் மான் ஒன்று மற்றொரு மானுக்காகத் தன்னையே தியாகம் செய்ய முன்வருகிறது. அதைக் கண்ட மன்னன் உள்ளம் நெகிழ்ந்து உயிர்க் கொலையை ஒழிக்கிறான். இந்தக் கதையைக் கார்டூன் படமாகத் தயாரித்திருந் தனர். இது இளம் உள்ளங்களுக்கு ஏற்ற இனிய படம்.

படத்தில் மற்றொரு சிறப்பும் உண்டு. படம் என்றால் அதில் வரும் கதாபாத்திரங் கள் பேசுவர். அது சிறுவர்க்குப் புரியும். சின்னஞ் சிறுவர்க்கு, இப்படிப்பட்ட உரை யாடல்களைக் காட்டிலும், ஒருவர் கதையைச் சொல்வதைப் போல அமையும் படங்கள் இன்னும் தெளிவாகப் புரியும். முதல் வகுப்பு பாடப் புத்தகங்களில் 'படத்தைப் பார்த்துக் கதை சொல்லு' என்று வரும் பகுதியைப் போலக் கதையை ஒருவர் பின்னணியில் சொல்ல, திரையில் காட்சிகள் ஓடினால் சின்ன குழந்தைகள் பாட்டியின் கதை யைக் கேட்டு மகிழ்வதைப்போல ரசித்து மகிழ்வார்கள்.

'பொன் மான்' மேற்சொன்ன கதை சொல்லும் முறையில் தயாரிக்கப்பட்ட படம். அதனால் அதைப் பிற மொழிகளில் 'டப்' செய்வதும் எளிதாகிறது.

மற்றொரு படம் 'பொன் மீன்' (Golden Fish) என்பது. இது ஓர் அரிய திரைப்படம். படத்தில் வருபவர் எவரும் ஒரே ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆம், இது ஒரு பேசாத படம். ஆனால் பின்னணி இசை மட்டும் இருந்தது. பேசாத படம் சுவையாக இருக்குமா, என ஐயுறலாம். "இப்படம், ஹிச்காக் படத்தைக் காட்டிலும் விறு விறுப்பு (சஸ்பென்ஸ்) நிறைந்தது" என்று பலரும் 'பொன் மீனைப்' புகழ்ந்தனர். அதையே தயாரிப்பாளரும் விளம்பரப்படுத்தி யிருந்தனர். படத்தைப் பார்த்த பின்னரே மேற்கண்ட கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அறிந்தேன்.

கதை இதுதான்: சிறுவன் ஒருவன் கடைக்குப் போகிறான். அங்கே பொன்மீன் ஒன்றை வாங்கிக் கொண்டு வருகிறான். அதைக் கண்ணாடித் தொட்டி ஒன்றில் வைத்து, அதை அவன் வளர்க்கும் கிளி இருக் கும் கிளிக்கூண்டிற்கு அருகே மேசை மீது வைக்கிறான். பின் வேறு வேலையாக வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே செல் கிறான்.

கூண்டிலிருக்கும் கிளி வெளியே வராதா என்று ஏங்கும் பூனை யொன்று சன்னல் வழியே வீட்டுக்குள் வருகிறது. கிளி கூண் டிலேயே இருப்பதைப் பார்க்கிறது. புதிதா கத் தொட்டியில் உள்ள மீனையும் பார்க் கிறது. தொட்டி பெரிய தொட்டி. அதனால் மீனையும் எடுக்க முடியாமல் திரும்புகிற பூனை, சன்னல்மீது உட்கார்ந்து கிளியையும் மீனையும் ஏக்கத்தோடு பார்க்கிறது.

அந்த நேரத்தில் கிளி கூண்டுக்குள்ளே, தான் நிற்கும் கம்பைக் காலால் பற்றிக் கொண்டு 'பல்டி' அடிப்பதுபோலச் சுற்று கிறது. மீன் அதைப் பார்த்துத் தானும் நீரில் வட்டமாகச் சுற்றுகிறது. கிளி அதைக் கண்டு இன்னும் வேகமாக பல்டி அடிக்கிறது. மீனும் அதேபோல வேகமாகச் செய்கிறது. மீன் நீரின் விளிம்பைத் தொடும்போது வேகத்தால் தொட்டியிலிருந்து மேசைமேல் விழுந்துவிடுகிறது.

இதையெல்லாம் சன்னலில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த பூனை நாவில் நீர் ஊற மேசையில் பாய்கிறது. மீன் துடித்துடிக்கிறது. கிளி இதைக் கண்டு சிறகை அடித்துக்கொண்டு கூக்குரல் இடுகிறது. அப்போதுதான் வீதியில் மீன் வாங்கிய சிறுவன் ஓடிவந்து கொண்டிருக்கிறான். நம் மனம் பதறுகிறது. பூனை மேசையில் துடிக்கும் மீனைத் தன் வாயில் கவ்விக்கொள்கிறது. நம் இதயம் வேதனையால் வெடிக்கிறது. பூனை மீனைக் கவ்வியபடி என்ன செய்கிறது தெரியுமா? அதைத் தண்ணீர்த் தொட்டியிலே விட்டுவிடுகிறது. ஆம். அந்த அழகிய பொன் மீனைத் தின்ன பூனை விரும்பவில்லை. மீன் நீரில் மகிழ்ச்சியாகத் திரிவதையும் அதைக் கண்டு கிளி மகிழ்வதையும் பார்த்துத் திருப்தியோடு சன்னல் வழியே பூனை வெளியேறுகிறது. அப்போதுதான் உள்ளே வரும் சிறுவன் மீனும், கிளியும் பத்திரமாக இருப்பதைக் காண்கிறான். நாம் மகிழ்கிறோம். படம் முடிகிறது.

படத்தை, அடுத்து என்ன நேருமோ என்று நம் உள்ளம் துடிக்கும் வகையில் அற்புதமாகத் தயாரித்திருந்தனர். இது ஒரு ஜப்பானியத் தயாரிப்பு. ஆனால் எல்லா மொழியினருக்கும் புரியக்கூடியது. "டப்" செய்யப்பட வேண்டிய அவசியமே இல்லை.

இப்படம் முழு நீள ஆங்கிலப் படத்துடன் துண்டுப் படமாகக் காட்டப்பெற்றது. பாலர் அரங்கத்தினர் இப்படத்தைத் தம் அரங்கில் திரையிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தியா பதினான்கு மொழி கொண்ட நாடு. எனவே, 'பொன் மீன்' போலப் பேச்சே இல்லாத விறுவிறுப்பும், சுவையும் நிறைந்த சிறுவர் படங்களைத் தயாரித்தால், மொழிப் பிரச்சினைக்கு இடம் ஏது? 'டப்' செய்யும் சிரமம் ஏது? சிறுவர் திரைப்படச் சங்கத்தினர் இதனைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

இன்றைய சிறுவர்க்குத் தேவையானவை 'பொன் மான்', 'பொன் மீன்' போன்ற படங்களே. இந்த இரு படங்களைப் போன்று எண்ணற்ற படங்கள் வெளிவரும் காலம், சிறுவர் உலகின் பொற்காலம் எனக் கூறலாம்.

Telephone: 84128 / 84129

Telegrams: TARAPORECO.

TARAPORE & CO.

ENGINEERS & CONTRACTORS

175/1, MOUNT ROAD, MADRAS-2.

Specialists in REINFORCED CONCRETE

Undertake Constructions of

ROADS ★ BUILDINGS ★ BRIDGES ★ FACTORIES ★ DAMS Etc.

ENSURE SPEEDY AND EFFICIENT WORK

Branch Office at

No. 6, Spencer Road, Bangalore (Mysore State)

Telephone: 4447

Telegrams: TARAPORECO.

கவிதை மங்கை

[கா. வேழவேந்தன் பி.ஏ., பி. எல்.]

ஏடெனுமோர் இலைபரப்பி சொல்ச மைத்தே
எதுகையென்றும் மோனையென்றும் குழம்பை ஊற்றி
ஈடில்லா உவமையெனும் நெய்யைச் சேர்த்தே
இசையோடு பிசைந்தளித்தாள் கவிதை மங்கை!
தேடுதற்கு வேறின்பம் உண்டா? காதல்
சிட்டொருத்தி முத்தத்தில் இனிமை ஏது?
ஓடோடிக் குடிப்பாரே அந்தக் கள்ளில்
உயர்கவிதைப் பேரின்பம் ஒளிந்தா நிற்கும்? 1

கத்தியொடும் குருதியொடும் ஆடிச் சென்ற
'கருணாக ரத்தொண்டை மானை' இன்றும்
சித்தத்தில் வைத்தோமா? பரணி ஆர்த்த
செழுங்கவிஞன் செயங்கொண்டான் நெஞ்சில் நின்றான்!
கொத்துமலர்க் கோதையவள் மாதவிப்பெண்
கொடுத்தகலைப் பேரமுதம் மறக்கும்; ஆனால்
முத்தாரச் சொல்லெடுத்து இளங்கோ தந்த
முழுஇன்பக் 'கானல்வரி' மறந்திட் டோமா? 2

சோலையிலே இதழ்தழைக்கும்; உதிரும் பின்னால்!
சொக்கவைக்கும்; அதன்பின்னால் விதவை யாகும்!
மாலையிலே மயங்கவைக்கும்; இரவில் மங்கும்.
மங்காத கவிதைப்பூஞ் சோலை சென்றால்
காலைஉண்டா? இரவுஉண்டா? ஒரேமயக்கம்!
கனவினிலே நீந்திடுவர் நுழைவோர்; தூய
நூலேணி முகட்டினிலே ஏறி விட்டால் 3
நுகர்வதற்கு வேறின்பம் தேடுவோர்யார்?

வானத்தின் வைரநிலா தேவை தானா?
வரவழைப்பாள் கவிதைமங்கை; குயிலெழுப்பும்
கானத்தைக் கேட்பதற்கு விழைகின் றீரா?
கவிதைப்பெண் கொணர்ந்திடுவாள்! பறவை தாவா
வானத்தில் நீச்சலிட விருப்பம் உண்டா?
வாருங்கள்; அவள்சிறகில் அழைத்துப் போவாள்.
நானிங்கே அடித்துரைப்பேன்; சொர்க்க முண்டு.
நங்கைக்கு மாலையிட்டு அதனைக் காண்பீர்! 4

தமிழில் விஞ்ஞானம்

[பெ. நா. அப்புஸ்வாமி]

விஞ்ஞானம் என்றால் என்ன?

இந்த வினாவுக்குப் பலர் பலவகையாக விடைகூறக் காண்கிறோம். மீண்டும் மீண்டும் சோதனைகளைச் செய்து பார்த்து, மனிதன் தெளிந்த அறிவைப் பெறுகிறான். யாவற்றையும் நுட்பமாகக் கவனித்து, இயற்கையில் சில விதிகளும் ஒழுங்குகளும் இருக்கக் காண்கிறான். இவ்விரண்டையும் மேன்மேலும் ஆராய்ந்து, மனத்தில் உறுதி பெறுகிறான். இவை இன்னவாறு எல்லாம் இருப்பதால், இனி இன்ன இன்ன எல்லாம் நிகழும் என்று முன்னதாகத் தெரிந்துகொள்கிறான். இவ்வாறு பிறந்து, இவ்வாறு அமைந்து, இவ்வாறு பயன்படும் அறிவுத் தொகுதியையே 'விஞ்ஞானம்' என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

விஞ்ஞானப் புலம்

விஞ்ஞானத்தின் வித்து எகிப்து, பாபிலோனியா, இந்தியா என்னும் பண்டை நாடுகளில் மிகப் பழங்காலத்தில் சிறிது ஊன்றப்பட்டது. பின்னர், கிரேக்க நாட்டிலும் அவ் வித்து இடப்பட்டது. அதற்குப் பின்னர், அராபியர்கள் கிழக்கில் இந்தியாவிலிருந்தும், மேற்கில் கிரீசிலிருந்தும், தாங்கள் பெற்ற அறிவை மேலும் வளம்பெறச் செய்தார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் கொண்டிருந்த சில எண்ணங்கள் இப்பொழுது நமக்கு வேடிக்கையாகத் தோன்றுகின்றன. வெள்ளிக்குக் குட்ட நோய் பற்றினால், அதுவே வெள்ளீயம் (தகரம்) என்றும்; அதற்குப் பக்கவாதம் வந்தால், அதுவே பாதரசம் என்றும்; பொன் எரிந்து அவிந்துபோனால் அதுவே காரீயம் என்றும்; அது பண்பாடற்று இருந்தால், அதுவே தாமிரம் என்றும் கூறி வந்ததைக் குறிப்பிடலாம்.

பண்டைக் காலம்

நமக்குத் தெரிந்தவரையில், தமிழில் மிகப் பழமையானவை சங்க நூல்கள். அவையெல்லாம் கலை—அழகும் குறிப்பாற்றலும் சொற்செட்டும் உடையவை; தேர்ந்தெடுத்த சொற்களால் செம்மையான செய்யுள் வடிவில் அமைந்தவை; காதல், ஆண்மை, கொடை, ஆகியவற்றைப் பற்றியே பெரும்பான்மையும் கூறுபவை. அவற்றில் ஒருசில பகுதிகளைத் தவிர, கடவுளைப் பற்றி அவை மிகுதியாகக் கூறுவதில்லை; சிற்சில நன்னெறிகளும், அறிவுரைகளும் அங்கங்கே கூறப்பட்டும் இருக்கின்றன. இலக்கியத் தன்மையே அவற்றின் முக்கியப் பண்பு. விஞ்ஞானத்தைப் பற்றி அவற்றில் சிறிதும் இல்லை.

அக்காலத்தில் தமிழ் நாட்டிலே விஞ்ஞானத்தைப் பற்றிய கருத்து அதிகம் இல்லை. அவற்றுக்குப் பிற்காலத்தில் தோன்றிய 'பதினெண் கீழ்க்கணக்கு' என்பவை அறிவுரை நூல்கள். அவைகளும் விஞ்ஞானச் செய்திகளைக் கூறவில்லை. இன்னும் பின்னர்த் தோன்றிய சமயப் பாசுரங்களும், காவியங்களும் அவ்வாறே. அவற்றில் இரண்டோர் இடங்களில் சிற்சில தவறான விஞ்ஞானக் கருத்துக்கள் காணப்படுகின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். அவற்றை நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை.

ஆயினும், அடிப்படை விஞ்ஞானக் கருத்துக்களும் செய்திகளும் மனிதன் அறிவு பெற்றுச் சற்றே உயர்ந்த நாள் முதலே தொடங்கியிருக்க வேண்டும். பசி, பிணி, அச்சம், தெய்வ வழிபாடு ஆகியவை காரணமாக, மக்கள் இயற்கையைப் பற்றி அறிய வேண்டியது அவசியமாயிற்று. இம்முயற்சிகளால் வேளாண்மை, வானநூல், மருத்துவம் முதலியவைகளுக்கு உரிய அறிவு முளைக்கத் தொடங்கிற்று. ஆனால், நெடுங்காலம் வரை அந்த அறிவுத் தொகுதி பெரும்பான்மையும் கற்பனையாகவே இருந்துவந்தது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஏறக்குறைய இதே நிலைதான் முதன் முதலில் காணப்பட்டது. பிறகு திவலை திவலையாக விஞ்ஞானம் — உண்மை விஞ்ஞானம் — தோன்றி, சிறிது சிறிதாக வளர்ந்து, தழைக்கத் தொடங்கிற்று.

இப்படிப்பட்ட புலம் சீராகப் பண்பட்டு அமைந்து இன்னும் நெடுங்காலம் ஆகவில்லை. மனித இனத்தின் ஆயுளோடு ஒப்பிடும்போது அதை மிகச் சிறு காலம் என்றே சொல்ல வேண்டும். ஆயினும், அதற்குள் மனிதன் அறிந்திருக்கும் செய்திகள் மிகப் பல; செய்திருக்கும் சாதனைகளும் மிகப் பெரியவை; மிக அரியவை.

மேற்கத்திய நாடுகளின் தொடர்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பின்பே 'விஞ்ஞானம்' இங்கே தலைகாட்டத் தொடங்கிற்று. அது தொடங்கி இன்னும் நூற்றைம்பது ஆண்டுகள் ஆகவில்லை. மேலைநாடுகளிலிருந்து வந்த பாதிரியார்கள் முதலியோரின் முயற்சியால் தமிழில் உரைநடையும் அச்சுத் தொழிலும் தோன்றிய பின்னரே விஞ்ஞானம் முளைத்து எழுவதற்கு ஏற்ற வாய்ப்பு ஓரளவு உண்டாயிற்று. சென்ற நூற்றாண்டில் ஒரு சில அறிஞர்கள் விஞ்ஞானச் செய்திகளை, அக்காலத்தில் தாங்கள் தெரிந்துகொண்ட அளவில், அந்தத் துறையில் அதிக வளம் பெருத மொழியில், தங்களால் இயன்ற வரையில் தெளிவாக வெளியிட முயன்றார்கள். அதில் கருத்து உள்ளவர்கள் இவ்விரண்டு இடையூறுகளையும் பொருட்படுத்தாமல், அவர்கள் கூறியவற்றைக் கற்க முயன்றார்கள். ஆனால், பொதுமக்கள்—எழுத்தறிவு இன்மையாலும் அக்கறை இன்மையாலும்—அம்முயற்சியில் கருத்துக் கொள்ளவில்லை.

மிகப் பெரிய முயற்சி

நம் தமிழ் நாட்டிலே முதன் முதலில் சிறிய விஞ்ஞான நூல்கள்தான்—சுகாதார நூல்கள் முதலியவை—எழுதப்பட்டுவந்தன. ஆனால், இந்தத் துறையில் மிகப் பெரிய முயற்சி இலங்கையில் யாழ்ப்பாணத்தில்சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. அப்போது அங்குள்ள 'அமெரிக்க மிஷன்' பாதிரிகள், அந்நாட்டுத் தமிழ்—அறிஞர் சிலரைத் துணையாகக் கொண்டு, இந்தத் துறையில் மாபெரும் முயற்சியைத் தொடங்கினார்கள். அவர்களில் கிறீன் (Green), சப்மன் (Chapman) என்பவர்களை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மனித உறுப்பியலைப் பற்றி (Anatomy) கிரே (Gray) எழுதிய மிகச் சிறந்த நூலை அவர்கள் படங்களோடு தமிழில் வெளியிட்டார்கள். அந்நூலுக்கு அவர்கள் 'மனுஷவங்காதிபாதம்' என்று இட்ட பெயர் நமக்கு இப்போது பிடிக்காத பெயராகத் தோன்றுகிறது. ஆயினும், அவர்களுடைய முயற்சி மிகப் பெரியது; எண்ணமோ தலைசிறந்தது. அவர்கள் அமைத்த சில சொற்கள் மிக்க அழகானவை; எளியவை. உதாரணம், திசு (tissue).

இந்நூலைத் தவிர, அப்போது கெமிஸ்தம் (Chemistry), பௌதிகம் (Physics) முதலிய நூல்களும், கால்நடை, அறிவியல், குழந்தை நோயியல், பிரசவ நூல் முதலியவைகளும், இன்னும் சிறிதும் பெரிதுமான பல விஞ்ஞான நூல்களும் வெளிவந்தன. அப்போது அவற்றை ஏற்கப் போதிய ஆவல் தமிழ் மக்களுக்கு இல்லை. ஆதலால், அத்துணைச் செழிப்பாகத் தொடங்கிய முயற்சி, நன்கு வளர்ந்து பூவும் காயுமாகக் குலுங்கும் மரத்தை ஈரமும் நிழலும் உரமும் இல்லாத இடத்தில் நட முயலும் முயற்சியைப் போலக் கருகிப் போயிற்று.

அதற்குப் பின்னர், அத்துணைத் தீவிரமாகவோ பெரிதாகவோ வேறு ஒருவரும் முயலவில்லை. சென்னையில் சில முயற்சிகள் தொடங்கப்பட்டன. சில பத்திரிகைகள் சின்னஞ்சிறு அளவில் விஞ்ஞானச் செய்திகளை வெளியிட முயன்றன. அவற்றுள் ஒன்று 'ஜநவிநோதினி' என்னும் பத்திரிகை. இது 1870 முதல் இருபது ஆண்டுக் காலம் 'துரைத்தனக் கல்விச் சங்கத்தாரால்' வெளியிடப்பட்டுவந்தது. (அவற்றுள் சிலவற்றைப் பின்னர் 1931-ல் கா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டார். அம்முயற்சியும் பயன் பெறவில்லை). மிக முக்கியமான மற்றொன்று, சி. வி. சுவாமிநாத ஐயர் எழுபது ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய 'விவேக சிந்தாமணி'. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை முதலியோரும் அதில் அத்துறையில் எழுதி வந்தார்கள். ஆனால் அதுவும் விழலுக்கு இறைத்த நீராக முடிந்தது. விஞ்ஞானம் அப்பொழுதும் தமிழ் மக்களுக்குக் கசப்பாகவே இருந்தது. இதைத் தவிர, 'விவேக போதினி' போன்ற வேறு சில பத்திரிகைகளும் இத்துறையில் முயன்றன. ஸ்ரீரங்கத்திலிருந்து சிறப்பாக வெளிவந்த 'வாணிவிலாசினி'யும் வேறு சில பத்திரிகைகளும் இத்துறையில் சிறிது ஊக்கம் காட்டிவந்தன. சென்னைக் கிறிஸ்தவ இலக்கிய சங்கமும்

(இந்தியக் கல்வி அபிவிருத்தி சங்கத்தாரும்) சில நூல்களை வெளியிட்டது.

பின்னர், 1917-ம் ஆண்டில், எனது சிறிய தகப்பனுரான அ. மாதவையர், நீதிபதி சதா சிவ ஐயர், வக்கீல் வேங்கடராம சாஸ்திரி யார், அ. அரங்கசாமி ஐயங்கார், சு. பவா நந்தம் பிள்ளை, டி. வி. கோபாலசுவாமி முதலியார், முத்தையா முதலியார், கே. பி. இராமநாத ஐயர், டி. எஸ். சுப்பிரமணிய ஐயர் முதலிய அறிஞர்கள் சிலர் 'தமிழர் கல்விச் சங்கம்' என்னும் சங்கத்தைச் சென்னையில் தொடங்கினுர்கள். தமிழ் நாட்டாருக்குத் தமிழ் மொழியின் வாயி லாகப் புதிய அறிவை (முக்கியமாக விஞ் ஞானத்தை)ப் பரவச் செய்வதே அச்சங்கத் தின் முக்கிய நோக்கம். அது 'தமிழர் நேசன்' என்னும் பத்திரிகையைத் தொடங்கி நடத்திவந்தது. அச்சங்கத்தின் செயலாள ராகவும், அப்பத்திரிகையின் ஆசிரியராகவும் நானும் சில காலம் பணிபுரிந்து வந்தேன். பன்னிரண்டு ஆண்டுக் காலம்போல் அது வாழ்ந்து, மடிந்துபோயிற்று. தமிழ்ப் பொது மக்களின் ஆதரவு அதற்குக் கிடைக்கவில்லை. இதற்கிடையில் சேலத்திலிருந்து இராஜாஜி யும், டி. ஜி. வேங்கடசுப்பையருமாக 1916-ல் தொடங்கிய தமிழ் விஞ்ஞானச் சொல்—சங் கம் தனது பத்திரிகையின் (Journal of the Tamil Scientific Terms Society) நான்கு இதழ் களை வெளியிட்டது. பின்னர், அது தன் வேலையை மேற்கூறிய 'தமிழர் கல்விச் சங் கத்தினிடம் ஒப்புவித்துவிட்டது.

பின்னர் 'கலைமகள்' தொடங்கியபோது அதில் தவருமல் மாதந்தோறும் இரண்டு மூன்று விஞ்ஞானக் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்தன. சற்றுப் பின்னர், ஆனந்த விகடனும், சுதேசமித்திரனும், செந்தமிழும், அதற்குப் பின் 'சிந்தனையும்' 'தினமணியும்' 'தமிழ் நாடும்', வேறு சில பத்திரிகைகளும் ஓரளவு முயன்றன. அவைகளைப் போலவே இலங்கையிலிருந்து வெளிவந்த 'வீரகேசரி யும்', 'விஞ்ஞானி'யும் விஞ்ஞானக் கட்டுரை களை முறையாக வெளியிட்டன. ஆனுல், 'விஞ்ஞானி' ஆதரவு அற்று, நின்று போயிற்று. மற்றப் பத்திரிகைகள் எல்லாம் விஞ்ஞானக் கட்டுரைகளை முறையாக வெளி யிடுவதை நிறுத்திவிட்டன.

சென்னையில், 1933-ம் ஆண்டின் கடைசி யில், 'தமிழ் அன்பர் மகாநாடு' என்று ஒரு மகாநாடு கூட்டப்பட்டுத் தமிழ் மொழியை ஓங்கச் செய்வதற்கான முயற்சிகள் பலவும் தொடங்கப்பட்டன. அப்போது முற்று முழுத் தமிழ் இசைக் 'கச்சேரி' ஒன்று முத்தையா பாகவதரின் மூலமாக அந்த மகா நாட்டில் நடத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடவேண்டிய நிகழ்ச்சி. அதை நினைத்து உருவாக்கிய பெருமை கே. வி. கிருஷ்ண ஸ்வாமி ஐயரைச் சேர்ந்தது. நானும் அதில் செயலாளராக இருந்தது எனக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தருகிறது.

அதற்கு மறு ஆண்டில் திருநெல்வேலியில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதர வில் ஒரு மாநாடு கூடிற்று. அதன் விளைவாகக் 'கலைச் சொற்கள்' என்னும் விஞ்ஞானச் சொல் - தொகுதி வெளியிடப்பட்டது.

பின்னர், நமது சென்னை அரசாங்கம் ஸ்ரீநிவாச சாஸ்திரி கமிட்டி என்று ஒரு குழுவை நியமித்து, பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற சொற்களை அமைக்கச் செய்தது. நண்பர் கே. சுவாமிநாதன் அதன் செயலாளர் களில் ஒருவர். அப்போது அமைக்கப்பட்ட சொற்கள் பல திருத்தங்களைப் பெற்று உயர் தரப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற கலைச் சொல் தொகுதிகளாக வெளிவந்தன.

சென்னைப் பல்கலைக்கழகம் அது குறித் திருந்த சுமார் இருபது முப்பது தலைப்புக் களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி (தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் நான்கு மொழிகளில்), சிறந்த நூலை எழுதும் ஆசிரியருக்கு, ஒவ்வோர் ஆண்டிலும் ஆயிரம் ரூபாய்வரை பரிசளிப்பதாக வெளியிட்டிருந் தது அவ்வாறு எழுதிப் பரிசு பெற்ற சிலர் தம் நூல்களை வெளியிடாமல் நிறுத்திவிட்ட தைக் கண்டு, நூல்களை வெளியிட்ட பின்பே பரிசுத் தொகை வழங்கப்படும் என்று விளம் பரத்தை மாற்றிற்று. அவ்வாறும் பல பரிசு கள் வழங்கப்பட்டன. 'மின்சாரத்தின் விந்தை', 'வானொலியும் ஒலிபரப்பும்', 'அணுவின் கதை' என்பவை அவ்வாறு வெளி வந்தவைகளில் சில. இரண்டொரு நூல்கள் (உதாரணம்: எக்ஸ்-ரே கதிர்கள்) பரிசுக்கு உரியவையாக மதிக்கப்பட்டும் வெளியிடப் படாமல் தங்கிவிட்டதும் உண்டு. இந்நூல் களுக்கும் அதிக ஆதரவு இல்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்ற விஞ்ஞான நூல்களை எழுதுபவர்களுக்கு ரூ. 1000 பரிசு அளிப்பதாக வெளியிட்டார்கள். அப்போது பௌதிகத்தைப் பற்றி எழுதிய நூலுக்குப் பரிசு வழங்கப்பட்டது. அப்போது பேராசிரியர் பி. ஏ. சுப்பிரமணிய ஐயர் அவர்களும், டாக்டர் இராமச்சந்திர ராவ் அவர்களும், நானும் அந்த நூல்களைப் பார்வையிட்டு முடிவு செய்யும் பொறுப்பு அளிக்கப் பெற்றிருந்தோம். திரு. அநந்த பத்மநாபன் எழுதிய 'நவீன அசேதன இரசாயனம்' என்னும் நூலும் அவ்வாறு பரிசுபெற்றது. பின்னர் அம்முயற்சி தொடர்ந்து நடைபெறவில்லை. மாணவர்களின் ஆதரவும் பொது மக்களின் ஆதரவும் தமிழ் விஞ்ஞான நூல்களுக்குக் கிடைக்கவில்லை.

பின்னர் நிறுவப்பட்ட 'தமிழ் வளர்ச்சிக் கழகமும்', அதன் ஆதரவில் தோன்றிய 'தமிழ்க் கலைக்களஞ்சியமும்' மிகச் சிறந்த தொண்டு ஆற்றிவந்துள்ளன.

இப்போதைய நிலை

இப்போது நிலை ஓரளவு மாறியிருக்கிறது. முன்னால் விஞ்ஞானக் கட்டுரைகளை வெளியிட்டுவந்த பத்திரிகைகளில் அநேகமாக எல்லாம் அவற்றை வெளியிடுவதை நிறுத்திவிட்டன. ஆனால், நல்ல வேளையாகச் சில தனி மக்களின் ஊக்கத்தாலும், சில பதிப்பகங்களின் துணிவாலும், அமெரிக்கச் செய்தி இலாக்கா, தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், சென்னை, நேஷனல் புக் டிரஸ்ட், டில்லி, ரஷிய ஆட்சியினர்—ஆகியவற்றின் முயற்சியாலும் துணையாலும் இப்போது சில விஞ்ஞான நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தத் துறையில் இப்போது கோயம்புத்தூரிலிருந்து சில ஆண்டுகளாக மனஞ் சலியாது வெளிவந்துகொண்டிருக்கும் 'கலைக்கதிர்' என்னும் பத்திரிகையின் முயற்சி மிகப் பாராட்டத்தக்கது.

சென்னை அரசாங்கம் இப்போது செய்துவரும் சில முயற்சிகளும் பாராட்டத்தக்கவை. இக்காலத்தில் புதிய விஞ்ஞானங்களில் வழங்கும் பல்லாயிரக் கணக்கான கலைச்சொற்களையும், அவற்றில் புதிது புதிதாக அமைக்கப்படும் பொருள்களையும், தோன்றிவரும் கருத்துக்களையும், கற்பனைகளையும், சூத்திரங்கள் முதலியவற்றையும் வெளியிடப் போதிய சொற்கள் இப்போது தமிழில் இல்லை என்பதை நாம் நன்கு உணர்ந்து, அந்நிலையை மாற்றுவதற்கான வழிகளையெல்லாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். தக்க முறைகளைக் கையாள வேண்டும். என்றென்றைக்கும் நாம் ஆங்கிலம், ஜெர்மனி, பிரெஞ்சு, ரஷியன் என்னும் மொழிகளின் மூலமாகவே விஞ்ஞானச் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிமை நிலை இருக்கலாகாது. ஆனால், விடுதலை பெறுவது எளிதாக இருந்தாலும், விடுதலை பெற்றபின் தோன்றும் நன்னிலைக்கு ஏற்றபடி நடப்பதற்கு உரிய திறமையை நாம் பெறும் பொருட்டு மிகவும் தீவிரமாகவும், மிக்க கவலையோடும், கருத்தோடும் முயலவேண்டும். மனக்கோட்டைகளைக் கட்டியோ, பண்டைப் பெருமைகளை நினைந்து மார்தட்டியோ வருவதால் யாதொரு பயனும் விளையாது. 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பது ஏட்டில் உள்ள பழமொழி மட்டும் அன்று; அது மிகச் சிறந்த அறிவுரை.

கவிதையில் பல இடங்களில் தெளிவு வேண்டியதில்லை—இருக்கலாகாது என்று கருதுவாரும் உண்டு. விஞ்ஞானத்தில் அந்நிலை பேராபத்துக்கு இடமாகும். நாமும் உரைநடையை எழுத்தில் கையாளத் தொடங்கிவிட்டோம். நல்ல வேளையாக நமது மொழியில் வேற்றுமை, ஒருமை, பன்மை, காலம், இடம் முதலியவற்றைக் குறிக்கும் உருபுகள் முதலியவை இருக்கின்றன. அவற்றைக் கைநழுவ விடாமல் வழங்க வேண்டும். தெளிவு வேண்டும்; சொற்செட்டும் வேண்டும். ஒரு பொருளுக்கு முற்றும் ஏற்ற ஒரே சொல்லையே முறையாக வழங்கிவர வேண்டும். கற்பனையை வேண்டாம் என்று சொல்லவில்லை. உண்மை இல்லாவிட்டால் விஞ்ஞானம் இல்லை என்பது போலவே, கற்பனை மணம் இல்லாவிட்டாலும் விஞ்ஞானம் இல்லை. ஆனால் அது உண்மையின்மீது உறுதியாகக் காலை ஊன்றி நிற்கும் கற்பனையாக இருக்கவேண்டும்.

ஆகையால், நாம் பாடுபட வேண்டும்—அரும்பாடு படவேண்டும். செயலின் பெருமையைத் தெரிந்தே முயலவேண்டும். தண்

ணீரில் இறங்காவிட்டால் நீச்சுப் பழக முடியாது—உண்மைதான். ஆனால் நீச்சுப் பழக்கம் இல்லாமல், ஆழக் கடலில் குதிக்கலாகாது, பெருங்கடலைக் கடக்க முயலலாகாது என்பதும் நினைவில் இருக்க வேண்டும்.

ஆத்திரம் எதுவும் இன்றி, அமைதியோடு, ஆர அமர ஆலோசனை செய்து, முயற்சியைத் தீவிரமாக நடத்திவர வேண்டும். அயல் நாடுகள் பலவும் முன்னேறி வருகின்றன. நம் நாட்டைவிடப் பரப்பளவிலும், மக்கள்-தொகையிலும் மிகச் சிறிய நாடுகள் விஞ்ஞான முன்னணியில் நிற்கின்றன. நாமும் அவ்வாறு செய்வோமாக. அவ்வாறு செய்பவர்கள் அனைவரையும் ஊக்கிவருவோமாக. நாம் முன்னேறி நற்புகழ் பெறுவோமாக.

நக்கீரர் கழகம், சென்னை

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

(துவக்கம் 1944)

அன்புடையீர்,

வணக்கம். மேற்படி **திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில்** இவ்வாண்டு வகுப்புக்கள் 5-8-'62-ல் சென்னைப் பவழக்காரத் தெரு 44-ஆம் எண்ணுள்ள **ஏ. ஆர். சி. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில்** தொடங்கப்பெற்று ஞாயிறு நீங்கலாக, நாள்தோறும் மாலை 6-15 மணி முதல் 7-45 மணி வரை நடைபெற்று வருகின்றன.

தமிழைப் பிழையறக் கற்றலே தமிழ் வளர்த்தல் ஆகும்.

இந்த நல்வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்த வேண்டுகிறோம்.

இடம்: ஏ. ஆர் சி. பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
44, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-1.

காலம்: சனிக்கிழமை நீங்கலாக ஒவ்வொரு நாளும் மாலை 6-15 மணி முதல் 7-45 மணி வரை. ஞாயிறுதோறும் காலை 10 மணி முதல் 12 மணி வரை.

வகுப்பு: 1. வித்துவான் புகுநிலை (Entrance).
2. வித்துவான் முதனிலை (Preliminary).
3. வித்துவான் இறுதிநிலை (Final).

ஆசிரியப் பெருமக்கள்:

திருவாளர்கள். புலவர் கு. பாலசுந்தரனார் (தலைவர்—Hony. Principal). பழநி பாலசுந்தரனார் (துணைத் தலைவர்), பூ. ச. கந்தசாமி, எம். ஏ. (செயலாளர்), புலவர் கா. சி. தனக்கோடி (துணைச் செயலாளர்), கு. இராமகிருட்டினன், எம். ஏ. (பொருளாளர்), பா. பாலசுப்பிரமணியம், எம். ஏ., எம். லிட்., புலவர் அ. மாணிக்கம், ஆர். ஜானகிராமன், எம்.ஏ., எல். டி., மு. சதாசிவம், எம்.ஏ., புலவர் சி. இரத்தினவேலு புலவர் பா. வரதராசன், புலவர் கே. குப்புசாமி, பி. ஏ., பி. எல்., ஆர். சி., புலவர் கா. மு. துரைசாமி.

பெண்களுக்கு இடவசதி உண்டு. வருக! வருக!! இனிய தமிழ் கற்று இன்பம் பெறுக.

குறிப்பு: பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு: ஞாயிறுதோறும் காலை 10 மணிக்கு 'தமிழகம்' 27, கொண்டலையர் தெரு, பெத்துநாயக்கன்பேட்டை-என்ற கழகப் பணிமனையில் "குறுந்தொகை" தொடர்சொற்பொழிவு, திரு. பூ. ச. கந்தசாமி, எம்.ஏ., அவர்களால் நடைபெற்று வருகின்றது. மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு: இவ்வமைப்பின் சார்பில் திங்கள் ஒன்றுக்கு ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெறும். நன்னூல் விருத்தியுரை வகுப்பில் தேர்வுக்கு உரியவர்கள் அல்லாத ஏனைய அன்பர்களும் கலந்துகொள்ளலாம்.

சென்னை நக்கீரர் கழகத்தினர்.

ஒன்றே! அதுவும் நன்றே!
நீதிக்கு ஓர்
மனு நீதிச் சோழன்
கருணைக்கு
ஓர் சிபி
கொடையிலே
ஓர் வள்ளல் பாரி
பொடியிலே ஒரே பொடி
அதுவே
T·A·S·ரத்தினம்
பட்டணம் பொடி
S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே.

மலையாளத்தில்

சிறுகதை வளர்ச்சி

[ஜி. ஸ்ரீதரன்]

மலையாளத்தில் சிறுகதை இருபதாவது நூற்றாண்டில் ஏற்பட்ட ஓர் இலக்கியப் பிரிவு. இந்தியாவின் இதர மொழிகளுக் கொப்ப, ஆங்கிலத்தின் உறவுதான் மலையாளத்திலும் சிறுகதை தோன்றவும் விரிவடையவும் காரணமாயிற்று. ஆனால் ஆரம்ப காலக் கதைகளுக்கும், தற்போதைய கதைகளுக்கும் எவ்வித ஒற்றுமையும் கிடையாது. அந்தக் கதைகளைச் சிறுகதைகள் என்று அழைப்பதைவிடக் குட்டி நவீனங்கள் என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும். நாயகன், நாயகி, வில்லன் ஆகியவர்களைக் கொண்ட முக்கோணக் கதைகளாக ஆரம்பித்து, பற்பல சிக்கல்களுக்குப்பின் வில்லன் மாண்டுவிட, நாயகனும் நாயகியும் மணம் புரிவதுடன் எல்லாம் சுபமாக முடியும் கதைகள்தான் ஆரம்ப காலக் கதைகள். ஒடுவில் குஞ்ஞிகிருஷ்ண மேனோன், எம். ஆர். கே. ஸி என்று அழைக்கப்படும் ஸி. குஞ்ஞிராம மேனன், அம்பாடி நாராயணப் பொதுவாள், கே. ஸி. குமாரன், ஈ. வி. கிருஷ்ண பிள்ளை, புத்தேழத்து இராமன் மேனன் – ஆகியவர்கள் ஆரம்ப காலத்துக் கதையாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஒடுவில் குஞ்ஞிகிருஷ்ண மேனன் அவ்வப்போது எழுதிய நான்கு கதைகள் ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளன. 'கல்யாணிக் குட்டி', 'ஜாவெ', 'நாராயணிக் குட்டி', 'கேளுண்ணி மூப்பில் நாயர்' என்பவை அக்கதைகள். நான்கும் காதல் கதைகளே. மலையாளத்தில் முதன்முதலாக வெளிவந்த கதைத் தொகுப்பும் இவைதான். ஈ. வி. கிருஷ்ண பிள்ளை பழைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர். ஆயினும் அவர் புதிய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருந்தார் அவரது 'கேளீ சௌதம்' எனும் கதைத் தொகுப்பு (நான்கு பாகங்கள்) புது எழுத்தாளர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது கதைகள் இதுகாறும் காதல் அல்லது வீரத்தை மையமாகக் கொண்டே எழுதப்பட்டன; எல்லாம் செல்வவான்களைப் பற்றிய கதைகள். படித்தவர்களும், பணக்காரர்களும்மட்டுமே அவைகளை ரசிக்க முடிந்தது. ஆனால் ஈ. வீ. கிருஷ்ண பிள்ளை சிறுகதையை மணிமாளிகையிலிருந்து கீழே இறக்கிக் கொண்டுவந்தார். அதனால் ஏழைகளும், பாமர மக்களும்கூட அதைச் சுவைக்கத் தொடங்கினார்கள். ஆனால் ஈ. வி. வெகு விரைவில் வேறு துறைக்குத் திரும்பிவிட்டது சிறுகதை இலக்கியத்துக்கே பேரிழப்பாக முடிந்தது. தற்பொழுது அவர் மலையாளத்தின் சிறந்த நகைச்சுவை எழுத்தாளர், நாடகாசிரியர், விமரிசகர் (Critic) என்ற முறையில்தான் அறியப்படுகிறார். திரு. புத்தேழத்து இராம மேனன் ஒரு சிறந்த எழுத்தாளராயினும், சிறுகதை இலக்கியத்துக்கு அவர் முக்கியமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் என்ற முறையிலேயே தொண்டாற்றியிருக்கிறார். தாகூர் கதைகள் அனைத்தையும் அவர் மலையாளத்தில் மொழிபெயர்த்து அளித்திருக்கிறார்.

இன்றுடன் சிறுகதையின் ஆரம்ப கட்டம் முடிவடைந்தது என்றே சொல்லலாம். ஏனென்றால் கேரளத்தின் அரசியல் - சமூகச் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலைபெற நாடெங்கிலும் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. அத்துடன் நாட்டில் நடமாடிய வறுமையும், ஏழை மக்களின் துன்பங்களும் எழுத்தாளர்களைக் கவர்ந்தன. இலக்கியம் ஒரு கண்ணாடி. அது ஒரு நாட்டின் அவ்வப்போதைய அரசியல், பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கும். கேரளமும் இதற்கு விதிவிலக்காக இல்லை. எழுத்தாளர்கள் நன்றாகக் கண்விழித்துப் பார்த்தார்கள். எங்கும் வாழ்வுக்காகத் துடிக்கும் மக்கள்; வாழவிடாத சூழ்நிலை. மனிதனுக்கும், சமூகத்துக்குமிடையே கடும்

போர். அந்தப் போராட்டமே ஆயிரம் கதைகள் கூறின. எழுத்தாளர்கள் கதைகளைத் தேடிச் செல்லவில்லை; கதைகள் அவர்களைத் தேடி வந்தன. இந்தச் சூழ்நிலை அளித்த Realism - எனும் இலக்கியக் கோட்பாடுதான் இலக்கியத்தின் ஆணிவேராகிவிட்டது. மேலும், கேஸரி பாலகிருஷ்ண பிள்ளை போன்ற விமரிசகர்கள் (Critics) ஆங்கிலத்தைக் கொண்டு ஐரோப்பிய இலக்கியத்துக்கு ஒரு வாயிலைத் திறந்துகாட்டினார்கள். ஐரோப்பாவின் இலக்கிய மரபுகள் பல மலையாளத்தில் பரவிவிட்டன. இலக்கியத்தின் மற்ற பிரிவுகளைப் போலவே சிறுகதையும் இதனால் மிகவும் பயனடைந்தது. தாக்கரே, டிக்கன்ஸ், செக்கோவ், மோபசான், அமெரிக்காவிலிருந்து எட்கர் அல்லன் போ, மார்க் டுவெயின், நதேனியல் ஹாதோர்ன் முதலிய மேதைகளின் படைப்புகள் மலையாள எழுத்தாளர்களுக்கு ஒரு புது உற்சாகத்தை அளித்தன.

இந்தப் புதுச் சூழ்நிலையில் உருவான எழுத்தாளர்களுக்குள் தகழி சிவசங்கர பிள்ளை, கேசவதேவ், எஸ். கே. பொற்றைக்காடு, வைக்கம் முகமது பஷீர், காரூர் நீலகண்ட பிள்ளை, பொற்குன்னம் வர்க்கி முதலியவர்கள் முக்கியமானவர்கள். எல்லா எழுத்தாளர்களையும், அவர்களது படைப்புகளையும் இங்கு விவரிப்பது அரிது. ஆகையால் முக்கியமான ஒருசிலரை மட்டும் குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன்

பிரேம்சந்தை இந்திக் கதை - இலக்கியத்தின் தந்தை, நவீனத்தின் (Novel) சக்கரவர்த்தி என்றெல்லாம் அழைக்கிறார்கள். அதுபோலத் தகழி சிவசங்கர பிள்ளையை மலையாளக் கதை – இலக்கியத்தின் தந்தை என்று அழைக்க முடியாவிட்டாலும், அவரை மலையாளக் கதை - இலக்கியத்தின் முடிசூடா மன்னன் என்று அழைப்பது முற்றிலும் தகுவதாகும். வாழ்க்கையை உண்மையாக, இம்மியளவும் பிழையில்லாமல் சித்திரிப்பதில் அவருக்கு இருக்கும் திறமை அலாதியானது. குறிப்பாகச் சொன்னால், தகழியைப் பொறுத்தவரையில் உண்மை (Real) க்கும், கற்பனை (Fiction) க்கும் வேற்றுமையே கிடையாது. ஏன்? அவருக்குத் தாம் காண்பதெல்லாம் கதைதான். ஆகையால் சில பொழுது அவரது கதைகள் சற்று விரசமாக இருந்தாலும் இருக்கும். ஆனால், அவர் நாடும் அந்த அப்பழுக்கற்ற உண்மைகள் மூலம் வாசகர்கள் மனத்தில் அவர் வலியுறுத்தும் ஆழ்ந்த வாழ்க்கைத் தத்துவங்கள்தான் அக்கதைகளின் ஜீவநாடி. தகழி தம் கதைகளுக்காகக் கொண்டுள்ள பிரச்சினைகள் முக்கியமாக இரண்டு எனலாம். வறுமை, சமூகத்தின் கொடுமை. இவை இரண்டுக்கும் நடுவில் அகப்பட்டுத் தவிக்கும் மனிதர்களின் மனத்தத்துவத்தை அவர் நன்றாகச் சூறையாடிவிடுவார்.

தகழியின் கதைகளின் தொகுப்பு ஒன்று 'அடியொழுக்குகள்' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. அந்தப்பெயர் அவரது கதைகள் அனைத்துக்கும் பொருந்தும். அவரது கதைகள் ஒவ்வொன்றிற்கும் ஓர் அடியொழுக்கு இருக்கிறது. அதைக் கண்டுபிடித்தாலன்றி அந்தக் கதையை ரசிக்க முடியாது. 'தஹசீல் தாருடெ அச்சன்' (தாசில்தாரின் தகப்பனார்) எனும் கதையில், நாகரிக வாழ்க்கை நடத்தும் தாசில்தாரின் நாகரிக மற்ற ஏழை விவசாயியாகிய தகப்பனார் ஒருவரை அவர் சித்திரித்திருக்கிறார். குட்டநாட்டைச் சேர்ந்த அந்த விவசாயி மிகச் சிரமப்பட்டுத் தனது பிள்ளையை மேற்படிப்பு படிக்கவைக்கிறான். அவன் படித்துப் பட்டம் பெற்று பெரிய உத்தியோகஸ்தனாக வாழும்பொழுது, அவனுடன் நாலு நாள் மிக நிம்மதியாக, சுகமாக வாழவேண்டும் என்பது அவனது அவா. அக்கனவு பலிக்கிறது. அவன் மகன் தாசில்தாராகிறான்; குடும்ப வாழ்க்கை நடத்துகிறான். ஆனால் அந்த நாலு நாள் சுகவாழ்வுதான் அவனுக்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால், தாசில்தாரின் மனைவி மிகவும் நாகரிக மங்கை, பெரிய செல்வவானின் மகள். ஓர் அநாகரிகப் பேர்வழி தங்கள் குடும்பத்தில் ஒட்டிக்கொண்டிருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் அக்கிழவனைத் தனது வேலைக்காரனாகவே பாவிக்கிறாள். அவனை அவமதிக்கிறாள். அவன் மனத்தைப் புண்படுத்துகிறாள். ஆனால் அக்கிழவன் எப்பொழுதுமே தன் மகனை நொந்துகொள்வதில்லை. தாசில்தாருக்குத் தம் தகப்பனாரைக் கவனிக்க நேரமுமில்லை. ஒரு நாள் நள்ளிரவில் வீட்டில் திருடன் புகுந்துவிட்டான். எல்லோரும் திடுக்கிட்டு எழுந்து விளக்குப் போட்டுப் பார்த்தார்கள். ஆனால் புகுந்தது திருடன் அல்ல; தாசில்

தாரின் தகப்பனுர் அடுக்களைக்குள் புகுந்து ஒரு குவளை கஞ்சிநீர் குடித்துக்கொண்டிருந்தார். அன்று இரவு சாப்பாட்டுக்கு அக்கிழவனை அழைக்கவில்லை. அப்பா சாப்பிட்டாரா என்று விசாரிக்கத் தாசில்தாருக்கு ஓய்வும் கிடைக்கவில்லை.

உடலை விற்று உயிரைக் காப்பாற்றி வந்தாள் ஒரு மங்கை. ஒரு நாள் ஒரு 'பார்டி'யை எதிர்பார்த்துக் கொண்டு அண்டை வீட்டிலிருந்து அவள் 'நாழி' அரிசி கடன் வாங்கினுள். ஆனுல் 'பார்டி' வருமுன் ஊரிலுள்ள நல்ல மனிதர்கள் யாரோ வந்து அவளுக்கு நல்லறிவு புகட்டி அவள் மனத்தைத் திருப்பிவிடுகிறுர்கள். அவள் திருந்திவிட்டாள். ஆனுல் பலன் என்ன? அவளுக்கு வாழ வழியில்லை. அன்று கடன் வாங்கிய நாழி அரிசியையும் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. உபதேசம் செய்தவர்கள் வாழ்வுக்கு வழிவகுக்கவில்லை. 'வெள்பொக்கம்' (வெள்ளம்) எனும் கதை தகழியின் மற்ற கதைகளிலிருந்து சிறிது மாறுபட்ட கருத்தைக் கொண்டது. ஆற்றில் வெள்ளம் வந்து கரையோரங்களை மூழ்கடிக்க, மக்கள் குடிபெயர்ந்து போய்விடுகிறுர்கள். ஆனுல் ஒரு வீட்டில் ஒரு நாய் மட்டும் வெளியேற மறுத்துவிடுகிறது. தனது எஜமானனின் வீட்டை வெள்ளத்திலிருந்து காப்பாற்ற அது அங்கேயே தங்கிவிட்டது போலும்! வீடு வெள்ளத்தில் மூழ்கமூழ்க நாய் கூரைமீது ஏறிவிடுகிறது. நீர்மட்டம் உயர்ந்துகொண்டேயிருக்கிறது. ஆற்று வெள்ளத்துடன் வந்துகொண்டிருக்கும் மரங்களும், மிருகங்களின் பிணங்களும் தனது வீட்டை அணுக, அந்த நாய் உரக்கக் குலைக்கிறது. சில நாட்கள் கழிந்தன. ஆனுல் நாய் கூரைமீதிருந்து கீழே இறங்கவில்லை. இறுதியில் வெள்ளம் அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிடுகிறது. வீடு சாய்கிறது. நாய் வெள்ளத்துடன் அடித்துச் செல்லப்படுகிறது. இந்தக் கதை மேரீ லோன் எஷன்பர்க் எனும் ஜெர்மானிய எழுத்தாளரின் 'கிராம்பாம்புலி' எனும் நாயின் கதையை நினைவுபடுத்துகிறது.

தகழி சிவசங்கர பிள்ளை நவீன காலத்துக் கதையாசிரியர்களுக்குள் மிகச் சிறந்தவர் என்றுல், மலையாளத்தில் முதன்முதலாகத் தோன்றிய முற்போக்கு எழுத்தாளர் திரு. கேசவ தேவ் ஆவார். அவர் இலக்கியம், அரசியல் இவ்விரண்டு துறைகளிலும் சிறிது பரபரப்பை உண்டுபண்ணியவர். ஏழை உழைப்பாளிகளின் வாழ்க்கையைச் சித்திரிப்பதே அவர் தம் நோக்கமாகக் கொண்டுள்ளார். பொருளாதாரத் துறையில் மனிதனின் உயர்வு தாழ்வைப் போக்குவதற்கென்றே அவர் இலக்கியத்தைப் பயன்படுத்துகிறுர்.

சமூக வாழ்க்கையைப் போலவே குடும்ப வாழ்க்கையையும் அவர் அழகாகச் சித்திரித்துள்ளார். அவரது கதைகள் தகழியின் கதைகளைவிடக் கலைவடிவில் மேலாக அமைந்துள்ளன. 'உஷஸ்' எனும் தொகுப்பில் 'அச்சனும் பாரியயும்' (அப்பாவும் மனைவியும்) எனும் கதையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆனுல், சில கதைகளில் நல்லொழுக்கத்தைப் பறைசாற்றும் முறை சிறிது விரசத்தைத் தருகிறது. பிரவாகம், உஷஸ் (வைகறை), ஜீவிதசக்ரம் (வாழ்க்கைச் சக்கரம்), தீனும்மா, சித்திரசாலை முதலியவை அவரது முக்கியக் கதைத் தொகுப்புகள்.

மலையாளக் கதைகளுக்கு ஓர் உலகக் கண்ணுேட்டத்தை அளித்தவர் எஸ். கே. பொற்றைக்காடு. அதற்குக் காரணம் அவர் ஒரு பிரயாணி என்பதுதான். அவர் உலகம் முழுதும் சுற்றிப் பார்த்தவர். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வதியும் மக்களுடன் தொடர்பு கொண்டவர். ஆகையால் அவரது கதைகளுக்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. பொற்றைக்காட்டின் பிரயாண வருணனைகளைக் கொண்ட நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவைகள் Travelogue எனும் பிரயாண இலக்கியமாக மலையாளத்தைச் சிறப்பிக்கின்றன. அவரது கதைகளைப் படிக்கும்பொழுது, வாசகர்கள் கேரளத்தின்—ஏன்?—பாரதத்தின் எல்லைகளைக் கூடத் தாண்டிச் சென்று உலக மக்களுடன் உறவு கொண்டாடுகிறுர்கள். சமூகத்தைப் போலவே அவர் இயற்கைக்கும் இடமளித்துள்ளார் தமது கதைகளில். இயற்கை வருணனைகளும், வெளிநாட்டுச் சூழ்நிலைகளும் அவர் கதைகளில் மிகுதியாகக் காணப்படும். ஆனுல், மலையாளிகளாகிய வாசகர்கள் அந்தச் சூழ்நிலைகளையும், அவைகளில் நடமாடும் பாத்திரங்களையும் அவ்வளவாக ரசிக்க முடியாது என்று குறைகூறுகிறுர் ஒரு விமரிசகர். இந்

தக் கருத்து ஏற்கத்தகாதது. ஏனென்ருல் ஸ்காட், தாக்கரே, டிக்கன்ஸ், தமாஸ் ஹார்டி முதலிய உலக மேதைகளின் படைப்புக்களை உலகத்தில் எங்கும் மக்கள் படித்து மகிழ்கிருர்கள். அதுபோல் இந்தியாவின் பல் வேறு மொழிகளிலிருந்து மேனுட்டு மொழிகளுக்கும் கதைகளும் நவீனங்களும் மொழிபெயர்க்கப்படுகின்றன. இதற்குச் சூழ்நிலை தடையாக இல்லை. கதையாசிரியர் மேற்கொள்ளும் பிரச்சினைகளும், அவைகளைக் கையாளும் முறையும்தான் முக்கியமானவை. வாசகர்களின் உள்ளத்தைத் தொடும் கதைகள் எங்கு யார் எழுதியனவாக இருப்பினும். எல்லோரும் ரசிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. கேரளத்தின் சூழ்நிலையைக் கொண்டும் அவர் சிறந்த கதைகள் பல எழுதியிருக்கிருர்.

கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடுகளையும், கிறிஸ்தவப் பாதிரிமாரின் போக்கையும் வன்மையாகக் கண்டிக்கும் ஒரு கிறிஸ்தவக் கதையாசிரியர் பொற்குன்னம் வர்க்கி. அவரது கதைகள் சாதாரண மக்களுங்கூடப் படித்து ரசிக்கக்கூடியவை; சாதாரணச் சூழ்நிலைகள் எளிய நடை. சமூக சீர்திருத்தத்தில் அவர் காட்டும் ஆவேசத்தால் அவர் சிலவேளைகளில் தாம் எழுதுவது கதையே தவிரக் கட்டுரையோ, பிரசங்கமோ அல்ல என்பதை மறந்து விடுகிருர். அவரது கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப்பட்ட பிரச்சினையை மனத்திற் கொண்டு எழுதப்பட்டதாகும். வெளிச்சத்தை நோக்கி' எனும் கதையில் தற்போதைய கல்வி முறையைக் கண்டித்திருக்கிருர். அதில் ஆல்ஜிப்ரா, ஜியாமட்ரி முதலிய விஷயங்களில் பயிற்சி பெற்ற ஒரு வாலிபன் தான் வேலைக்காக அமர்ந்த மரத்தொட்டியில் மரத்தின் பரிமாணக் கணக்குப் போடத் தெரியாமல் தவிக்கிருன். கேரளத்தில், குறிப்பாகத் திருவிதாங்கூரில் நடந்த அரசியல் போராட்டங்களைச் சூழ்நிலையாகக் கொண்டு மன்னனின் கொடுங்கோல் ஆட்சியையும், திவானின் அடக்குமுறைத் திட்டங்களையும் வன்மையாகக் கண்டிக்கும் கதைகள் பலவும் அவர் எழுதியிருக்கிருர். கிறிஸ்தவப் பாதிரிமாருடன் அவர் எப்போதும் சமரசம் செய்துகொள்ளவே மாட்டார் போல் இருக்கிறது!

காரூர் நீலகண்ட பிள்ளை சமூகப் பிரச்சினைகளை வாசகர்கள் முன்னல் நிற்கவைத்துக் குறிபார்த்துச் சுடும் திறமை படைத்தவர். இவர் ஒரு பள்ளியாசிரியர். ஆசிரியர்களின் துன்பநிலையைச் சில கதைகளில் அவர் மிகவும் உருக்கமாகச் சித்திரித்துள்ளார். இதற்குப் 'பொதிச்சோர்' (சாப்பாட்டுப் பொட்டலம்)எனும் கதையை உதாரணமாகக் கூறலாம். ஒரு மாணவன் தனது சாப்பாட்டுப் பொட்டலத்தை யாரோ திருடிவிட்டார்கள் என்று மிகவும் வருத்தத்துடன் உபாத்தியாரிடம் முறையிடுகிருன். அதற்கு உபாத்தியாயரும் மிக வருத்தத்துடன் 'நான் தேடச் சொல்கிறேன்' என்று கூறி மாணவனைத் தேற்ற முயல்கிருர். ஆனுல் பொட்டலம் அகப்படவில்லை. இந்தத் தகவல் மானேஜர் காதுக்கு எட்டியது. அன்று மாலையில் அந்த உபாத்தியாயர் மானேஜருக்கு ஒரு கடிதம் எழுதுகிருர். அதாவது சாப்பாட்டுப் பொட்டலத்தைத் திருடியவன் வேறு யாருமல்ல; இந்த உபாத்தியாரேதான். 'மாணவன் பகல் ஒருவேளை சாப்பிடவில்லை என்ருல், ஒன்றும் கெட்டுவிடாது. அவன் மாலையில் வீட்டுக்குச் சென்று வயிருரச் சாப்பிடுவான். ஆனுல் எனக்கு இரண்டு நாட்களாக உணவில்லை. வீட்டில் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கும் வழியில்லை. ஏதாவது தில்லுமல்லு பண்ணவில்லையானுல், வகுப்பு நடக்காது. மன்னிக்க வேண்டும்.' இதுவே அவர் கடிதத்தின் வாசகம்!

வைக்கம் முகமது பஷீர் அதிகமாகக் கல்வி பயிலாத ஓர் ஆசிரியர். ஆனுல் தற்போதைய கதை—இலக்கியக் கருத்தர்களின் முன்வரிசையில் அவர் இடம் பெற்றுவிட்டார். கதையின் இலக்கணத்தையோ, சமூகத்தின் சட்டதிட்டங்களையோ இவர் சிறிதும் மதிக்கமாட்டார். சுருங்கச் சொன்னுல் மிகவும் வரம்பு மீறிய போக்கு இவருடையது எனலாம். 'ரியலிச'த்தின் எல்லைகளைத் தாண்டி சர்-ரியலிசத்துக்குள் புகுந்து வெகு தூரம் பிரயாணம் செய்தவர் இவர் மலையாளத்தில் தற்போதைய எழுத்தாளர்கள் யாரும் இதற்கு விதிவிலக்கு அல்ல). ஆகையால் அவர் படைப்புகளில் ஆபாசக் கதைகள் பல இருப்பதில் வியப்பில்லை. ஆயினும் அவர் எழுதியுள்ள நல்ல கதைகள் அவரது கெட்ட கதைகளை மன்னித்துவிடும். இஸ்லாமிய மக்களின் மூடநம்பிக்கைகளை அவர் பற்பல சிறுகதைகளிலும், நவீனங்களிலும் வாசகர்கள் குலுங்

கக் குலுங்கச் சிரிக்கும்படி ஏளனம் செய்திருக்கிறார். 'ஐஷுக்குட்டி', முச்சீட்டு காரன்றெ மகள்' முதலிய கதைகள் இவருடைய படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை.

'உரூப்' எனும் புனைபெயருக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் பி. ஸி. குட்டி கிருஷ்ணன் கேரளத்தின் பல பழங்காலத் தரவாடுகளின் வாழ்க்கை விசித்திரங்களைச் சித்திரித்திருக்கிறார். அவரது கதைகளில் காணும் சூழ்நிலையைப் பிறமொழி மக்கள் சாதாரணமாகச் சுவைக்க முடியாது. ஏனென்றால், அது கேரளத்தின் பண்பாட்டுடன், குறிப்பாக ஒரு தனிப்பட்ட சமூகத்தினரின் பரம்பரையான வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் சிக்குண்டது. மிகுந்த செல்வமும், அந்தஸ்தும் பொருந்திய 'தரவாடுகள்' இந்த முற்போக்குக் காலத்தில் எப்படிச் சீர்குலைகின்றன என்பதை அவர் தமது கதைகளில் அழகாக வருணிக்கிறார். கேரளத்தில் தொன்றுதொட்டே அமுலில் இருந்துவரும் மருமக்கள் தாயத்தை-அதாவது மருமகனுக்குச் சொத்துரிமை வழங்கும் தீய சமூக சட்டத்தை அவர் 'சர்வேக்கல்' (எல்லைக்கல்) எனும் கதையில் சித்திரித்திருக்கிறார்.

மேலும் முட்டத்து வர்க்கி, எம். டி. வாசுதேவன் நாயர், கே. டி. முகம்மது, ஸி. ஏ. கிட்டுண்ணி, ஜோஸ் சாலங்காடி, பெருங்க தாமஸ், வல்லச்சிற மாதவன், உண்ணி கிருஷ்ணன் புதூர், பம்மன், போஞ்ஞிக்கரை இராபி, கே. பாலகிருஷ்ணன், ஸி. என். ஸ்ரீகண்டன் நாயர், கோவிலன், நந்தனார், மலையாற்றூர் இராமகிருஷ்ணன், செறுகாடு, படியத்து, ஈ. எம். கோவூர், டாட்டாபுரம் சுகுமாரன், டி. கே எல். வடுதலை கிளிமானூர் விசுவம்பரன், பாறப்புறத்து, மற்றும் பல எழுத்தாளர்கள் மிகத் திறம்படச் சமூகக் கதைகள் எழுதி வருகிறார்கள். கே. டி. முகம்மது 1951 ஆவது ஆண்டில் நடந்த அகில இந்தியச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றார். எம் டி. வாசுதேவன் நாயர் 1954 ஆவது ஆண்டில் 'மாத்ருபூமி' நடத்திய ஒரு போட்டியில் பரிசு பெற்றார். அவர் இப்பொழுது மிக விரைவாகப் புகழேணியில் ஏறிக்கொண்டிருக்கிறார். அவர் அண்மையில் எழுதிய 'இருட்டின்றெ ஆத்மாவு' (இருளின் ஆன்மா) மிகச் சிறந்த ஒரு மனத்தத்துவக் கதையாகும். அக்கதை அவருக்கு வெற்றி வாகை சூடிவிட்டது என்றே சொல்லலாம்.

கதை – இலக்கியத்துக்குப் பெண்களின் கைங்கரியமும் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கிறது. லலிதாம்பிகா அந்தர்ஜ்ஜனம், கே. சரஸ்வதி அம்மா, சரளா ராமவர்ம்மா, இலட்சுமி குட்டி—ஆகியவர்கள் சமூகத்தில் பெண்களின் அவலநிலையையும், ஆண்கள் அவர்கள் மீது செலுத்தும் ஆதிக்கத்தையும் விளக்கும் பொருட்டு பல நல்ல கதைகள் எழுதியிருக்கிறார்கள். திருமதி சரஸ்வதி அம்மாவின் கதைகளில் ஆண்கள் மீது உள்ள குற்றச்சாட்டுகள் மிதமிஞ்சுகின்றன ஆயினும் எல்லோர் கதைகளும் கலைவனப்புடன் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

நகைச்சுவைக் கதை எழுத்தாளர்களுக்குள் ஈ. வி. கிருஷ்ணபிள்ளை, சஞ்சயன், வேங்கயில் குஞ்ஞிராமன் நயனார் — ஆகியவர்களின் கதைகளும், குணச்சித்திர வருணைகளும் மிகச் சிறந்தவை எனலாம். ஈ. வி. கிருஷ்ணபிள்ளையின் 'சிரியும் சிந்தையும்' (சிரிப்பும் சிந்தனையும்) எனும் குணச்சித்திர வருணை

சவுந்தர் அயர்ன் ஒர்க்ஸ்

உரிமையாளர்: S.N.S. நீடின்பன்

10, வால்டாக்ஸ் ரோடு, மதராஸ்-3.



தயாரிப்பவைகள்:

இரும்பு கேட்டுகள்,
சிங்காரச் சன்னல்கள்,
நீர்த்தொட்டிகள்,
நெல் வேவிப்பு பாய்லர்கள்,
வாளிகள்,
குடங்கள்
முதலியன.



(Character sketch) களின் தொகுப்பு மிகவும் பெயர் பெற்றதாகும்.

இரண்டு பேர் ஒரு படகில் பிரயாணம் செய்கிறார்கள். ஒருவன் மேல்சாதி; மற்றவன் கீழ்ச்சாதி. படகு ஆற்றின் மத்திக்கு வந்ததும் கவிழ்ந்து விட்டது. பிரயாணிகள் இரண்டு பேரும் தண்ணீரில் கிடந்து உயிருக்காகப் போராடுகிறார்கள். இரண்டு பேரும் வயிறு வெடித்துவிடும்படி தண்ணீர் குடிக்கிறார்கள். ஆனால் அந்த மேல்சாதியைச் சேர்ந்த சீமானுக்கு ஒரே கவலை, 'நான் குடிக்கும் அதே தண்ணீரை இவனும் குடிக்கிறானே' என்று. உடனே அவர் அவனுக்குத் தண்ணீரைக் கலக்கிக் குடிக்கும்படி கட்டளையிடுகிறார். வேங்கயில் குஞ்ஞிராமன் நயனார் எழுதியுள்ள ஒரு சிரிப்புக் கதையில் வரும் நிகழ்ச்சி இது. கேரளத்தில் சாதி வேறுபாட்டின் திருவிளையாடலை இது நன்கு விளக்குகிறதல்லவா?

சிறுகதையின் வளர்ச்சிக்குக் கேரளத்தின் பத்திரிகைகள் மிகுதியும் ஊக்கமளித்திருக்கின்றன. அவைகளில் மாத்ருபூமி, மலையாள மனோரமா, கௌமுதி, மலையாள ராஜ்யம், தேசபந்து, தீபிகை, ஜயகேரளம் (சென்னை)– ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். தவிர, சிறுகதைகளுக்கென்று தனிப் பத்திரிகைகளும் வெளியாகின்றன. திறமைசாலிகளான புது எழுத்தாளர்களுக்கு அரங்கேற்றம் நடத்தி வெகு விரைவில் அவர்களுக்குப் புகழ் தேடிக் கொடுப்பதைத் தங்களது நோக்கமாகக் கொண்ட இப்பத்திரிகைகளின் நற்பணி மிகவும் பாராட்டத்தக்கது எனலாம்.

சிறுகதைகளுக்கு எத்தனையோ இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் மனிதன் தனது சூழ்நிலையுடன் போராடுவதும், அந்தப் போராட்டத்தில் அவனது நெஞ்சியல்புகள் மின்னித் துடிப்பதும் தான் நவீன காலக் கதைகளின் உயிர் நாடியாக அமைந்துள்ளன. மலையாளக் கதைகளும் இந்த உண்மையை அடிப்படியாகக் கொண்டே எழுகின்றன. ஒவ்வொரு கதையும் கேரள மக்கள் வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் புனையப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு கதையும் எழுப்பும் பிரச்சினை அந்தக் கதையையும், அதன் சூழ்நிலையையும் மிஞ்சி நிற்கிறது. எனவே அது மனிதனின் பொதுப் பிரச்சினையாக ஆகிவிடுகிறது. மலையாளக் கதைகளின் இன்றைய போக்கைக் கவனித்தால், அது உலகத் தரத்தை எட்டிப் பிடிக்கும் நாள் அதிக தொலைவில் இல்லை என்றே கூறிவிடலாம்.

Madura South India Corporation (Private) Ltd.

GOVERNMENT CONTROLLED STOCKISTS: **IRON & STEEL**

Distributors: **M. M. M.** *make*

* Single Phase and
* Three Phase Electric Motors
* Polishing Lathes
* Bench Grinders etc.

P. B. No. 1823

80, Sembudoss St., MADRAS-1.

Telegrams: 'MUSIC' Telephone: 23291.

தெலுங்கு வீரப்பெண்மணிகள்

[சல்லா. இராதாகிருஷ்ண சர்மா]

"பாவையர் பயிலாப் படிப்பும் உண்டோ,
பரிவுடன் பயிற்று வித்தால்?"

என்று ஓர் தெலுங்குக் கவிஞர் பாடியுள்ளார். ஆம்; நயமாகச் சொல்ல வேண்டும். அதை அன்புடன் கூறவேண்டும். அப்பொழுது பெண்கள் பயிலாத படிப்பே இருக்காது! நம் நாட்டின் வரலாற்றைப் பார்த்தால் இது உண்மை என்றே புலப்படும். போர்க்களத்திற்குச் சென்று விரோதிகளுடன் கடும்போர் புரிந்து வெற்றி யடைந்த வீரவனிதைகள், மனத்தைக் கவரும் நல்ல கவிதை பாடிய கவிஞர்கள், மதுரபக்தியைக் கையாண்டு கடவுளையும் தம் வசமாக்கிக் கொண்ட பக்தைகள், மக்கள் நலத்தையே இலட்சியமாக வைத்துக்கொண்டு அரசு புரிந்த இராணிகள்—இவ்வாறு எத்தனையோ பேர் சிறப்பு மிக்க பெண்மணிகளாகத் திகழ்ந்திருக்கின்றார்கள்.

மதுரை மங்கம்மா என்னும் பெயரைக் கேட்டவுடனே அந்த அம்மையார் கட்டிய சத்திரங்கள், வெட்டிய குளங்கள் முதலியவை நினைவுக்கு வரும். மங்கம்மாவின் பெயர் கேட்காதவர்கள் தமிழகத்தில் இருக்கமாட்டார்கள் என்றே சொல்லலாம். அது போலவே தெலுங்கு நாட்டில் இராணி ருத்திரம்மாவின் பெயரைக் கேளாதவர் கிடையார். வீரப்பெண்மணியாகிய ஜான்சி லட்சுமிபாய் அம்மையாரின் பெயரும் புகழ் பெற்றதே. இவர்களெல்லாம் அழியாப் புகழ்பெற்ற வீரமணிகள். ஆனால் வரலாற்றில் ஏறாத வீரப் பெண்மணிகள் எத்தனை எத்தனையோ பேர் இருக்கின்றார்கள்.

இவர்களில் சிலர் தம் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுப் போரிட்டவர்கள்; உயிரைத் தியாகம் செய்தவர்கள். மற்றும் சிலர் நாட்டின் நன்மைக்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள். இன்னும் சிலர் அரசகுலத்தினரைக் காப்பாற்றுவதற்காகத் தியாகம் செய்தவர்கள். போர் புரிந்த வீரமணிகளும் இவர்களில் உண்டு.

வரலாற்றுப் புகழ் பெறாத சில ஆந்திர வீரப் பெண்மணிகளின் வாழ்க்கைச் சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை.

பதின்மூன்றும் நூற்றாண்டில் நெல்லூரைத் தலைநகராக்கிக் கொண்டு அரசு புரிந்த மனுமசித்தி என்னும் அரசருக்கு ஒரு மந்திரி இருந்தார். அவரது பெயர் திக்கன்னா. அவரை 'இரண' திக்கன்னா என்றும், 'கடக' திக்கன்னா என்றும் அழைப்பதுண்டு. திக்கன்னா வெறும் மந்திரி மட்டுமல்ல; மாபெரு வீரருங்கூட. அவர் மனைவியார் சானம்மாவைப் பற்றி ஒரு வரலாறு உண்டு.

ஒரு சமயம் திக்கன்னா போர்க்களத்திலிருந்து வெற்றி பெறாமல் வீட்டிற்குத் திரும்பிவந்துவிட்டார். அவரைப் பார்த்து ஊரெல்லாம் சிரித்தது; வாய்க்கு வந்தபடி பேசியது.

திக்கன்னா வீட்டிற்கு வந்தவுடனே அவருக்குக் கேட்கும்படி அவர் தகப்பனார், "இவனும் ஓர் பிள்ளைதானா? குடும்ப கௌரவத்தைப் பாழாக்கி விட்டானே" என்று சொன்னார். என்றுமே அவர் அப்படிப் பேசியது கிடையாது. திக்கன்னா ஆச்சரியப் பட்டார்.

பின்னர் அவர் குளிக்கச் சென்றார். அங்கே மறைவுக்காக ஒரு கட்டில் வைக்கப் பட்டிருந்தது. கட்டிலுக்குப் பின்புறத்தில் வெந்நீர்த் தவலை இருந்தது. "இதெல்லாம் என்ன? யாருக்கு?" என்று கேட்டார் திக்கன்னா, தன் மனைவியைப் பார்த்து.

"நேற்று வரையில், இந்த வீட்டில் உங்கள் தாயும் நானும் தான் பெண்கள் என்று நினைத்தோம். போர்க்களத்திலிருந்து ஓடிவந்த உங்களோடு இப்போது இந்த வீட்டில் மூன்று பேர் பெண்கள். போர்க்களத்திலிருந்து திரும்பும்போது இல்லாத வெட்கம் இப்போது வந்துவிட்டதா? இதோ மஞ்சள் உருண்டை வைக்கப்பட்டிருக்கிறது. நன்றாகத் தேய்த்துக் குளியுங்கள்" என்று

சானம்மா பரிகாசமாகச் சொன்னாள். கணவன் பேரில் எவ்வளவோ அன்பு கொண்டிருந்த அந்த மங்கை அப்படிப் பேசியது திக்கன்னாவுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. எப்படியோ குளித்துவிட்டு அவர் சாப்பிடச் சென்றார்.

சாப்பிடும் போது தாய் தோயாத தயிரை ஊற்றினாள். "என்னம்மா இது?" என்று கேட்டார் திக்கன்னா. அதற்கு அந்த அம்மை, "திக்கா, போர்க்களத்தில் வெற்றி பெறாமல் வீட்டிற்குத் திரும்பி வந்த ஆண்மகனைப் போலப் புல்மேயச் சென்ற பசுவும் மேய வில்லை; அதன் பாலும் தோய வில்லை" என்றாள்.

இவ்வாறு ஒரு நிமிடங்கூட வீட்டில் தங்கமுடியாத திக்கன்னா, உடனே போர்க்களத்திற்குப் புறப்பட்டார். இந்த முறையும் வெற்றிபெறவில்லை. ஆனால் எத்தனையோ வீரர்களைக் கொன்று, கடைசியில் திக்கன்னா போர்க்களத்திலேயே வீரசுவர்க்கம் அடைந்தார்.

அதைக் கேட்டு அவர் மனைவி சானம்மா உடன்கட்டை ஏறினாள். கடுமையாகப் பேசி, சானம்மா போர்க்களத்திற்குத் தன் கணவனை அனுப்பியதால், திக்கன்னா இன்றுங்கூட இரண திக்கன்னா என்று புகழோடு அழைக்கப்படுகிறார். இவ்வாறு கணவனுக்குப் புகழ் தேடிக்கொடுத்தாள் சானம்மா. தானும் புகழைத் தேடிக்கொண்டாள்.

தெலுங்கு நாட்டின் வரலாற்றில் "பல் நாடு" வீரர்களின் வீரச்செயல்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. அவ்வீரர்களில் பாலசந்திரன் என்பவன் ஒருவன். அவன் ஓர் இளைஞன்.

பாலசந்திரனின் தந்தையார் போர்க்களத்திற்குச் சென்றிருந்தார் பாலசந்திரனும் போருக்குச் செல்ல விரும்பினான். அப்போது அவனுக்கு வயது பதினேழுதான். அப்போதுதான் அவனுக்கு மணமாகியிருந்தது.

அந்த இளைஞன் தாயிடம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான். வீரனைப் பெற்ற தாய்க்கு வாழ்க்கையில் சுகம் இல்லை என்று அந்தத் தாய் கவலைப்பட்டாள். போர்க்களத்திற்குப் போகவேண்டாம் என்று பிள்ளையைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். ஆனால் அவன் அதைக் கேட்கவே யில்லை. "அப்படியானால் உன் மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு போருக்குச் செல்" என்றாள் தாய். பாலசந்திரனின் மனைவி மாஞ்சாலா மிகவும் அழகானவள். அவள் முகத்தைப் பார்த்த பின்னர் பாலசந்திரன் சண்டைக்குப் போக விரும்பமாட்டான் என்று பாலசந்திரனின் தாய் நினைத்தாள்.

தாய் சொன்னபடி பாலசந்திரன் மனைவியிடத்திற்குப் போனான். அவளைப் பார்த்த பிற்பாடு போர் விஷயத்தை அவன் மறந்துவிட்டான். அதைப் பார்த்து மாஞ்சாலாவால் சகிக்க முடியவில்லை. "என்னோடு நீங்கள் பேசிக்கொண்டே யிருந்தால் என்ன பயன்? நீங்கள் போர்க்களத்திற்குச் சென்று விரோதிகளை வென்று அழியாப் புகழ் பெற வேண்டும்" என்று கூறினாள் மனைவி. பாலசந்திரன் மனத்தில் மறுபடியும் வீர எண்ணங்கள் உதித்தன. அவன் உடனே போர்க்களத்திற்குப் புறப்பட்டான். கடும் போர் புரிந்தான். அவன் வீரத்தைப் பார்த்து அவனை 'அபிமன்யு' என்று போற்றினார்கள். கடைசியில் பாலசந்திரன் அந்தப் போர்க்களத்திலேயே மடிந்தான். அந்த வீரமரணத்தைக் கேட்டு மாஞ்சாலா மகிழ்ச்சியடைந்தாள். தான் ஓர் சிறந்த வீரனின் மனைவி என்று சந்தோஷப்பட்டாள். அப்போது அவளுக்கு வயது பதினாறுதான் இருக்கும்.

இனி, சங்கம்மா என்னும் மற்றொரு பெண்மணியின் தியாகத்தைக் காண்போம்

காடாரெட்டி என்பவர் ஒரு பெரிய தளவாய். அவர் மாபெரு வீரர். விஜயநகர சமஸ்தானத்தில் அவர் தளவாயாக இருந்தார்.

சக்கரவர்த்தியின் கட்டளைப்படி காடாரெட்டி இராயச்சூர் என்ற இடத்தில் ஒரு கோட்டை கட்டத் தொடங்கினார். நல்ல வேளை பார்த்து, கோட்டைக்குக் கடைகால் போட்டார்கள். சுவர்கள் எழுந்தன. ஆனால் கோட்டை கொத்தளம் வேலைமட்டும் ஆகவில்லை. உச்சி மாடம் கட்டிக்கொண்டே யிருக்கும்போது, அது நடுவிலே விழுந்து கொண்டிருந்தது. அதற்குக் காடாரெட்டி கவலைப்படவில்லை. மறுபடியும் கொத்தளத்தைக் கட்டச் செய்தார். அது மறுபடியும் விழுந்து விட்டது. இவ்வாறு, கட்டுவதும்

விழுவதுமாக நாலைந்து தடவை ஆயிற்று. காடாரெட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை. கோட்டை வேலை பூர்த்தியாகாதோ என்னும் கவலை அவனுக்கு ஏற்பட்டது. அப்படி இருக்கையில் கோட்டை வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு தொழிலாளிக்கு சாமி வந்தது. அவன் "இந்த இடத்தில் நான் வெகு நாட்களாக இருந்துகொண்டிருக்கிறேன். நான் ஒரு சக்தி. கொத்தளங்களை நான்தான் கீழே தள்ளுகிறேன். எனக்குப் பலி வேண்டும். அப்போதுதான் நீங்கள் கோட்டை கட்டலாம்" என்று சொல்லிற்று.

இந்தச் செய்தி ஊரெல்லாம் பரவியது. ஆனால் பலிதர யார் முன்வருவார்கள்?

இந்தச் செய்தி சங்கம்மா என்னும் பெண்மணிக்கும் தெரியவந்தது. அப்போது அவளுக்கு ஓர் ஆண்பிள்ளை பிறந்து மூன்று நாட்கள் ஆகியிருந்தன. சங்கம்மா யோசித்தாள். "கோட்டை வேலை முடிந்தால், அது மக்களுக்குப் பயன்படும். மரணம் இன்று இல்லாவிட்டால், நாளைக்காவது நிச்சயமாக வரும். மக்களின் நலத்திற்காக மரணம் அடைவதுதான் சிறந்த மரணம்" என்று சங்கம்மா முடிவு செய்தாள். பெற்ற பிள்ளை மேலும் அவள் அவ்வளவு அன்பு காட்டவில்லை. மக்களின் நலத்திற்காக இவனும் மரணமடையட்டும் — என்றுதான் அவள் நினைத்தாள்.

சங்கம்மா தன் கைக்குழந்தையுடன் கோட்டை கட்டும் இடத்திற்குச் சென்றாள். ஒரு முறை தன் குழந்தையின் முகத்தைப் பார்த்தாள். என்ன நினைத்தாளோ என்னவோ, ஆழமாக வெட்டியிருந்த கடைகால் பள்ளத்தில் குதித்துவிட்டாள். வேலையில் மூழ்கியிருந்த தொழிலாளர்கள் இதைக் கவனித்து அதிசயப்பட்டார்கள். அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டார்கள். தொழிலாளர்கள் அந்தத் தாயின் மேலும் குழந்தை மேலும் செங்கல் வைத்துச் சுவர் கட்டத் தொடங்கினர். சில நாட்கள் கழிந்தன. சுவர்கள் எழுந்தன. ஆனால் இந்தத் தடவை அவை விழவில்லை. கொத்தள வேலையும் பூர்த்தியாகிவிட்டது. அதற்கு இராய்ச்சூர் கோட்டை என்னும் பெயர் ஏற்பட்டது.

காடாரெட்டி இராய்ச்சூர் கோட்டையிலிருந்து அரசுபுரிந்தான். இப்போது அவர் காடாபூபதியாகிவிட்டார். சங்கம்மா செய்த அந்த அபூர்வ தியாகத்தைமட்டும் மறக்கவில்லை. இன்றைக்கும் சங்கம்மா பலியான இடத்தில் எழுந்த கொத்தளத்தை 'பாலிந்த சங்கம்மா கோட்டை' என்று மக்கள் மரியாதையுடன் அழைத்துவருகிறார்கள்.

சங்கம்மா தன்னைப் பலிகொடுத்துக் கொண்ட கதை இந்தக் காலத்து மக்களுக்கு மூடநம்பிக்கை என்று தோன்றலாம். இது ஒரு பெரிய வீரமா என்றும் கேட்கலாம். ஆனால் இது வெகு காலத்துக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம். நிரம்ப படித்தவர்கள்கூட அமானுஷ்யமான நிகழ்ச்சிகளில் நம்பிக்கை கொண்டிருந்த காலம் அது. தாங்கள் வாழும் கோட்டை சரியாக முடியவில்லையே என்று நாட்டுப் பற்று மிகுந்த ஒரு பெண் கவலைப்பட்டாள். யாருக்கோ சாமி வந்து எதையோ சொன்னான் என்று அவள் நம்பியது மூடநம்பிக்கையாக இருக்கலாம். ஆனால் தான் வாழும் ஊருக்காக – அந்த ஊர், அந்தக் கோட்டை நன்கு விளங்கவேண்டும் என்பதற்காக அவள் தன் உயிரைத் தியாகம் செய்தது வீரமல்லவா?

இவ்வாறு வரலாற்றுப் புகழ் பெறாத வீரப்பெண்மணிகள் இன்னும் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள்: இராஜகோபாலம்மா, முத்தம்மா, நாகம்மா, மல்லம்மா, இரமணம்மா, மற்றும் பலர் தம் நாட்டின் நலத்திற்காகவோ தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டோ தியாகம் செய்தார்கள். இவர்கள் நினைவையெல்லாம் நாம் போற்ற வேண்டும். இவர்களின் வீரவரலாறுகளை நாம் தெரிந்து கொண்டு பயனடைய வேண்டும்.

கேரளம் தந்த

கிருஷ்ணன் நாயர்

[நா. ஜகந்நாதன், எம். ஏ.]

*சி*ரித்த முகத்துடனும், எப்போதும் வெற்றிலை மென்றுகொண்டிருப்பதால் சிவந்த வாயுடனும், சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் 32-ஆம் எண் அறையில் உங்களை ஒருவர் வரவேற்கிருர் என்ருல், அவர் தான் டாக்டர் எஸ். கே. நாயர் என்று நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இந்த ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரால் பதக்கம் பெறும் பெருமை பெற்ற டாக்டர் அவர்கள், பிற மொழிகளில் தமிழுக்குத் தொண்டு புரிந்தவர் என்று விருது பெறுகிருர். மலையாளத்தில் பல நல்ல நூல்களை இயற்றியுள்ள டாக்டர் நாயர், தமிழிலிருந்தும் சில நூல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ளார். இப்படிப்பட்ட மலையாளப் பேரறிஞர் தம் இள வயதில் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியபொழுது, மலையாளம் தவிர மற்ற பாடங்களைக் கற்பிக்கும்படியான நிலைமையில் இருந்தார் என்ருல், அது வியப்பிற்குரியது தான்! இவ்வறிஞரின் வாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், இப்படிப்பட்ட சுவைமிகு நிகழ்ச்சிகள் பல இருக்கும்.

ஆலவாய் என்னும் ஊரில் 1917-மார்ச்சு 26ஆம் நாள் பிறந்த கிருஷ்ணன் நாயர் தம் பள்ளிப் பருவத்திலேயே மலையாளப் புலமையைக் காட்டினுர் என்பதை அவர் பள்ளி இறுதித் தேர்வில் மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் முதலில் நின்ருர் என்பதிலிருந்து அறிந்துகொள்ளலாம். மேலும் இவர் பள்ளியில் மாணவனுக இருந்தபொழுதே கவிதைகள் இயற்றினுர் என்றும் தெரிகிறது. ஆலவாயில் யூனியன் கிறிஸ்துவக் கல்லூரியில் இண்டர் வகுப்புகளில் படிக்கும்போதே, மாணவர்களுக்கு மலையாளம் கற்பிக்கும் பேறு பெற்ருர் என்பதிலிருந்து இவர் சிறு வயதிலேயே மொழியியல் வல்லுநர் ஆவார் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன என்று ஊகிக்க இடமுண்டு. இந்த எண்ணத்தை மெய்ப்பிக்கும் வகையில் இவர் இண்டர் வகுப்பின் இரண்டாம் ஆண்டில் படிக்கும்போதே, மலையாளப் பாடப் புத்தகங்களுக்கு 'நோட்ஸ்' என்று இந்நாளில் வழங்கப்படும் உரைகளை எழுதினுர்; இதிலிருந்து பெற்ற வருவாயைக் கொண்டுதான் இவர் கல்லூரிப் படிப்பிற்கான செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாத காரணத்தால் இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் தேர்வுக்கு எழுத முடிவு செய்தார். ஒரே ஆண்டில் தொடக்கப் பரீட்சையும், இறுதித் தேர்வும் எழுதி முடித்தார்; முதல் வகுப்பில் தேறினுர். உள்ளூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் மலையாளம் தவிர மற்ற பாடங்களைப் பயிற்றுவிக்கும் பெருமை (!) பெற்ருர். ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விதிவிலக்குச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு, 1943-ஆம் ஆண்டில் மலையாளத்தில் எம். ஏ. பட்டம் பெற்ருர்.

அதற்கு அடுத்த ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்த இவர், தன்கீழ் இதே பல்கலைக்கழகத்தில் பல ஆராய்ச்சி மாணவர்கள் சேர்ந்து தனக்கும் மலையாளத் திற்கும் பெருமை தேடித் தரவிருக்கிருர்கள் என்பதை எவ்வாறு அறிய முடியும்? இவர் 'கேரளத்தின் கிராமிய நாடகம்' (Folk-drama of Kerala) என்பதைத் தன் ஆராய்ச்சிக்குரிய பொருளாக, எடுத்துக்கொண்டார். திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் சில ஆண்டுகள் விரிவுரையாளராக இருந்த பின்னர், இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச்சேர்ந்தது 1947-ஆம்ஆண்டிலாகும். 1951-ஆம் ஆண்டில் இவரது ஆராய்ச்சியின் பயனுக டாக்டர் (Ph. D.) பட்டம் பெற்ருர். மலையாளத்தில் 'டாக்டர்' (Ph. D.) ஆராய்ச்

சிப் பட்டம் பெற்றவர்களில் இவர்தான் முதல்வர் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. 1952-ல் இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மலையாளத் துறைத் தலைவரானார்.

இளவயதிலேயே கீட்ஸ், ஷெல்லி, தாகூர், கபீர் போன்ற கவியரசர்களால் கவரப்பட்ட இவ்விளங் கவிஞர் முதலில் காதல் பாடல் களையே புனைந்தார். இக்கவிஞர்களின் கவிதைகளை மலையாளத்தில் மொழிபெயர்க் கத் தொடங்கிய இவர், சொந்தமாக எழுதும் பணியை விட்டுவிட்டு மொழிபெயர்ப் பிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தினார். பள்ளி நாட்களிலேயே இவர் "கிறிஸ்துவின் பிம்பம்" (Imitation of Christ) என்பதை ஆங் கிலத்திலிருந்து மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார். பிறகு கவிதைகள் இயற்று வதினின்று சொந்தமாகக் கட்டுரைகள், சிறு கதைகள், திறனாய்வுக் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

இவர் எழுதி வெளியான முதல் நூல், "நான் கண்ட சாகித்யகாரன்மார்" (நான் கண்ட இலக்கிய வித்தகர்கள்) என்ற மலையாள நூலாகும்; இது மிகவும் அதிகமாக விற்பனை யான ஒரு நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இரண்டு நாவல்கள், ஐந்து ஆராய்ச்சி நூல்கள், நான்கு நாடகங்கள் எழுதியிருப் பதோடு, எட்டு நூல்களைப் பதிப்பித்தும் உள்ளார். வடமொழியிலிருந்து இரண்டு நூல்களும், தமிழிலிருந்து மூன்று நூல்களும் ஆங்கிலத்திலிருந்து மூன்று நூல்களும், கிரேக்க நாடகங்கள் இரண்டும் மொழி பெயர்த்துள்ள டாக்டர் நாயர் அவர்கள் ஆங்கிலத்தில் மூன்று நூல்களும் எழுதி யுள்ளார்.

தமிழில் இவர் மொழிபெயர்த்த முதல் நூல் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் "என் சரித்திரம்" என்பதாகும்; இது சாகித்திய அக்காடமி வெளியிட்டது என்பதிலிருந்து இதன் பெருமையை உணர லாம். அண்மையில் பாரி நிலையத்தார் வெளி யிட்ட இவர் எழுதிய 'ஐயப்பன்' என்ற நாவ லின் மொழிபெயர்ப்பு குறிப்பிடத்தக்கது. பின் னர் புறநானூறு, பதிற்றுப்பத்து இவைகளி லிருந்து சில செய்யுட்களை மலையாளத்தில் மொழி பெயர்த்தார். இப்போது கம்ப ராமாயணத்தில் பாலகாண்டத்தை மலை யாளத்தில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த் துக்கொண்டு வருகிறார்.

இளவயதில் மாணவப் பருவத்தில் ஏழைப் பிள்ளைகளுக்காக இரவுப் பள்ளி நடத்தித் தொண்டு புரிந்துள்ள இவர் கதைகளி, பரத நாட்டியம்—இவைகளில் பேரார்வம்கொண்ட வர். இவர் கண்களை உருட்டியும், வாயை அசைத்தும், புருவத்தை நெரித்தும் பேசு வதைக் கண்டுள்ள யாருக்கும் இவர் நடிகரோ என்ற ஐயம் எழும்; ஆம்! நாடகங்கள் பல வற்றில் பங்கு கொண்டுள்ள இவர், நாட்டி யங்களையும், நாட்டிய - நாடகங்களையும் இயக்கும் திறமையும் பெற்றவர் ஆவார். பிரபல சினிமா நட்சத்திரங்களான பத்மினி யும், இராகினியும் இவரிடம் பயின்றவர் களே! அவர்களின் சில நாட்டியங்கள் இவரால் தொகுக்கப்பட்டவைகளே! இவரது மனைவியாரான வித்துவான் மீனாட்சி அம்மா வும் ஒரு நல்ல எழுத்தாளர் ஆவர்; இவருக்கு எட்டுக் குழந்தைகள் உண்டு.

பல்கலைக்கழகங்களின் பாடநூற் குழுக்கள் பலவற்றிலும் உறுப்பினராயிருப்பதோடு, பல்வேறு அமைப்புக்களிலும் உறுப்பினராக இருந்து பணிபுரிந்துவருகிறார் டாக்டர் நாயர். இவர் தமிழ் எழுத்தாளர்களுக்கு விடுக்கும் செய்தி பின்வருவதாகும்:

" 'மலையாளி' என்ற குறுகிய, ஓர் எல்லைக் குட்பட்ட பொருளில், நான் ஒரு மலையாளி அல்ல என்று எண்ணுகிற அளவிற்குத் தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் நான் விரும்புகிறேன். ஒரு மலையாளி தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் கசடறக் கற்காவிடில், அவன் உண்மையில் ஒரு மலை யாளியாகவே முடியாது. நான் தமிழ் கற்ற பிறகுதான் என்னை முழுதும் உணர முடிந் தது. என் கண்டுபிடிப்பில் நான் உணர்ந் தது, என் இயல்பான கலாசாரத்தில் நூற் றுக்குத் தொண்ணூற்றென்பது பங்கு தமிழ்க் கலாசாரம் தவிர வேறல்ல என்பதும், மீதி ஒரு பங்கும், நன்கு ஆராய்ந்த பிறகு, தமிழல்லாத ஒன்று என்றாலும், இயல்பாக அது உண்மையான தமிழேயாகும் என்பது மாகும். மிகப் பழம் பெருமை வாய்ந்த திராவிடக் கலாசாரத்தில் தன்னை இணைத் துக் கொள்ள விரும்பாத மலையாளி உண்மையில் ஒரு மலையாளி அல்ல; அவன் மலையாளியும் ஆகமுடியாது.

எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் என் நாட்டு மக்களுக்கு, என் எழுத்து களிலும் பேச்சுகளிலும் நான் அடிக்கடி கூறுவது இச்செய்தியேயாகும். தமிழ் எழுத்தாளர்களுக்கு இச்செய்தியை விடுக்கும் நேரத்தில் என் கடமையாகக் கருதி உங்களை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்வது என்னவென்ருல், புதிய தோற்றத்தில் உள்ள மலையாள மொழியும் இலக்கியமும்—அதாவது இன்றைய மலையாளம்—பழைய தமிழிடம் இருந்த எல்லாச் சிறப்புகளும் கொண்டிருப்பதோடு, மேற்குக் கரையோரத்தில் உள்ள உங்கள் சகோதரர்கள் சென்ற ஆயிரம் ஆண்டுகளில் சுயமாகப் பெற்ற சிறப்புகளும் கொண்டுள்ளது என்பதை நீங்கள் உணர்ந்து பாராட்டவேண்டும் என்பதாகும்.

சுருங்கச் சொன்னுல், தமிழ் எப்படி எங்களுடைய சொந்த மொழியாக இருந்து வந்ததோ, மேலும் பல ஆண்டுகள் இருக்கப் போகிறதோ, அதேபோல் மலையாளமும் உங்களுடைய சொந்த மொழியே! நாமனைவரும் பழம்பெருந் தமிழகத்தின் சென்ற காலச் சிறப்புகளை மீண்டும் கொண்டு வருவோம்! நாமனைவரும் கலை வழிப்படி, தோற்ற வழிப்படி, உணர்ச்சி வழிப்படி ஒருவரே என்பதை உணர்வோம்!''

மேற்கண்ட செய்தியை விடுக்கும் டாக்டர் நாயர் அவர்கள், தமிழுக்கும் மலையாளத்திற்கும் உள்ள ஒருமைப்பாட்டை விளக்குவதே தான் மொழிபெயர்ப்புத் தொண்டில் ஈடுபட்டுள்ளதின் நோக்கம் என்று கூறுவதோடு நில்லாமல் செய்கையிலும் காட்டி வருகிருர்! அவரது தொண்டு வாழ்க! வெல்க!

கழகப் புதிய வெளியீடுகள்

இலக்கியம்

நற்றிணை விளக்கவுரை ரூ. 12 00
—பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
—பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனுர்

சூளாமணி உரை 18 00
—புலவர் சோமசுந்தரனுர்
—திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

பெருங்கதை (உஞ்சைக்காண்டம்) 8 50
—புலவர் சோமசுந்தரனுர்

நைடதம்—மூலமும் உரையும் 12 00

குசேலோபாக்கியானம் உரை 6 75

சிலப்பதிகார வசனம் 5 00

அரிச்சந்திர புராணம் உரை 10 00

பல்வகை நூல்கள்

எது இன்ப வாழ்வு (யோகாசனப் பயிற்சி நூல்) 3 50
(காசநோய், ஆஸ்துமா, நரம்புப் பலவினம், இருதயநோய், வாதம் முதலிய நோய்களை எளிதில் குணப்படுத்தப்பயன்படும் நூல்கள்)

தென்னுட்டுப் பழங்கதைகள் (ஏழு பகுதிகள்) தனித்தனி 5 00
(பண்டைக்காலத்தில் வழங்கிவந்த சுவைமிக்க பழங்கதைகளின் தொகுப்பு)

பல்பொருள் ஆங்கிலத் தமிழ் அகரவரிசை 4 50

நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை 5 00

கழகச் சிற்றகராதி ($2\frac{1}{2}'' \times 2''$) 1 25
(இதுவரை வெளிவராத மிகச்சிறிய அளவில் ஏராளமான ஆங்கிலச் சொற்களுக்குத் தூய தமிழ்ப் பொருள்கள் தரக்கூடிய ஒரே அகராதி—560 பக்கங்கள்).

விரிவான விலைப்பட்டி எழுதிப் பெறலாம்.

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.,
1/140, பிராட்வே சென்னை-1.
தலைமை நிலயம்: 98, கீழைத் தெரு, திருநெல்வேலி-6.

ஆட்சியாளருக்கு

எழுத்தாளர் வேண்டுகோள்

[மயிலை. சீனி. வேங்கடசாமி]

சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், சரித்திரங்கள், கவிதைகள், இயற்கை விஞ்ஞானம், சமுதாய வாழ்க்கை முதலிய அறிவுத் துறை வளர்ச்சிக்கான நூல்களை எழுதுவோர் எழுத்தாளர். பாரத நாடாகிய நமது துணைக் கண்டத்திலே பதினன்கு மொழிகள் அரசாங்கத்தாரால் அங்கிகாரம் பெற்றுள்ளன. அவை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, ஒரியா, உருது, ஹிந்தி, வங்காளி, அஸ்ஸாமி, பஞ்சாபி, காஷ்மீரி, சமஸ்கிருதம் என்பன. பாரத நாட்டு மாகாணங்களும் மொழி வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பதினன்குக்கு மேற்பட்ட வெவ்வேறு மொழிகளைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட நாற்பது கோடி மக்கள் பாரத கண்டத்தில் இருக்கிறார்கள். பாரத நாடு உயர்வடைய வேண்டுமானால், பாரத நாட்டு மக்களின் மனக்கருத்தும், கொள்கையும் விரிவடைய வேண்டும்; மக்கள் அறிவுடையவர்களாக விளங்க வேண்டும். இதற்காக அரசாங்கத்தார் கல்விச்சாலைகளை வைத்து மக்களுக்குக் கல்வி கொடுத்து அறிவு வளர்ச்சிக்கு ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்களும் விழிப்படைந்து கல்வி கற்பதில் ஆர்வமும் ஊக்கமும் காட்டி வருகிறார்கள். நாட்டு மக்களின் மனவளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் எழுத்தாளர்கள் அந்தந்த மொழிகளில் நூல்கள் எழுதி வருகிறார்கள்; மக்களின் மனவளர்ச்சிக்கும், கருத்து வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில் எழுத்தாளர்கள் பல துறைகளில் நூல்களை எழுதி வருகிறார்கள்.

பாரத நாடு சுதந்திரம் பெற்றுச் சில ஆண்டுகள்தாம் ஆகின்றன. உலக நாடுகளுடன் பாரத நாடும் முன்னேற வேண்டும் என்னும் உறுதியுடன் அரசாங்கத்தார் பல திட்டங்கள் வகுத்து ஆவன செய்து வருகிறார்கள். மேல் நாடுகள் பல நம்மைவிட முன்னேறிச் சென்றுவிட்டன. கீழ்நாடுகள் சில நமக்கும் பின்னணியில் நிற்கின்றன. பாரத நாடு இடைப்பகுதியில் இருந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. நாட்டு வளர்ச்சி என்றால் நாட்டு மக்களின் வளர்ச்சியாகும். மக்களின் எண்ணம், கருத்து, கொள்கைகள் வளர்ந்து உயர்ந்தால்தான் வாழ்க்கை உயரும். மக்களின் கருத்தையும் எண்ணங்களையும் உயர்ந்த முறையில் வளர்க்கிறவர்கள் எழுத்தாளர்கள்; நாட்டுமக்களின் குறிக்கோள்களையும், நடக்கையையும் வளர்ப்பவர்களும் எழுத்தாளர்களே. நாட்டு வளர்ச்சியை உருவாக்குவதற்கு எழுத்தாளர்களின் தொண்டு கட்டாயம் தேவை. இது எல்லா நாட்டாராலும், அறிஞர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. நமது பாரத நாட்டுக்கும் எழுத்தாளர்களின் பணி மிகமிகத் தேவை. பாரத நாட்டுப் பல்வேறு மொழிகளிலும் எழுத்தாளர்கள் நூல்கள் எழுதி மக்களுக்குத் தொண்டு செய்து வருகிறார்கள். இன்னும் சிறந்த எழுத்தாளர்கள் நம்மிடையே தோன்ற வேண்டும்.

எழுத்தாளர்களின் பணி இன்னும் அதிகமாகவும் சிறப்பாகவும் வளர வேண்டும். கல்விச்சாலைகளுக்கு நல்ல ஆசிரியர்கள் எப்படி அவசியமானவர்களோ அவ்வாறே எழுத்தாளர்களும் நாட்டுக்கு மிக மிக அவசியமானவர்கள். நூல்களை எழுதி மக்களின் மனவளர்ச்சியையும், கருத்து வளர்ச்சியையும் தூண்டி வருகிற, உருவாக்குகிற எழுத்தாளர்கள் நாட்டுக்கு ஏராளமாகத் தேவைப்படுகிறார்கள்.

நாகரிக நாடுகள் எல்லாம் எழுத்தாளரின் நல்வாழ்வுக்கு உதவி செய்து, அவர்களை நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன. நமது பாரத அரசாங்கமும் எழுத்தாளர்களின் வாழ்க்கையில் அக்கறை காட்டி வருகிறது; சாகித்திய அக்காடமி என்னும் நிறுவனத்தின் மூலமாக எழுத்தாளர்களை ஆதரித்து வருகிறது. தகுந்த எழுத்தாளர்களுக்கு (பதினன்கு மொழி எழுத்தாளர்களுக்கும்) பரிசு வழங்கி ஊக்கமளித்துவரு

கிறது. தகுந்த புத்தகங்களை அச்சிட்டு உதவுகிறது. இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து மாநாடு நடத்திப் பல மொழி எழுத்தாளர்களும் அறிமுகமாகவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்பு உண்டாக்கித் தருகிறது. இது வரவேற்கத் தக்கதே. ஆனால், இந்த மாநாட்டை இரண்டாண்டுக்கு ஒரு முறை நடத்தாமல் ஆண்டுதோறும் நிகழ்த்துவது விரும்பத்தக்கது. தமிழ் நாட்டு அரசாங்கமும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகத் தகுந்த நூல்களுக்குப் பரிசு வழங்கி வருகின்றது. இவையெல்லாம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தருவனவாகும். ஆனால், இவை போதா. இவற்றைவிடச் சிறந்த வாய்ப்புகளையும் அரசாங்கம் செய்து தர வேண்டும். அவை என்ன?

மொழிவாரியாக அமைந்துள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் எழுத்தாளர்களுக்கென்று ஒரு தங்கும் இடம் அமைத்துத் தர வேண்டும். வெவ்வேறு மொழி எழுத்தாளரும் வந்தால், அந்த இடத்தில் இலவசமாக அல்லது சொற்ப பணம் செலுத்தித் தங்குவதற்கு வசதியாக அந்த நிலையம் அமையவேண்டும். ஐரோப்பிய நாடுகளிலே, எழுத்தாளர்கள்சென்று சொற்ப செலவில் தங்கியிருந்து நூல் எழுதவும், படிக்கவும், ஆராய்ச்சி செய்யவும் நிலையங்களை அரசாங்கத்தார் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையங்கள், நகரத்துக்கு அப்பால் சந்தடி இல்லாத இடத்தில் அழகான இயற்கைச் சூழ்நிலையில் எல்லா வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய எழுத்தாளர் நிலையங்கள் பாரத நாட்டில் அரசாங்கத்தாரால் இன்னும் அமைக்கப்படவில்லை. இவ்விதமான எழுத்தாளர் தங்கும் நிலையங்களை (பதினன்கு மொழி எழுத்தாளரும் தங்கும்படி) அரசாங்கத்தார் அமைத்துத் தரவேண்டும். பதினன்கு பாஷைகள் வழங்குகிற மாகாணங்களிலும் பதினன்கு நிலையங்கள் இருக்க வேண்டும். அப்படி அமைக்க இப்போது முடியாமற்போனால், பாரத நாட்டின் வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, மத்தி ஆகிய ஐந்து இடங்களிலாவது இத்தகைய நிலையத்தை (எழுத்தாளர் தங்கும் நிலையத்தை) அமைக்க வேண்டும்.

இரண்டாவதாக எழுத்தாளர்களுக்குப் பிரயாணச் செலவை இலவசமாக்கித் தர வேண்டும். அல்லது நாலில் ஒரு பங்காகக் குறைக்க வேண்டும். பொதுவாக எழுத்தாளர்கள் பொருள் வசதியற்றவர்கள்; பொருளாதாரம் இல்லாதவர்கள். ஆகவே, இத்தகைய இலவச வசதிகளைச் செய்து தர வேண்டியது அரசாங்கத்தாரின் கடமையாகும். பல மொழிகளைப் பேசுகிற துணைக் கண்டமாகிய பாரத தேசத்தின் எழுத்தாளர்கள் பாரதகண்டத்தின் வெவ்வேறு நாட்டின் இயல்புகளை அறிய வேண்டியவர்கள். அறிந்திருந்தால்தான் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும், ஒற்றுமைக்காகவும் அவர்கள் நூல்கள் எழுத இயலும். பாரத நாட்டின் பல மொழி எழுத்தாளர்களும் அடிக்கடி ஒன்று கூடிப் பேசிப் பழகி ஒருவரையொருவர் அறிந்து கொள்வது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வழிவகுப்பதாகும்.

எல்லைப் போர் நடக்கிற இந்த இக்கட்டான வேளையிலே இவற்றைச் செய்து கொடுக்க வேண்டுமென்று எழுத்தாளர் யாரும் கேட்க வில்லை. போர் முடிந்தவுடன் இவற்றைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம்.

சீன—பாரத எல்லைப் போர் நாட்டு மக்களின் கண்களைத் திறந்து விட்டது. போர் முடிந்த பிறகும், எல்லைப் பாதுகாப்புக்காக நிரந்தரமான பாதுகாப்புச் சேனை வைத்துக் கொள்ளவேண்டும். தரைப்படை, கடற்படை, விமானப் படைகளையும் பலப்படுத்தி விரிவு படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் அரசாங்கம் செய்வதற்கு நாட்டு மக்களின் முழு ஆதரவும் இருக்கிறது. படைவீரர்கள் நாட்டுக்கு எப்படி அவசியமோ அவ்வாறே எழுத்தாளரும் நாட்டுக்கு இன்றியமையாதவர்கள். ஆனால், உலகமெங்கும் இருப்பது போல நமது நாட்டிலும் எழுத்தாளர்களின் தொகை மிக மிகச் சொற்பம். அவர்களுக்குள்ள வசதிகளும் மிக மிகக் குறைவே. எனவே மேற்கூறிய வசதிகளை எழுத்தாளர்களுக்கு அரசாங்கத்தார் செய்து தரவேண்டுமென்று, தமிழ் எழுத்தாளர் சார்பாக மட்டுமல்லாமல் பாரத நாட்டுப் பதினன்கு மொழி எழுத்தாளர் சார்பாகவும் அரசாங்கத்தினரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் இவற்றை எழுத்தாளர்களுக்கு நல்கும் என்று பாரத நாட்டு எழுத்தாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பாரதம் வெல்க! பாரத நாடு வாழ்க!!

அறம் வென்றது!

[சாலை இளந்திரையன்]

(தில்லி, அகில இந்திய வானொலியில்
13-12-62-ஆம் நாள் ஒலிபரப்பான கவிதை)

(1)

சேரன்செங் குட்டுவன் வீரம் விளைத்தே
சில்லறைப் பேய்களைக் கிள்ளிய நாடு!
வீரன்சி வாஜி விரும்பி நிமிர்ந்தே
வெற்றி மணிக்கொடி நாட்டிய நாடு!
பாரனைத் தும்புகழ் கட்டபொம் மப்பேர்
பாஞ்சைப் பதிமகன் தோன்றிய நாடு!
காரண மின்றிக் கனல்தெறிக் காது;—
கண்சிவந் தால்பின்னர் ஓய்ந்திருக் காது!

❋

சேரனும் சோழனும் பாண்டிய வீரச்
சிங்கமும் இன்னும் மறைந்திட வில்லை;
போரென்று கேட்டதும் பூரித்து விம்மும்
பொற்றடந் தோளுக்குப் பஞ்சமே இல்லை!
வீர மராட்டிய வெம்புலிக் கூட்டம்,
வெற்றிப்பஞ் சாபியத் தீரர்கள் ஈட்டம்,
யாரும் மடிந்து முடிந்திட வில்லை;—
இன்னமும் இன்னமும் உள்ளனர் கோடி!

❋

ஏந்திய ஏறுகள் சீக்கிய வர்க்கம்;
ஏற்றெழு கூர்ச்சர வீரர் நெருக்கம்;
ஆந்திர கேசரிக் கூட்டப் பெருக்கம்;
அப்புறம் கன்னட ரீட்ட நெருக்கம்!
சார்ந்துள கேரளர் மீசை முறுக்கி,
சண்டைப் பெருங்குடி வங்கத்த ரோடு
சேர்ந்து நிமிர்ந்துள வீர இறுக்கம்!—
நின்றதைப் பார்ப்பதே நெஞ்சினுக் கூக்கம்!

❋

(2)

(வேறு)

சிந்தனையின் கொடுமுடியாய், தெய்வதத்தின்
திருவிடமாய்,
இந்தியமாம் பழங்கோயில் ஏற்றெடுத்த
கோபுரமாய்
நின்றிருக்கும் இமமலையின் நீங்காத
அமைதியினை
இன்றுவந்து வடசீனர் ஏறிநின்று
கலைத்திடவே......

(வேறு)

சீறி எழுந்தது பாரதம்;—
சிந்தை கொதித்தது பாரதம்!
ஆறி அமைந்திட நன்னெறி
அள்ளி வழங்கிய பாரதம்,
மாறி எழும்பிய சீனரின்
வஞ்சனை கண்டு கொதித்ததால்,
ஏறி அடிக்குது, தீமையை
எற்றி நொறுக்குது பாரடா!

(3)

(வேறு)

'சீரிய சீலங்கள் பேசிக் குதித்தும்,
சீனிகள் இந்திகள் பாயிகள் என்றும்
காரிய மாகவே பேசி இருந்தோம்;
கண்ணியில் பட்டனர் இந்தியர்' என்றே
வீரிய மாகப் புறப்பட்டு விட்டாய்,
வித்தக மேயற்ற சீனனே கேளாய்:
ஆரியக் கூத்திலும் காரியத் தேகண்
ணுக இருப்பவர் பாரத மக்கள்!...

❋

அங்கணும் இங்கணும் எங்கணும் பொங்கி,
ஆர்பரித் தேபடை வீரமு ழங்கி,
எங்களுக் குள்பல சண்டைக ளிட்டோம்
என்பதை எண்ணிப் படை திரண்டாயோ?
பேதைய னேயந்தச் சண்டைக ளெல்லாம்,
வேற்றவர், உங்களைப் போன்றவர் வந்தால்
மோதி எதிர்த்து முறித்திட என்று
முன்னமே பெற்ற பயிற்சிக ளன்றோ?

❋

(வேறு)

பள்ளிக்குச் சென்றிடும் பிள்ளைக் கிளிகளும்
பாதகப் போர்க்குரல் கேட்டவுடன்,
துள்ளி எழுந்தனர், துச்சப் பகையினைத்
தூக்கி எறிந்திட வந்துவிட்டார்!

✻

மாணிக்கக் கண்களும் மாதுள வாய்களும்
மங்கைப் பருவமும் ஏற்றவராய்
நாணி நடந்திடும் மாதர் எழுந்தனர் ;—
நல்விழி தீயினைக் கக்குதடா!

✻

சாவக் கிடந்த கிழங்களும் துள்ளியே
தக்கெனப் பாயிலே குந்திவிட்டார் :
'யாவன் அவனெங்கள் எல்லையில் வந்தவன்!'
என்று குரல்கள் எழுப்பிவிட்டார்!

✻

எங்கள் இளமையும் தங்க முதுமையும்
எங்கும் எழுந்தன ஓர்உருவாய்.—
எங்கள் தலைமகன் நேருவின் மந்திரச்
சொல்லில் எழுந்தனர் பாரதத்தாய்!

(வேறு)

நீதி அறிந்தவர் எங்களின் பக்கம் ;—
நேர்மை தெரிந்தவர் எங்களின் பக்கம்!
மீதி இருப்பது தீயவர் கூட்டம் ;—
வெல்லுமோ என்றைக்கும் நன்மையைத்தீமை?

✻

நாட்டைப் பிடித்திட, மக்களை ஆள
நான்முந்தி நான்முந்தி என்றுவந் தோர்கள்
கேட்டைப் பிடித்துக் கிறங்கி விழுந்தார் ;—
கேளுங்கள் இட்லரின் வாழ்க்கைக் கணக்கை!

✻

வெற்றியும் தோல்வியும் வீரருக் குண்டு ;—
வீரப் பெருந்திறம் எங்களுக் குண்டு!
வெற்றியே வெற்றியே தர்மத்துக் குண்டு ;—
வெற்றித் துணையறம் எம்பக்க முண்டு!

✻

(4)

(வேறு)

திறம்பாடிச், செருக்களத்தின் சீர்த்தி பாடி,
செம்மைநலம் உலகெல்லாம் பொங்கப் பாடி,
வரமீந்து ஞாலத்தை வாழ வைக்கும்
மாகவிஞர் உள்ளார்கள்; அவர்களெல்லாம்
குறம்பாடி முதுகெலும்பே இல்லாப் பூச்சிக்
குலம்போலே மண்மறைந்து வந்த பேரை
அறம்பாடி ஒழிப்பதிலே பெருமை இல்லை ;—
ஆதலினால் தான்அவர்கள் பாட வில்லை!

✻

அறம்பாட வில்லைநான், ஒருசொல் மட்டும்
அழுத்தமாய் ஆழமாய்ச் சொல்லுகின்றேன்;
மறம்பேணி எழுந்தவர்கள் வாழ்ந்த தில்லை ;—
மனிதப்பண் பிழந்தவர்கள் சிறந்த தில்லை!
அறம்பேணி நின்றவர்கள் அழிந்த தில்லை ;
அவர்நெஞ்சம் யாருக்கும் பணிந்த தில்லை!
'அறம்வெல்லும்! அறம்வெல்லும்!'—அதுவே
வார்த்தை...
அன்னைஎங்கள் பாரதத்தாய் வென்று
விட்டாள்!

With the best compliments from:

Premier Suppliers Private Ltd.

9, Stringer Street,

Madras-1.

தமிழ் எழுத்துலகில் பெண்கள்

[கோமகள்]

எழுத்து என்பது பயில்வது அல்ல. அது தானாக வருவது; தானாக முகிழ்த்து எழுத்தாகச் சிறகடித்துப் பறக்கத் துணியும் உணர்வு அது. அந்த உணர்வு எழுதுகின்றவர்களின் ஆளுகைக்கு உட்படும்போது தான் அது அவர்களுக்கே உரிமையான நிகழ்ச்சிக் கோவையாகிறது. அவரவர் பாணியில், அவரவர் நடையில், அவரவர்க்குகந்த சூழ்நிலைச் செழிப்போடு மலர்ந்து கதைகளாகப் பரிணமித்து உணரக் கிடைக்கின்றது.

காலம் மாறுவது போலவே கதைகளின் போக்கும், கருத்தும், நடையும் மாறி வருகின்றன. கதையைப் படிக்கும்போது அந்தக் கதையின் நிகழ்ச்சிக்காக மட்டும் ஆர்வங்காட்டிப் படிக்கும் பழக்கம் இன்று குறைந்துள்ளது. கதையின் அமைப்பு, சொற்களின் நயம், காதலுணர்வின் எல்லையைத் தொட்டும் தொடாமலும் உணர வைக்கும் அலங்காரச் சுவை, வீரத்தை விளக்கும் கம்பீரமான அடுக்குத் தொடர்கள், சோகத் துடிப்பை உணர்த்த சிறுசிறு வாக்கிய முடிவுகள்— என்று பல முறைகளையும் ரசித்துப்போற்றும் நேரம். இதன் பயனாகத் தூய தமிழ்ச் சொற்கள் பல தாமாகவே அகராதியினின்றும் இழுபட்டுக் கதைப் போக்கில் ஒட்டிக் கொண்டு அழகு நடை பயில்கிறது. எல்லாத் துறைகளுமே மறுமலர்ச்சி காணும் நாள் இது. எழுத்துத் துறையிலும் இத்தகு மறுமலர்ச்சி ஏற்பட்டதில் விந்தை ஏதுமில்லை.

நெகிழ்ச்சியூட்டும் சம்பவங்களின் அழகால் கண்கலங்கும் சோகத்தைக் கொண்ட எளிய தமிழ் நடையும் இல்லாமற் போகவில்லை. சில வார வெளியீடுகள் மிகவும் மேலோட்டமாகப் படித்தால் போதுமானது என்னும் வகையில் அமைந்துள்ளன. பஸ்ஸில் நின்றுகொண்டே படிப்பவர்கள் அதன் நிகழ்ச்சிக்காகத்தான் படிக்க முடியும். தினசரி கடும் உழைப்பிற்கு ஆயத்தமாக வேண்டியவர்களெல்லாம் இத்தகு வெளியீடுகளை ஆர்வமாகப் படிப்பார்கள். அவர்களெல்லாம் கதைப் போக்கில் அழகிய வர்ணனைகள் வரும் இடத்தைத் தள்ளிவிட்டுச் சம்பவத்திற்கு ஓடுபவர்கள்! ஆழ்ந்து படிக்க விரும்புகிறவர்கள் அமைதியான நேரத்தில் சுவைத்துப் படிப்பார்கள். இவர்கள் விரும்புவது சம்பவங்கள் மட்டுமல்ல; அழகான நடையும், ஆழமான கருத்தும்கூட.

ஒரே மையக்கருத்து எளிய நடையிலும், கருத்துச் செறிவான நடையிலும் இரு வேறு கதைகளாக உருவாகும்போது, பெருத்த மாற்றம் காணும் இரு கதைகளாகவே தோன்றும்படி இன்று எழுதும் திறமை வளர்ந்துள்ளது. இந்த எழுத்துத் துறையில் முழு மூச்சான ஊக்கத்தோடும், உணர்ச்சிப் பெருக்கின் வேகத்தோடும் பெண்-எழுத்தாளர்களும் திகழ்கிறார்கள் என்னும் எண்ணம் பெருமையில் ஆழ்த்துகிறது.

அக்காலச் சூழ்நிலைகளை நிலைக்களனாக வைத்து சமூகப் பிரச்சினைகளையும், வாழ்வு லட்சியங்களையும் பின்னிக் காட்டும் வகையில் நிறைய நாவல்களை எழுதி மதிப்பிற்குரிய ஓர் இடம் பெற்றவர் காலஞ் சென்ற திருமதி. கோதைநாயகி அம்மாள் அவர்கள். அந்தச் சமயத்தில் மற்ற நாவலாசிரியர்கள் எழுதிய நூல்களைப் போலவே இவரது எழுத்துக்களும் நீண்ட வர்ணனைகளையும், உபதேசங்களையும் கொண்டவை. அலுக்காமல் சலிக்காமல் அதே துறையில் நின்று ஏராளமான நாவல்கள் எழுதிக் குவித்தவர் இவர்.

திருமதி. குகப்ரியை அவர்கள் வயது முதிர்ந்த, அனுபவம் வாய்ந்த எழுத்தாளர். குடும்ப வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளில், பாரதப் பண்பாட்டை இணைத்து எழுதுபவர். "சந்திரிகை" என்ற இவரது நாவல் பரிசு பெற்ற கதை. அன்பால் நெகிழ்ந்து, உள்ளமெலாம் பாகாக உருகி, பக்திச் சுவை சொட்டச் சொட்ட இனிக்குமாறு அமைத்து இவர் எழுதியுள்ள "மகாபக்த விஜயம்" மறக்க முடியாத ஒரு நூலாகும். பல

கட்டுரைகளும், மொழிபெயர்ப்பு நாவல்களும் இவர் எழுதியுள்ளார். வாழ்க்கை, இலக்கியம், சமயம் இம்மூன்றும் ஒன்றை விட்டொன்று பிரிக்க முடியாதபடி நம் நாட்டில் பிணைக்கப் பட்டிருக்கும் ஒழுங்குமுறைகளை இவர் விரும்பிப் போற்றி பக்தி செய்பவர்.

கம்பீரமும், நேர்த்தியும், எளிமையும் மிக்க இதுபோன்ற எழுத்தாளருள் கி. சரஸ்வதி அம்மாள், சாவித்திரி அம்மாள், கௌரி அம்மாள், கு. ப. சேது அம்மாள், குமுதினி ஆகியோரையும் குறிப்பிடலாம். இவர்கள் அனைவரும் எழுத்தாற்றல் மிக்கவர்கள்; எழுத்தை ஆளும் வன்மை படைத்தவர்கள். இவர்களில் சாவித்திரி அம்மாள் அவர்களும், குமுதினி அவர்களும் மொழிபெயர்ப்புத் துறையில் சிறந்து விளங்குபவர்கள். மொழி பெயர்ப்புத் துறையில் இன்று சிறந்து விளங்கும் மற்றொரு கதாசிரியை திருமதி. சரஸ்வதி ராம்நாத் அவர்கள். பல சிறுகதைகளோடு ''காப்டன் கல்யாணம்'' என்ற நாவலும் எழுதியுள்ள திருமதி. வசுமதி ராமசாமி சிறந்த விமரிசகராகவும் திகழ்கிறார்.

''லக்ஷ்மி'' அவர்கள் (டாக்டர் திரிபுர சுந்தரி) எழுதியுள்ள நாவல்கள் வாசகர்களின் மறக்க முடியாத படைப்புக்கள். தன் தொடர் கதையின் மூலம் வாசகர்களின் எண்ணிக் கையை அதிகப்படுத்தியவர் இவர். மிகச் சாதாரண நடையில், மிகச் சாதாரணப் பிரச் சினைகளை எடுத்துக்கொண்டு சம்பவங்கள் ஒன்றினால்மட்டும் கதைக்கு உரிய மதிப்பு உண்டாகும்படி எழுதி வெற்றி பெற்றவர் இவர். ஆழமான கருத்தாற்றலோ, தான் வாழ்ந்த நூற்றாண்டின் சூழ்நிலைகளை மறக்க முடியாத நிகழ்ச்சிகளோ எதுவுமின்றி ஒரு சராசரி மனிதனுக்குரிய கோபம், காதல், வறுமை, துன்பம் என்பவற்றையே அடிப் படையாகக் கொண்டு மலர்ந்த கதைகள் தாம் என்றாலும், அவை என்றும் மறக்க முடியாத ஆற்றல் பெற்றுவிட்டன. வர்ணனைகளோ, வேறு பல தடங்கல்களோ இல்லாமல் சம வெளியில் செல்லும் ஆற்றைப்போல் ஒழுங் கான நடையில், எளிய தமிழால் எழுதப் பட்டவை. ''பெண் மனம்'', ''மிதிலா விலாஸ்'', ''நாயக்கர் மக்கள்'' போன்ற நாவல் கள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. இவர் மருத்துவ சம்பந்தமான நூல்களையும் எழுதியுள்ளார்.

திருமதி. கமலா விருத்தாசலம் அவர்கள் மறுமலர்ச்சி இலக்கியத்தின் தலைசிறந்த எழுத்தாளரான புதுமைப்பித்தன் அவர் களின் வாழ்க்கைத் துணைவியார். கணவரின் தூண்டுதலினால் அவரது அடியொற்றி எழுதிய பல சிறுகதைகள் அக்காலம் அனை வரது பாராட்டையும் பெற்றன. துயரத்தை உள்ளடக்கிய குடும்பக் கதையான ''காசு மாலை''யில் காமாக்ஷி தன் தாய்வீட்டார் கணவனைத் தூஷிப்பதை உடனுக்குடன் கணவனிடம் கூறிவிட்டதால் நேர்ந்த பரி தாபத்தை முடிவில் உணருகிறோம். உண் மையே எனினும், அதைச் சொல்லுமிடத்து தீமை பயக்குமாயின், அது வாய்மை அல்ல என்ற வள்ளுவர் வாக்கு நினைவில் வரும் இடம் அது. எளியவனுக்கு இரங்கிப் பிச்சை போடாமலும், எதிர்பாராமல் அவன் விபத்துக்குள்ளான போது கசியாமலும் மேலோட்டமாகப் போகும் பண்பைக் கண் டிக்கும் ''நாலணா துட்டு'' என்ற கதையும், குழந்தை பெறாத மருமகளை ஒதுக்கி மறு மணம் செய்யும் நிலையைக் கண்டிக்கும் ''அவள் விரும்பியது'' என்ற கதையும், நம் நாட்டிற்கே உரிய பொதுவான நிறத்தை உணர்ந்திருந்தும் கருப்பு, வெளுப்பு என்ற காரணம் காட்டித் திருமணங்கள் தடைபடு வதைக் கண்டிக்கும் ''கயிற்றினிலே வரும் கீதம்'' என்ற கதையும், ஆண்-பெண் நட்பு முறையைச் சந்தேகிப்பதைக் கண்டிக்கும் ''சந்தேகம்'' என்ற கதையும் மறக்க முடியா தவைகள். ஒவ்வொரு கதையும், அதனதன் முடிவில் நமது அன்றாடப் பழக்க வழக்கங் களில் புதைந்துள்ள தீய கருத்துக்களைப் போக்க முயலும் தீவிரம் கொண்டிருக்கிறது.

''அநுத்தமா'' அவர்களின் இயற்பெயர் ராஜேஸ்வரி பத்மநபன். நாவல் பரிசுகள் பெற்ற இவரது கதைகள் பக்திச் சுவை மணத்தோடு மிளிரும். பழைய சம்பிரதாயங் களின் உண்மையை விளக்கி, அவற்றின் நன்மையையும், அவை சமூகக் கட்டுக்கோப் புக்கு எப்படி இன்றியமையாதன என்ற அவசியத்தையும் வலியுறுத்தும் கதைகள். நம் முன்னோர் பழக்கவழக்கங்களின் மேன்மை யைக் காட்டி நிற்கும். ஒவ்வொரு கதையிலும் ஒளிரும் பக்திச் சுவை வேறுபாடு ஒன்றிற் கொன்று குன்றாமல் எழிலோடு விளங்கும். ''கேட்ட வரம்'' என்னும் நாவலில் ஊரின் வர்ணனைகளையும், அதைச் சூழ்ந்த குன்று

களின் எழிலேயும், பாத்திரங்களை ஒட்டியே வரும் ஊர்க்கோவில் விழாவையும், பஜனை யையும் நாம் மறக்கவே முடியாது. திரு விழாவை மையமாகக் கொண்டு எழுந்த மற்றொரு நாவல் "ஜயந்திபுரத் திருவிழா", இளம் விதவைப் பெண் ஒருத்தி பிறர் பார்வையினின்றும், ஏச்சு பேச்சினின்றும் தன்னைக் காத்து வெற்றி-நடையிடும் "மணல் வீடு" என்ற நாவலும், குடும்பத்தின் இன்ப துன்பங்களை அடிப்படையாகக் கொண்ட "சுருதி பேதம்" "அற்ப விஷயம்" போன்ற நாவல்களும், "வேப்பமரத்து பங்களா"என்ற குறுநாவலும் நல்ல படைப்புக்கள். பெரும் பாலும் குடும்பத்தையே பின்னி ஓடும் இவரது கதைகள் அமைதியான இனிமை கலந்த நடையில் எழுதப்பட்டிருக்கும்.

திருமதி. கோமதி சுப்ரமண்யம் அவர்கள் பிரபல எழுத்தாளர் சுகிசுப்ரமண்யம் அவர் களின் துணைவியார். இவர் தம் சொந்தப் பெயரிலும், "சக்தி" என்ற புனைபெயரிலும் நிறைய சிறுகதைகளும், நாவலும் எழுதியுள் ளார். பல முக்கியப் பத்திரிகைகள் நடத்திய போட்டிகளில் சிறுகதைப் பரிசுகள் பெற் றிருக்கிறார். இவர் எழுதிய "சாகாத வாழ் வுக்கு சஞ்சீவி" என்னும் கதையில் வரும் சிப்பாய் பாஸ்கரன், தன்னைப் புறக்கணித்த அருணாவால் விரக்தியுற்று, வேலையை உதறி விட்டு வந்து, மறுபடியும் அவளது வறுமை நீக்க வேலைக்குத் திரும்பும்போது, அவனது மன்னிக்கும் மனத்தைக் கண்டு நாம் பச்சா தாபப் படுகிறோம். கள்ளக் கடத்தலின் தீமையை விளக்கும் உருக்கமான "நீலக் கடல்" என்னும் கதையும், கணநேரத் தவறு தலால், பிந்தைய சந்ததிகளின் வாழ்வு குழப்பமாகி, தன் மகனையே கொல்ல நேர்ந்து தானும் உயிர் துறந்த பரிசலோட்டி சாம் பானின் மனப்போராட்டங்களை விவரிக்கும் "பந்தயம்" என்னும் கதையும், பிள்ளையை இழந்துவிட்ட துயரத்தைவிடப் பல ஆண்டு கள் கழித்து அவன் எதிர்ப்படும்போது ஏற் படும் சிக்கலைக் காட்டும் "தியாகத்திற்கு ஒரு தனயன்" என்னும் கதையும் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் சேர்ந்த மணமூட்டும் சிறுகதைகள். "ஒரே குடும்பம்" என்னும் இவரது நாவலில் வரும் மங்களத்தின் மேன் மையையும், ஆரம்பத்திலிருந்து கடைசிவரை துன்பம் ஏற்றும், தனக்காக வாழாமல் தன் மைத்துனன் ராமுவுக்காக வாழும் சீலத்தை யும், தியாகத்தையும் ஆசிரியை சிறந்த முறை யில் சித்திரித்துள்ளார். குறைந்த பாத்திரங் கள், திருநெல்வேலிச் சூழ்நிலை மணம், தெளிந்த நீரோடையான கதைப் போக்கு. பொதுவாகவே சரளமும், இனிமையும் கலந்து அமைதியாகக் கதையின் நடைஅமைந் திருக்கும்.

திருமதி. ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பெரும்பாலும் மனோதத்துவத்தை மையமாகக் கொண்டு திறம்படப் பல சிறுகதைகளையும், நாவல்களையும், வானொலி நாடகங்களையும் படைத்திருக்கிறார். நாவல் பரிசுகள் பெற்ற இவரது கதைகளின் உட்கருத்துக்கள் மறைந்திருந்து முடிவில் வெளிப்படும்போது, அவற்றைக் கையாண்ட திறமை நமக்கு நன்கு விளங்கும். பரிசுகள் பெற்ற "பெண் குரல்", "மலர்கள்" என்னும் இரு நாவல் களும் ஆசிரியையின் மகத்தான வெற்றிக்குச் சான்று கூறுவன. புறவாழ்வின் பொய்யான சலனங்களுக்கு, அகத்தினுள் ஒளிந்து தோய்ந்த உணர்வுகள்தாம் காரணம் என் பதை எடுத்துக்காட்டும் இவரது தோரணை கதை முடிவில் வெளிப்படும்போது, அவர் முடிக்கும் காரணங்களுக்குகந்தவாறு கதை யமைப்பைக் கொணர்ந்த அவர் திறமையைப் போற்றாமலிருக்க முடியாது. பொய்யான ஆர்வங்களற்ற மலைவாசிகளின் வாழ்வில் ஊடுருவி எழுதி வெளிவந்துகொண்டிருக்கும் "குறிஞ்சித் தேனின்" இனிமையை யார்தான் சுவைக்காமலிருக்க முடியும்? அந்த எளிய மக்களின் மண்பக்தி, சம்பிரதாய அறியாமை கள், எழுத்தறியத் துடிக்கும் இன்றைத் தலைமுறை ஆசைகள் எல்லாவற்றையும் அவர் அழகான சுவையான நடையில் தந்து கொண்டிருக்கிறார். இவர் கதைகளில் நாம் அடிக்கடி காணநேரும் நீலமலைக் குளுமையை மறக்கவே முடியாது.

திருமதி. சரோஜா ராமமூர்த்தி அவர்கள் பிரபல எழுத்தாளர் து. ரா. அவர்களின் துணைவியார். இவர் சிறந்த சிறுகதைகளையும், நாவல்களையும் திறம்பட எழுதியுள்ளார். எளிய நடையில், இயல்பான சம்பவக் கோவையுடன் எடுத்த நிகழ்ச்சிக்குப் புறம் பாகப் போகாது கதையூடே சென்று முடிக் கும் பாணி இவருடையது.இடையில் அர்த்த மற்ற பிரசாரங்களில்லாமல் அளவான வர்ணனைகளோடு வாழ்க்கையையே எதி

ரொலித்துக் காட்டும் கட்டுக்கோப்பு கொண்டது. விமர்சகர்களின் பாராட்டுதலைப் பெற்ற ''பனித்துளி'', ''முத்துச் சிப்பி'' போன்ற நாவல்கள் வாசகர்களின் பாராட்டுதலையும் பெற்றதில் வியப்பில்லை. ''முத்துச் சிப்பி''யில் வரும் பவானி சிறு வயதில் கணவனை இழந்து, மகன் பாலுவை வளர்த்து பக்தியோடு தன்னைப் பாதுகாத்துக் கொண்டு, இரக்க சிந்தையோடு உலவும் ஒரு பாத்திரம். இலேசான துயர மூட்டத்தோடு கதை பவானியைப் பின்பற்றிச் செல்லும்போது, நாம் துயரத்தோடு தொடருகிறோம். கடமை தவறாத பண்பு கொண்ட டாக்டர் ஸ்ரீதரன் தன் தங்கையின் கணவன் சிறை சென்று அவமானப்படுவது பொறுக்காமல் குமுறினாலும், அவனை விடுவிக்க விரும்பாமல் 'பணக்காரர்கள் எல்லாம் செல்வாக்கை உபயோகித்துக் கொண்டேயிருந்தால் நீதியின் முனை மழுங்க வேண்டியதுதான்' என்று கூறும் போது, அவரது உயர்ந்த தன்மை கண்டு நாமும் நிமிர்ந்து நிற்கிறோம். இவரது ''இருளும் ஒளியும்'' என்ற மற்றொரு நாவலில் வரும் சரஸ்வதி என்ற பாத்திரப் படைப்பையும் நாம் மறக்க முடியாது.

திருமதி. கிருஷ்ணா நீண்ட நாட்களாகவே எழுதிவரும் திறமை மிக்க கதாசிரியர். எல்லோராலும் பாராட்டப்பட்ட ''வழித்துணை'' என்ற இவரது சிறுகதை, மறக்க முடியாத ஒரு சோகசித்திரம். காதல் தோல்வியை மையமாகக் கொண்டு அழகிய சூழ்நிலைகளை உருவாக்கி, இவர் எழுதியுள்ள ''ராஜி'' என்ற நாவல் மிகச் சிறந்த ஒன்று. ராஜி படும் பாட்டையெல்லாம் நாம் ஏற்கவைத்து ஆசிரியை நம்மைக் கண்ணீர் சிந்த வைக்கிறார். காதலித்தவனை விட்டு ராஜி, மற்றவனை மணந்த பிறகு, காதலனைக் காண நேரும் போது தன் சலனத்தை மறைத்து அவனுக்குப் புத்தி கூறி, துயரம் சுமந்து, பழி ஏற்று, இறுதியில் ஈருயிரும் ஓருயிராய் இவ்வுலகை விட்டு நீங்கும் காட்சியையும், கதையின் ஊடாடும் உணர்ச்சிப் போராட்டங்களையும் மறக்க முடியாதவாறு சித்திரித்துள்ளார். இனிமையும், அழகும் கலந்த சரளமான நடை இவருடையது.

திருமதி. சூடாமணி அவர்கள் ''மனதிற்கினியவள்'' என்பதற்கு நாவல் பரிசும், ''இருவர் கண்டனர்'' என்பதற்கு நாடகப் பரிசும் பெற்றவர். இவரது கதைகளில் ஆழங்காண முடியாத துயரம் குமுறி நிற்கும். உண்மையுணர்வு ஒன்று அனைவரின் உள்ளத்தையும் தொட்டுவிடும். குணச் சித்திரங்களை உருவகப்படுத்தும்போது அவருக்கே உரித்தாகும் சூழ்நிலைகளின் அமைப்பால் திறனுற நம் மனத்தில் அதைப் பதியவைக்கும் ஆற்றல் மிக்கவர். ''மகளின் கைகள்'' ஏழைக் கணவனின் வீட்டில் தேய்ந்து போவது கண்டு துடிக்கும் தந்தை, சில்லறையை எதிர்நோக்காமல் முழு நோட்டுகளாகவே எடுத்துக் கொடுத்துவிட்டுத் தன் போக்கில் செல்லும் கடமை தவறாத தபால்காரர், ரயிலில் போகும்போது 'விலுக் விலுக்'கென்று இழுப்பு வந்து பிறரின் அனுதாபத்தைப் பெற்ற எரிச்சலால், அவர்கள் புகழ்ந்து போற்றும் எழுத்தாளன் தானே என்று சொல்ல முயன்று, அதனால் தன் கதைகளிலும் அநுதாபம் கவிந்து கொள்ளுமோ என்று ஒடுங்கிக் கொள்ளும் கதாசிரியர், இருபது வருடமாகக் குடியிருந்த வீட்டைக் காலி செய்யும்போது, அந்த வீட்டின் வெறும் சுவர்களை மட்டும் காணாமல் மறைந்துவிட்ட பெற்றோர்களின் தெய்விக ஞாபகங்களின் இருப்பிடமாக அதைத் துதிக்கும் மகன், வயதேறியும் குழந்தை வேண்டும் என்று சேதுஸ்நானம் செய்யும் நம்பிக்கையைத் தகர்ப்பதுபோல் தோழி கொணரும் அனாதைக் குழந்தையைக் கைநீட்டிப் பெறக் கூசும் தாயின் அவலம்—ஆகியவற்றைப் புதிய கோணத்தில் நாம் காண்கிறோம். அப்படி ஒவ்வொரு பாத்திரப் படைப்பும் அதன் மேன்மை நிலையிலேயே நமக்கு அறிமுகமாகி மனத்தில் பதிந்து நின்றுவிடும் அமரத்துவம் வாய்ந்தது. மனோதத்துவமும் வாழ்க்கைத் தத்துவமும் இணைந்து, கருத்துச் செறிவான நடையோடு ஆசிரியை வெளிப்படுத்தும் சோகம், ஏக்கம், நிராசை போன்ற உணர்வுகள் அந்தந்த உயிர்களின் துடிப்புக்கு அவரே பிரதிநிதியாகிக் கூறுவதுபோன்ற பாவனை நிறைந்தவையாகும். பல வானொலி நாடகங்களும் இவர் எழுதியுள்ளார். ஊனமுற்றவர்களின் வாழவேண்டும் என்னும் துடிப்பை இவரது கதைகளில் நாம் காணலாம்.

திருமதி. லட்சுமி சுப்ரமண்யம் அவர்கள் சிறுகதைப் பரிசும், நாவல் பரிசும் பெற்றவர். மெல்லிய மனவுணர்வுகளைச் சித்திரிக்

கும் சிறுகதைகளை உருவாக்குவதில் கைதேர்ந்தவர். இலேசான மன-அலைகளை எழுப்பும் ஒரு சம்பவம், ஒரு ஞாபகம், ஓர் உணர்ச்சித் துளிர்—இவைகள் இழையோடும் அனுபவம் இவர் கதைகளின் கருப்பொருளாக அமைந்து விடுகிறது. துடிப்பும், அழகும் பின்னும் புதிய நடை, சொற்களால் மெல்லிய உணர்வுகளை விரித்துக் காட்டும் அழகு, பிரமிக்க வைக்கும் வார்த்தைத் தொகுப்பு, சிந்திக்க வைக்கும் சிறுசிறு வரிகள்–நூதனமாக அவர் கையாளும் இந்த முறையால், பெயரைப் பார்க்காமலேயே அவர் கதையைத் தரம் பிரித்து நம்மால் காட்டிவிட முடியும். ஒரு குடும்பப் பெண்ணின் மனத்தைக் கணவன் கணநேரத் திரைவிலக்கில் அறிந்துகொள்ளும் "கவர்ச்சி" என்னும் கதையும், மறைந்து போன மனைவியின் பிம்பத்தைக் கண்ணெதிரே வேறொரு பெண்ணிடம் கண்டு கணவன் குமுறும் "ராஜி" என்னும் கதையும் ஆசிரியையின் மனநிறைவில் பூத்த மலர்கள்; வாசகர்களால் மறக்க முடியாதவை. "ஒற்றை" என்னும் கதையில் வரும் கண்ணன் பாத்திரப் படைப்பும், அவன் மன நிலையைப் பட்டும் படாமலும் விளக்கி, 'கடிதம் காணவில்லை; அதன்பின் அவனையும் காணவில்லை' என்று படிக்கும்போது, அவர் உணர்த்த வேண்டியதை உணர்த்தியே கதையை முடிக்கிறார். இதே உத்தியை—அதாவது சொல்லாமற் சொல்லும் விதத்தை இவரது பல கதைகளிலும் காண்கிறோம். வளர்ந்துகொண்டிருக்கும் "துடிப்பின் எல்லை"யில் உமாவின் ரகசிய உவகையின் மலர்ச்சியையும், சோகத்தின் வாட்டத்தையும், துடிப்பின் கொந்தளிப்பையும் கண்கூடாகக் காண்கிறோம்.

திருமதி. ரங்கநாயகி அவர்கள் பாரதம், பாகவதம், ராமாயணம் போன்ற இதிகாச—புராணங்களின் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு சற்றும் சுவை குன்றாமல் நிறைய சிறுகதைகள் எழுதியுள்ளார். எழுத்துலகின் மிக நீண்ட அனுபவம் பெற்ற இவர் வேறு சிறுகதைகளும் நிறைய எழுதியுள்ளார். திருமதி. ஜயலட்சுமி அவர்கள் நல்ல மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எளிய நடையில், திறமையான கதையமைப்போடு சிறுகதைகள் எழுதி வருகிறார். வாழ்க்கையின் மிகச் சாதாரண ஆசாபாசங்களை அழகாகப் பின்னி அமைக்கும் இவர் கதைகள் எல்லாப் பத்திரிகைகளிலுமே வெளிவருகின்றன. நிறைய வானொலி நாடகங்கள் எழுதியுள்ளார். "மகேஸ்வரி" போன்ற புனைபெயரிலும் இவர் எழுதி வருகிறார்.

திருமதி. நீலாராமமூர்த்தி அவர்கள் சிறுகதைப் பரிசு பெற்றவர் அநேக சிறுகதைகளும், குறுநாவலும் எழுதியுள்ளார். கதைத் துறையைவிடக் கவிதையில் அதிக ஈடுபாடு கொண்டு எழுதி வருபவர். தன் சொந்தப் பாடலுக்குத் தானே சுர–அமைப்புச் செய்து "ஸ்துதி மணிமாலை" என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். இந்நூல் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது. பாடல் இயற்றும் துறையில் ஒரு சில பெண்களே ஈடுபட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

திருமதிகள் எம். எஸ். கமலா, சி. ஆர். ராஜம்மா, எல். என். சியாமளா, ஜி. கே. பொன்னம்மாள், கே. ஆர். மீனாட்சி, கிரிஜா, வேங்கடலக்ஷ்மி, உமா குருமூர்த்தி, விமலா ரமணி, ருக்மிணி பார்த்தசாரதி, மீனாக்ஷி ராமகிருஷ்ணன், ஸரஸ்வதி தியாகராஜன் போன்ற பெண்-எழுத்தாளர்கள் தத்தமக்கு உரிய முறையில் சிறுகதைகளும், நாவல்களும் எழுதி இலக்கியத்திற்கு நீண்ட சேவை செய்து வருகிறார்கள்.

பெண் - எழுத்தாளர்களின் எண்ணிக்கை ஆண் - எழுத்தாளர்களை நோக்கும்போது குறைவானதாக இருக்கலாம். ஆனால் இன்றைய இலக்கியத்தின் தரத்திற்கு அவர்கள் சமவுழைப்பை நல்கி, அதன் வளர்ச்சியில் பங்கு பெற்றுத் திகழ்வதை யாரும் மறுக்க முடியாது. குடும்பச் சூழ்நிலையை உதறிவிட்டு உலகைக் கண்டு அவர்களால் எழுத முடியாது என்ற கேலி வட்டத்திலிருந்து விலகி, எத்தனையோ இலக்கியப் படைப்புக்களைச் செய்து சான்று காட்டி விட்டனர். சமூகம், பொருளாதாரம், மனோதத்துவம், உயர்ந்த நாட்டுப் பற்று போன்றவற்றை மையமாகக் கொண்ட கதைகள் நிறைய வந்துகொண்டிருக்கின்றன. 'பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா' என்ற கவிஞனுக்கு, இந்த மறுமலர்ச்சியே நாம் அளிக்கும் உயிர்க் காணிக்கையாகட்டும்!

[குறிப்பேதுமின்றி நினைவைத் துணை கொண்டு குறுகிய கால-அளவில் எழுத நேர்ந்தமையின், தவறுகள் விடுபாடுகள் காணப்படின் மன்னிக்க வேண்டுகிறேன்.]

யானையின் நிலவு

[நா. பாண்டுரங்கன், எம். ஏ.]

குதிக்கும்
கற்கண்டு
கற்குன்று
விருந்து
அல்லித்
இறங்கித்
இதயம்
துதிக்கை
பிறைநிலா
வந்தது
மலர்ந்த
கூம்பும்
குன்று
கண்ட
சிரித்த
எழுந்த
நீல
சிரிக்கும்
காட்டுப்
விளைந்த
தோட்டத்து
குறித்த
குறித்த
“ இரவோ
இதற்குள்
வாழிய
காதலர்
வைக்கோற்
பச்சை
குளத்தில்
அசைந்து
தவறு
தவறிய
தாமரை
தங்க
செங்கதிர்
முல்லைத்
கண்மூடிக்
புலியைக்
ஓடிப்
பழம்போல்
கொடுக்கும்
போன்ற
உண்டும்
தாமரை
தண்ணீர்
சிரித்தே
யானையின்
என்றே
இரவெனச்
தாமரை
தாமரைக்
யானையின்
அல்லியோ
அல்லியைக்
கிழக்கில்
வானில்
அல்லியைக்
பூனைக்
முல்லை
மூலைக்குத்
படியே
படியே
இன்று
வந்தது
வான்மதி ”
இருவரும்
போரின்
இலைகள்
தண்ணீர்
நடந்து
புரிந்தது
இயற்கையும்
மீண்டும்
நிலவும்
மீண்டும்
தோட்ட
கிடந்த
கண்ட
பிரிந்து
கதிரவன்
கரும்பு
காட்டு
விளைந்தநீர்
அழகுக்
இன்பமாய்க்
இருந்தசெந்
தூயவெண்
பெரிதாய்
சிந்தனை
மருண்டு
குண்டு
தந்தப்
களுக்கெனச்
கண்ட
எழாமல்
நிலவு
கண்டு
குட்டியின்
விளைந்த
தோகை
குதித்து
தலைவனும்
இரக்கம்
வாழிய
என்று
களிப்பில்
வடிவ
பரவிக்
குடித்து
அடவியில்
தஸ்தா
தெளிவாய்ப்
தமிழாய்ச்
திரும்பி
சிரித்து
மூலையில்
களிப்புக்
புனமான்
ஒளிந்தனர்
எழுந்திடக்
வயலில்
யானை
வேட்கையால்
குளத்தில்
குடித்தது !
தாமரை,
தந்தத்தைப்
எண்ணிட
வந்ததால்
கூம்பிடக்
மலரையும்
பிறையையும்
சிரித்தது !
செங்கதிர்
திரும்பிட
எழுந்து
சிரித்தது !
பல்போல்
மேட்டுத்
மயிலாள்
வந்தாள் !
வந்தான் !
கொண்டு
இரவு !
வாழ்த்திக்
வீழ்ந்தனர் !
யானை
கிடக்கும்
முடித்ததும்
மறைந்தது !
மரைக்கு !
புரிந்தது
சிரித்தது !
மறைந்தது !
எழுந்தது !
மூழ்கிக்
காதலர்
போன்று
ஓடியே !

ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்

[கா. அப்பாத்துரை]

சொற்களஞ்சியங்கள் இருவகைப்படும். ஒன்று ஒரு மொழியாளர் தம் மொழிச் சொற்களையே தொகுத்து அகரவரிசையில் முறைப்படுத்திப் பொருள் விளக்குவது. மற்றொன்று இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளிடையே ஏதாவது ஒரு மொழியை அறியப்பட்ட அடிப்படை மொழியாகவும், மற்றும் ஒன்றை அல்லது பலவற்றை அறியப்பட வேண்டிய சிறப்பு மொழி அல்லது மொழிகளாகவும் கொண்டு, சிறப்பு மொழியாகக் கொண்ட மொழியின் சொற்களுக்கு அடிப்படை மொழியில் ஈடான சொற்களையோ அல்லது அம்மொழியாளர் உணரத்தக்க பொருள் விளக்கத்தையோ தருவதாகும்

பெயரளவில் இருவகைகளும் சொற்களஞ்சியமேயானாலும், இரு வகைகளின் நோக்கமும் முற்றிலும் வேறுவேறு ஆகும். அதே சமயம் இருவகைகளுமே தற்காலச் சூழ்நிலைகளில் இன்றியமையாதனவாகவும், புதுப்புது வகையில் வளர்ச்சிபெற்று வருவனவாகவுமே உள்ளன. ஒரு மொழிச் சொற்களஞ்சியங்கள் அம் மொழியாளர்க்குரிய தேசியப் பண்பாட்டு விளக்கங்களில் தலையானவையாகக் கருதப்படுகின்றன. அந்தந்த மொழியின் சொல்தொகை, சொல்வளம், சொல் மரபுகள், சொல்லும் சொற்றொடரும் குறித்த பண்பாட்டு மரபுகள், நாகரிக மரபுகள் ஆகியவை அம்மொழிக்குரிய தேசத்தின் நீள - அகல - ஆழ - உயரங்களை, நிறைவு குறைவுகளை, தனித்தன்மை தனிப்பண்புகளை அளக்கும் அளவுகோல்களாகின்றன. அத்துடன் இலக்கணமும், மொழிகளும், சொற்களஞ்சியமும், அந்தந்த மொழிக்குரிய வரையறைகளும், நாட்டு இயல்களும், சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படைத் துணையாகின்றன.

இருமொழிச் சொற்களஞ்சியங்கள் இன்று மேலைநாட்டில் உலகத் தொடர்பு வளர்க்க, உலகப் பண்பு வளர்க்க, உலக வாணிகம், உலகக் கல்வி, கலை, இயல்கள் - ஆகியவற்றை வளர்க்க ஒப்பற்ற கருவியாகக் கொள்ளப்படுகின்றன. ஆனல் கீழ்த்திசை இத்தகைய இருமொழி, பன்மொழிச் சொற்களஞ்சியங்கள் தேவைப்படுமளவு இன்று வளர்ந்து விடவில்லை. ஆகவே இருமொழிச் சொற்களஞ்சியங்களின் குறிக்கோளும் இங்கே தற்காலிகமாக வேறுபட்டதாகிறது. மேலை மொழிகளின் தற்கால நாகரிகக் கருத்துக்களையும், விஞ்ஞானக் கருத்துக்களையும் செவ்வனே எடுத்துக்காட்டும் ஆற்றலும், அவற்றின் வளர்ச்சிக்கு இயைய வளரும் வளமும் சிறப்பும் மிக்கவையாயுள்ளன கீழ்த்திசை மொழிகளோ தற்கால நாகரிகக் கருத்துக்களை எடுத்துக்காட்டும் வகையிலும், விஞ்ஞானக் கருத்துக்களைத் தெரிவிக்கும் முறையில் அவற்றின் வளர்ச்சிகேற்றபடி வளரும் உயிராற்றல் வகையிலும் பொதுவாகப் பிற்பட்டும், அப்பிற்பட்ட தன்மையிலும் பல்வேறு மொழிகள் பல்வேறு படியான பிற்பட்ட தன்மையுடையவையாகவும் உள்ளன. ஆகவே உடனடியாக இப்போது தமிழ்போன்ற கீழ்த்திசை மொழிகளில் தேவைப்படும் இருமொழிச் சொற்களஞ்சியங்கள், சிறப்பாக ஆங்கிலம்-கீழ்த்திசைமொழிச் சொற்களஞ்சியங்கள், ஆங்கில மொழியின் புது நாகரிகக் கருத்துக்களையும் விஞ்ஞானக் கருத்துக்களையும் கூடியமட்டும் எளிய முறையில் மக்களுக்கு விளக்கம் தருவதையும், முடியுமான இடங்களில் அறிஞர்க்கும் எழுத்தாளர்க்கும் சொல்லுக்கு ஈடான சொற்கள் கண்டு தெரிவிப்பதையுமே நோக்கமாகக் கொண்டவை ஆகும்.

தொடக்க காலங்களில் ஆங்கில - இந்திய மொழிச் சொற்களஞ்சியங்களை மேல்நாட்டு அறிவுத் தொண்டர், மக்கள் தொண்டர்களே அரிது முயன்று இயற்றி வந்தார்கள். மேலை - அறிஞர் இயற்றிய இந்த ஏடுகளே இன்னும் கீழ்த்திசையில் கலங்கரை விளக்கங்களாக உள்ளன என்று கூறுதல் மிகையாகாது. அயலவர்களான பெர்ஸிவல், ஸ்பால்டிங் போன்றவர்களும், அவர்கள் அடிச்சுவடு பின்பற்றிய ஒருசில கீழ்நாட்டு மக்களும் அருமுயற்சி செய்து, மொழிப் புலவர்கள் துணையைப் பெரிதும் பயன்படுத்தி நூற்றுண்டுக் கணக்கில் உழைத்துச் சிறப்புக் குன்றாத சொற்களஞ்சியங்களை ஆக்கித்தந்து சென்றுள்ளனர்.

ஆனால் உலகம் வளர்ந்து செல்கிறது. மேலை மொழிகள் ஆண்டுதோறும் அடையாளமறிய முடியாமல் முன்னேற்றமுற்று வருகின்றன. ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட இவ்வயல் திசைத் தொண்டர்களின் முயற்சிகள் இதனால் காலப்பிற்பாடாகிவிட்டன என்று கூறினால், அது வியப்படைதற்குரிய செய்தியன்று. ஆயினும் உலகின் இந்த வளர்ச்சிக்கேற்பச் சென்ற ஒரு நூற்றாண்டாக இரு மொழிச் சொற்களஞ்சியங்கள் வளர்ந்துள்ளன என்று கூறமுடியாது. ஏனெனில் இவற்றை இயற்றியவர்கள் பெரும்பாலும் பள்ளிப் பிள்ளைகளையும் பள்ளிகளையும் கருதியே எழுதியதனால், வாணிப ஆதாய நோக்கு ஒன்றே முனைத்து நின்றது. எழுதியவர்களும் சிறப்பு மொழியில் அரைகுறை அறிவும், அடிப்படை மொழியில் அதுதானும் அற்றவர்களாகவே இருந்தனர். சிறப்பு மொழியில் அறிவு சற்று மேம்பட்டிருந்த இடத்திலும், அடிப்படை மொழியில் அறிவு அந்த விதத்துக்குக் குறைந்திருப்பதே இயல்பாகிவிட்டது. ஏனெனில் அயல்நிலத் தொண்டர்களைப் போல், அவர்கள் நாட்டு மொழிப்புலவர் உதவி பெறுவதில் ஒரு சிறிதும் முனையவில்லை. தாமே நாட்டு மக்களாதலால், தம் அயல் மொழிப் புலமையே போதிய புலமை என்று கருதியும், சிற்றூதியத்துக்கு உழைத்துவரும் தாய்மொழிப் புலவர் உதவி தமக்குத் தாழ்வு தருவது என்று நினைத்தும் வந்துள்ளனர்.

இருமொழியறிவும் ஒப்பாக, இருமொழிப் பற்றும் இணையாகக் கொண்டு, நாட்டு மொழிப் பற்று தேசியப் பற்றாக அமைந்தவர்களால் இயற்றப்படும் இருமொழிச் சொற்களஞ்சியங்களே இப்போது தேவை. இந்திய அரசும், கிளை அரசுகளும், பல்கலைக்கழகங்களும் இத்துறையில் விழிப்படைந்து வருகின்றன. மராத்தியில் தனியார் முயற்சியும், கன்னடத்தில் அரசியலைத் தலைமையாகக் கொண்ட தேசிய முயற்சியும் இத்துறையில் பத்து முப்பது ஆண்டுகள் முயன்று பெருவெற்றி கண்டுள்ளன.

மைசூர் அரசினர் வெளியிட்ட ஆங்கிலக் கன்னடச் சொற்களஞ்சியத்தை முன்மாதிரியாகக் கொண்ட முயற்சியே மையப் பல்கலைக்கழக இணைக்குழு ஆதரவுடனும், தமிழக அரசினர் ஆதரவுடனும் இன்று சென்னைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு நடத்திவரும் சொற்களஞ்சியப் பணி யாகும். இது 1959 மார்ச்சில் தொடங்கி நடைபெற்றுவருகிறது. ஆக்க வேலையுடன் கிட்டத்தட்ட இணைப்பாகத் தொடர்ந்தே அச்சு வேலையும் நடந்துவருகிறது. 1963 ஜனவரியில் ஏறத்தாழ 400 பக்கங்கள் அடங்கிய முதற் பகுதியும், 1965 மார்ச்சுக்குள் முழுப் பகுதியும் வெளிவந்து தமிழகத்துக்கும் கல்வியுலகுக்கும் பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே தமிழ்ச் சொற்களஞ்சியம் மூலம் (Tamil Lexicon) தமிழுலகுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் பெருந்தொண்டாற்றியுள்ளது. ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் மூலம் இன்னொரு வகையில் காலத்துக்கேற்ற புதுத் தேவைகளுக்கொப்ப தமிழுக்கும் தமிழ் உலகத்துக்கும் இன்னும் ஓர் அரிய தொண்டாற்றும் என்பது உறுதி. வருங்காலத் தமிழக ஆங்கில மொழி மாணவர் தேவை கருதியே இக்களஞ்சியம் ஆக்கப்படினும், வருங்காலத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் தமிழ்ஆட்சித்துறையினருக்கும் அது பேருதவியாயமையும் என்பதில் ஐயம் என்ன இருக்கிறது?

Phone : 23430. Grams : "Exquisite"

For all your Requirements of Up-to-date Sanitaryware, Bathroom Fixtures, Marble Slabes, Picture Tiles, Marble Chips, White Cement etc.,

Contact :

SWAMY & COMPANY,

Sanitary Engineering Contractors,

318, Thambu Chetty Street, MADRAS-1.

Enquiries Solicited

புரட்சிக் கவிஞர்

[பா. பாலசுப்பிரமணியன் எம். ஏ., எம். லிட்.]

புரட்சிக் கவிஞர் யார்? என்று அறியாத தமிழன் இருக்க முடியாது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராக அவர் திகழ்வதே அதற்குரிய காரணமாகும். புரட்சிக் கவிஞர் என்ற புகழ்ப் பெயர் பெற்ற கவிஞர் பாரதிதாசனார் புதுவையிலே 1891ஆம் ஆண்டில் பிறந்தவர். அவர் பாரதியாரிடத்தில் பெருமதிப்பு வைத்திருந்தவர்; "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்று தொடங்கும் பாடலை இயற்றிப் பாரதியாரிடத்தில் பாராட்டுப் பெற்றவர். தாம் பாரதியாரிடத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகத் தம் பெயரையே பாரதிதாசன் என்று அமைத்துக் கொண்டவர். இதனால் அவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம் என்பதே பலருக்கும் தெரியாமற் போய்விட்டது.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தம் சிறந்த கவிதைகளால் மக்கள் மனத்தைக் கவர்ந்த பாரதியார் பழைய மரபுகளிலிருந்து மாறுபட்டுப் புதியதொரு பாதையை வகுத்துவிட்டார். நாட்டுப் பற்று, மொழிப் பற்று முதலிய உணர்ச்சிகள் மிக்குள்ள பாடல்களை இயற்றித் தமிழ்க் கவிதையுலகில் ஓர் புதுமையைத் தோற்றுவித்தார். அவரைப் பின்பற்றி வந்த பாரதிதாசனார் அவரினும் ஒரு படி முன்னேறிவிட்டார். தமிழ்க் கவிதையே அவரால் ஒரு புத்துணர்ச்சி பெற்றது என்பது மிகையாகாது. பாரதியாரைப்போல் நாட்டுப் பற்று, மொழிப்பற்று முதலிய உணர்ச்சிகளும், சமுதாய முன்னேற்றத்தைக் குறித்த நாட்டமும் இவருடைய கவிதைகளில் காணப்படுகின்றன என்றாலும், அவை ஒரு புது வேகத்துடன் படிப்பவர் மனத்தை ஈர்த்துவிடுகின்ற முறையில் அமைந்திருக்கக் காணலாம். உணர்ச்சி வேகமும் கவர்ச்சித் தன்மையும் பொருந்திய அவருடைய கவிதைகள் பயிலுவோர் மனத்தில் அப்படியே தங்கிவிடுவதில் வியப்பில்லை. சுருக்கமாகக் கூற வேண்டுமானால், எந்தப் பொருளாயினும் அதைக் குறித்து ஒரு சிறந்த கவிதையை இயற்றக்கூடிய ஆற்றல் பெற்றவர்; அந்தப் பொருளைக் குறித்து அதனினும் சிறந்த கவிதை தோன்ற முடியாது என்று துணிந்து கூறக்கூடிய அளவு தனிச் சிறப்பைப் பெற்றவர் அவர்.

புரட்சிக் கவிஞர் கிட்டத்தட்ட ஐம்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து கவிதைகள் இயற்றி வருகிறார். அவற்றைப் பல்வேறு இதழ்களில் வெளியிட்டதுடன், கவிதைக்கென்றே 'குயில்' என்ற புது இதழையும் தொடங்கி அதில் தொடர்ந்து தம் கவிதைகளை வெளியிட்டுவருகின்றார். இவ்வாறு வெளிவந்த கவிதைகள் திரட்டப்பட்டுப் பல தொகுப்புகளாக வெளியாகியுள்ளன. இத்தொகுப்புகளில் முதன்மையானது மூன்று தொகுதிகளாக வெளிவந்த "பாரதிதாசன் கவிதைகள்" ஆகும். இத்தொகுப்பிலுள்ள கவிதைகளின் சிறப்புக்களைத் தனித்தனியே எடுத்துச் சொல்ல முயல்வதானது கொல்லன் கடையில் ஊசி விற்க முனைவது போன்று முடியும். தமிழ் இலக்கியத்திலேயே ஒப்பும் மிக்கும் இல்லாத மாணிக்கங்கள் இவை என்று கூறுவது மிகையாகாது. இல்லறம் என்னும் நல்லறம் எவ்வாறு சிறந்தமைய வேண்டும் என்பதைக் கவிஞர் தம் கற்பனையில் ஊறி எழுந்த கருத்துக்களைச் சேர்த்துக் கவிதைகளாக வடித்துள்ளார். அவற்றின் ஐந்து தொகுதிகள் "குடும்ப விளக்கு" என்ற மகுடத்தின்கீழ் வெளியாகியுள்ளன. கவிஞரின் கற்பனைக் குடும்பத்தையும், அதன் மையமெனத் திகழும் நல்லாளான இல்லாளையும் அவற்றில் கண்டு மகிழ்ந்து பயன் பெறலாம்; வான்புகழ் வள்ளுவர் பரம்பரையிலே வந்த நம் கவிஞர், அவரைப் போலவே எப்படி இருக்கவேண்டும் என்பதுடன் எப்படி இருக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்தியுள்ளார். அவருடைய கவிதைத் தொகுதியான 'இருண்ட வீட்டை'ப் பயிலுவோர், வீட்டில் விளக்கேற்ற வேண்டிய தேவையைத் தெள்ளிதின் உணருவர். இயற்கை பற்றிய அவருடைய கவின்மிக்க கவிதைகள்

‘அழகின் சிரிப்பு’ என்ற தொகுப்பாக வெளி வந்துள்ளன. அவருடைய தனிப்பாடல் தொகுதிகளில் தலைசிறந்தவை ‘இசைப் பாடல்’ தொகுதிகளாகும். நெஞ்சை அள்ளும் கருத்துக்களுக்கு உள்ளத்தை உருக்கும் இசை வடிவம் தருவதில் அவருக்கு நிகர் அவரேதான் இருக்க இயலும். அவருடைய மிகுந்த தமிழ் மொழிப் பற்று, தமிழ் நாட்டுப் பற்றில் முகிழ்த்த கவிதைகள் ‘தமிழியக்கம்’ என்ற தொகுப்பாக வெளியாகியுள்ளன. இந்தக் கவிதைகளைப் படிக்கும்பொழுது, ‘தமிழுக்கும் அமுதென்று பேர், தமிழ்—இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ என்று பாடிய கவிஞரின் தமிழ் உள்ளத்தை தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

அவருடைய தனிப்பாடல்களினும் சிறப்பு மிக்கவை அவருடைய காவியங்களாகும். சமுதாய சீர்திருத்தங்களைக் குறித்த அவர் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் காவியம் ‘சஞ்சீவி மலைச்சாரல்’ ஆகும். கதைப்போக்கிற்குத் தடையில்லாமல் கருத்துக்களை அள்ளித் தெளிப்பது அவர்தம் தனிச் சிறப்பு. அந்த ஆற்றல் இக்காவியத்தில் நனிசிறக்கக் காணலாம். ‘எதிர்பாராத முத்தம்’, ‘காதலா? கடமையா?’, ‘கடல்மேற் குமிழி’, ‘பாண்டியன் பரிசு’, ‘தமிழச்சியின் கத்தி’, ‘வீரத்தாய்’ முதலிய நாடறிந்த நல்ல காவியங்கள் அனைத்தும் அவருடைய கவிதைத் திறனில் வெளியாகிய அருஞ்செல்வங்களே. இவை அனைத்திலும் தலைசிறந்து விளங்குவது அவருடைய ‘புரட்சிக் கவி’ என்ற ஒப்பற்ற காவியமாகும். ‘பில்ஹணீயத்தை’த் தழுவி இது மலர்ந்தது எனினும், ‘பில்ஹணீய’த்தினும் இது சிறப்புடன் மிளிர்கிறது என்பது இருமொழியிலும் வல்லவர் கூற்று. ‘புரட்சிக் கவி’யைப் பயிலாத படிக்கத்தெரிந்த தமிழர் யாரும் இரார். அதனுடைய அழகிய நடையும், உணர்ச்சிப் பெருக்கும் படிப்பவரை ஆட்கொண்டு மனத்தில் ரீங்காரம் செய்து கொண்டேயிருக்கும். இதன் அருமை பெருமைகளை உணர்ந்த தமிழ்ப் பெருமக்கள் அக்காவியத்தின் தலைப்பையே அவருக்குச் சூட்டி மகிழ்ந்தனர்.

வறுமையில் உழல்பவர், தாழ்த்தப்பட்ட மக்கள், மூடநம்பிக்கைகளில் சிக்குண்டு பிணைக்கப்பட்டிருக்கும் பெண்ணினம்—ஆக எங்கெங்கு துன்பம் நிறைந்திருக்கிறதோ அங்கெல்லாம் கவிஞரின் பரிவுள்ளம் படர்ந்து சென்று அவர்களுடைய துன்பங்களைத் துடைக்க தம் கவிதை ஆற்றலைப் பயன்படுத்தியிருப்பதை அவர் காவியங்கள் அனைத்திலும் காணலாம். இதே போக்கில் சிறந்த நாடகங்கள் சிலவற்றையும் அவர் இயற்றியுள்ளார். அவற்றின் தொகுப்பே ‘பாரதிதாசன் நாடகங்கள்’ ஆகும். மற்றும் அவர் எழுதியுள்ள இலக்கியக் கட்டுரைகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கணக்கில. எழுபத்து மூன்று ஆண்டுகள் கடக்கின்ற இந்நிலையிலும் அவர் எழுத்துப் பணியே செய்து வருகிறார் என்று கேட்கும்பொழுது, நம் உள்ளமெலாம் பெருமையுடன் விம்மும். ‘சிலப்பதிகாரம்’, ‘மணிமேகலை’ இரண்டையும் ஒட்டிக் ‘கற்பின் மாட்சி’, ‘மணிமேகலை மாண்பு’ என்ற இரு காவியங்கள் உருவாகி அச்சேறி இன்னும் சில நாட்களில் வெளிவர இருக்கின்றன. சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் பொதிந்த இவ்விரு காவியங்கள் ‘சிலம்பு’,

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம்.

விலை ரூ. 5-00] [வி. பி. செலவு ரூ. 1-25

வாணி தமிழ் ஹிந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு தானே ஹிந்தி சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூ. 2-25 ந.பை] [வி.பி. செலவு 85 ந.பை.

குடும்ப இலகு வைத்தியம்: ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது. இன்னும் அநேக வைத்திய ரகசியங்கள் அடங்கியது.

[தபால் செலவோடு ரூ. 3-50

ஐசுவரியம் (குடிசைக் கைத் தொழில்கள்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகுவர்த்தி. பன்னீர், ஸ்னோ, பேஸ்பவுடர், சாம்பிராணி, பெனாயில் போன்ற 200 கைத்தொழில்கள் சேர்ந்தது

விலை ரூ. 4-00] [வி. பி. செலவு ரூ. 0-85

VANI BOOK DEPOT

3, மலைய பெருமாள் தெரு,

Post Box No. 239, Madras-1.

'மணிமேகலை' ஆகிய இரண்டிலும் சில குறைகள் உள்ளன என்று குறை கூறுவதையே தம் தொழிலாகக் கொண்டுள்ள சிலருடைய உள்ளத்தை நிறைவுபடுத்துவனவாக அமையும். 'பன்மணித் திரள்' என்ற தலைப்பில் அவருடைய கவிதைத் தொகுப்பு ஒன்றும் அண்மையில் மலர இருக்கின்றது.

புரட்சிக் கவிஞர் புதுவைப் பள்ளியில் பல்லாண்டுகளாகத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பள்ளியில் ஒரு சிலர்க்குத் தமிழ் கற்பித்தார். ஆனால் தம் அரிய கவிதைகளின் வாயிலாகத் தமிழினத்திற்கே தமிழன் பெருமையை உணர்த்தினார். அவர் காட்சிக்கு எளியர்; பழகுவதற்கு இனியவர். ஒரு வகையில் குழந்தை போன்ற தன்மையுடையவர். குறை கண்ட இடத்தில் சற்றும் தடுமாறாமல் வன்மையாக இடித்துக் கூறும் இயல்புடையவர். இந்தப் போக்கு பலருக்குப் பிடிப்பதில்லை;என்றாலும் அதைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. பிறரைக் கேட்டுக்கொண்டா கடல் தன் வரம்புகளை அமைத்துக் கொள்கிறது? அல்லது மலை தான் மக்களிடம் அனுமதி கேட்டா ஓங்கி வளர்கிறது? கடல்போன்று விரிந்து ஆழ்ந்தும், மலைபோன்று உயர்ந்தும் விளங்கிவரும் அவர் கவிதையுள்ளம் எந்தக் கட்டுப்பாட்டையும் கண்டு அஞ்சுவதில்லை. கட்டுப்பாட்டைக் கண்டவிடத்தில் தகர்த்தெறிவதே அவர் சிறப்பியல்பு.

புரட்சிக் கவிஞர் தம் அரிய கவிதைகளின் வாயிலாகப் பல எண்ணற்ற தமிழ் மக்களுக்கு உணர்ச்சியூட்டியதுடன், நூற்றுக் கணக்கான தமிழ்க் கவிஞர்களையும் உருவாக்கித் தந்துள்ளார். பாரதிதாசனார் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கவிதைகள் இயற்றிப் பெயரும் புகழும் ஈட்டிவரும் கவிஞர்கள் ஏராளம் ஏராளமாக இருக்கின்றனர். புரட்சிக் கவிஞரின் அரிய சாதனைகளில் இதுவே தலைசிறந்தது எனலாம்.

ஆயிரமாண்டுகளுக்கு ஒரு முறையே நல்ல கவிஞர் ஒருவர் பிறப்பார் என்பது பொதுவான நம்பிக்கை. வான்புகழ் வள்ளுவருக்குப் பின்னர் ஆயிரம் ஆண்டுகள் கழித்து நாடு புகழ்ந்த சேக்கிழார் பிறந்தார்; அவருக்குப் பின்னர் ஆயிரமாண்டுகள் இடைவெளியில் பார்புகழ் பாரதிதாசனார் பிறந்தார் என்று எண்ணும்பொழுது, அந்த நம்பிக்கை சற்று வலுவடைகின்றது. அத்தகைய அரும்புகழும், பெருமையும் பெற்ற புரட்சிக் கவிஞருக்குக் கேடயம் அளித்துச் சிறப்புச் செய்கின்றது இவ்வாண்டு தமிழ் எழுத்தாளர் சங்கம். இதனால் அவர் பெருமை உயரும் என்று சொல்வதைவிடச் சங்கத்தின் பெருமையே சிறக்கும் என்று கூறுவதே பொருந்தும். என்றோ செய்திருக்க வேண்டிய—செய்யத் தவறிவிட்ட — ஒரு கடமையை இன்று முடித்து நிறைவு தேடிக்கொள்கிறது சங்கம்.

A REVOLUTION IN THE KITCHEN!

SRI GANESHRAM'S

Cooking Made More Easy!! **777** **Many Dishes in 3 Minutes with**

Food Products, Madras-1. S. India

777 Brand "DHIDEER" (Instant)

Food Products

Mix the Powder in WATER & BOIL
it is Ready for Use!
No Grinding, no waiting,
Yet with original colour, flavour & taste!!

Rice Idli, Rice Dosai, Sambar, Rasam

AND OTHER UMPTEEN VARIETIES

Enquiries Solicited,

SRI GANESHRAM & CO.,

MADRAS-1 (S. India)

Phone: 23665 Gram: "COCHUTNI"

மகாவித்துவான்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

[கோ. சங்கரராசன்]

தமிழெனும் அளப்பருஞ் சலதியில் மூழ்கி சொற்பொருள் ஆய்ந்து நற்பொருள் விளக்கும் நுண்மாண் நுழைபுலமும், நுணங்கிய கேள்வியும், கல்விப் பெருக்கும் சொல் திறமும் ஒருங்கு பொருந்திய உயர்தனிப் புலவர் மகாவித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளையவர்கள்.

வாழ்க்கை

சான்றோர் மிகுந்த தொண்டை நாட்டிலே மேட்டுப்பாளையம் என்னும் ஊரில் 1896-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முப்பத் தோராம் நாள் திரு. வீராசாமிப் பிள்ளை அவர்களின் புதல்வராய்த் தோன்றிய பெரும் புலவரவர்கள் சென்னையில் பல பெருந் தமிழ்ப் புலவர்களை அடுத்துக் கல்வி பயின்று தொடக்கத்தில் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரிய ராகப் பணியாற்றினார்கள். பின்னர்ப் புரசைப் பெப்ரீசியஸ் உயர்நிலைப் பள்ளியிலும், காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்று இப்பொழுது சென்னைப் புரசையில் தங்கித் தமிழ்ப் பணி புரிந்து வருகின்றார்கள்.

நூல்கள்

இளைஞர் தமிழ்க் கையகராதி முதலிய பயன் தரும் நூல்களையும், மாணவர்களுக்குப் பயன்படும் பல பாட நூல்களையும் இயற்றியருளியதோடு கீழ்க்கண்ட நூல்களை இவர்கள் செவ்விய முறையில் பதிப்பித்துள்ளார்கள்:

1. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – நச்சினார்க்கினியர் உரை – 1938
2. இறையனார் களவியல் உரை
3. குசேலோபாக்கியானம்
4. கம்பராமாயணம்-உரைநடை-பகுதிகள்-4
5. யாப்பருங்கலவிருத்தி – 1938
6. அஷ்டப் பிரபந்தம் – 1952
7. பஞ்சதந்திரப் பாடல் – 1958

பிற பணிகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் வெளியிட்டு வரும் கம்பராமாயணப் பெரும் பதிப்பு ஆசிரியர் குழுவில் புலவர் அவர்கள் பணியாற்றுகின்றனர். தமிழகப் புலவர் குழுவில் அவர்கள் ஓர் உறுப்பினர்.

சென்னையில் இப்பொழுது கம்பன் மன்றத்தில் வாரந் தோறும் சனிக்கிழமை 6 – மணிக்குக் கம்பராமாயண வகுப்பும், தமிழியல் மன்றத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை 3.30 – மணிக்கு நன்னூல் வகுப்பும், புரசைச் சுந்தரர் கல்லூரியில் இலக்கிய வகுப்புகளும் நடத்திப் பொதுமக்களுக்குத் தமிழறிவூட்டி வருகின்றார்கள்.

புலவரவர்கள் பாடம் நடத்திப் பொருளைத் தெளிவுபடுத்தும் முறையும், நயமும் தனிப் பண்பு வாய்ந்தவை. பாடலின் சொல் ஒவ்வொன்றிலும் உளம் ஒன்றி, அதன் சிறப்பினை எடுத்து விளக்கிச் செல்லுவதில் தமக்கு நிகர் தாமே எனப் பெரும் புகழ் படைத்தவர் பிள்ளையவர்கள்.

இலக்கணமும், இலக்கியமும் ஒருங்கு உறைதல் இயலாது என்பது இவரது வாதம். ஆனால் பரிமேலழகர்,

“ எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்
—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற்
பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.”

என்னும் பாடலால் இலக்கண அறிவு சான்ற இலக்கியத்தின் சிறப்பைக் கூறியுள்ளபடி இருதுறைப் புலமையும் நிறைந்து மொழித் திறத்தின் முட்டறுத்து மாணவர் நெஞ்சங்

களிலே செஞ்சொற் கவியின்பத்தைத் தேக்கித் தெளிவுறுத்தும் செந்நாப் போதார் நமது மகாவித்துவான் அவர்கள்.

கையெழுத்து

அவர்களது நெஞ்சமும் நினைப்பும் சிந்தையும் செயலும் எவ்வளவு தெளிவும் திட்பமும் நிரம்பியனவோ அவ்வளவுக்கு அவர்களது கையெழுத்திலும் தெளிவும் அழகும் சிறப்பும் செம்மையும் திகழக் காணலாம்.

சொல்லாடல்

தனித்து உரையாடுகின்ற பொழுதும் தமிழைப் பயிற்றுகின்ற பொழுதும் அவர்கள் சிதைவுறுச் செந்தமிழ்ச் சொற்களைத் திறம்பாமல் உச்சரித்துப் பயன்படுத்துவது கேட்போரின் செவிகளில் இனிய இசையெனப் பாய்ந்து இன்பமூட்டும்.

செவ்வி

புலவரவர்கள் கடலனைய கல்வியுடையராயினும் இளைய எழுத்தாளர் தம் எளிய நூல்களைக் கொடுத்துப் பார்வையிட வேண்டுங்காலும், தம் பிஞ்சு மனங்களால் தளிர்த்த தவழ் நடைப் பருவக் கருத்துக்களைக் கூறிக் கருத்துரை வேண்டுங்காலும், பரிவுடனும் பாங்குடனும் அவற்றைப் பார்வையிட்டும், செவிமடுத்தும், சால்புற்ற நன்மொழி கூறியும், அவர்களுக்கு ஊக்கமும் உணர்வும் ஊட்டிப் பாராட்டியும் வழி கூட்டுதல் மறக்க வியலா மாண்புறு செயலாகும்.

✲ பிரிண்டிங் பேப்பர்கள்
✲ பேஸ்டுகள்
✲ மார்பிள்கள்
மற்றும் உங்களுக்குத்
தேவையான பேப்பர்
வகைகளுக்கு

✲

சிவாஜி பேப்பர் ஸ்டோர்ஸ்
32, ஆண்டர்சன் தெரு,
சென்னை-1.

Grams : "BUSYMAN"

ஆங்கிலப் பயிற்சி

ஆங்கில நூல்களில் புலவரவர்களுக்கு ஆழ்ந்த பயிற்சி உண்டு. கார்லைல், லாங்பெலோ, டெனிசன், மில்டன், சேக்ஸ்பியர் முதலிய பெரும்புலவர்களின் சொற்பொருள் நயங்களிலே தோய்ந்து, தமிழ்ப் பெருங் கவிஞர்களின் நூல்களிலே காணப்படும் கருத்துக்கள் கற்பனைகளுடன் அவை ஒத்து வருமிடத்து அவ்வொப்புமையைத் தம் வகுப்புகளிலும் சொற்பொழிவுகளிலும் அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது, அவர்கள் நுண்மையும் திண்மையும் நிரம்பிய ஆங்கிலப் பயிற்சி நமக்குப் புலனாகின்றது.

எளிமை

தோற்றம், உடை, வாழ்வு, சொல் ஆகியவற்றில் சொல்லொணா எளிமையும் செம்மையும்சான்ற இப்பெரியாரவர்கள் பொருளையும் புகழையும் நாடாமலேயே இதுகாறும் வாழ்நாளைக் கழித்து விட்டார்கள். இடையறாது செந்தமிழ்நூல்களை ஆராய்வதும், அவற்றுள் காலத்தால் சிதைந்தவற்றைச் செப்பம் செய்வதும், ஆர்வமிக்க மாணவர்களுக்கு அவற்றை அருளொடு வழங்குவதுமே இச்செந்தமிழ்ச் செல்வர் நாடும் பொருளும் இன்பமும் போலும்!

சொற்பொழிவு நினைவு மலர்

சமண சமயக் கருத்துகள் பொதிந்த சிந்தாமணியெனும் பெருங் காப்பியத்துக்குப் புலவரவர்கள் மூன்றாண்டுக் காலம் காஞ்சி மாநகரில் சிறந்த விளக்கவுரை கூறித் தெளிவித்த பெருஞ் செயலுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் காஞ்சி சைன இலக்கிய மன்றத்தார் ஒரு சொற்பொழிவு நினைவு மலர் வெளியிட்டுப் பாராட்டியுள்ளனர்.

புலமைப் பரிசு

அண்மையில் அவர்களின் மணிவிழா சிறப்புறக் காஞ்சியில் நடந்தேறியது. அவ்வமயம் புலவர் பெருமக்கள் ஆற்றிய சொற்பொழிவுகளிற் சில "புலமைப் பரிசு" என்னும் தலைப்பில் தொகுத்து வெளியிடப்பட்டு இவ்வாண்டு பி.ஏ., பி.எஸ்ஸி தேர்வுகளுக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு

இடையறா உழைப்பாலும், சீரிய கல்வியறிவாலும், இனிய பண்புகளாலும், எளிய செவ்வியாலும் ஒருவர் நாடு போற்றும் நன்னிலை எய்த முடியும் என்பதற்குப் புலவரவர்கள் ஓர் எடுத்துக்காட்டாவார்கள்.

பழமைக்குப் புதுமையின் ஏற்பாடு

இவ்வாண்டு தமிழ் எழுத்தாளர் சங்கம் இவர்களுக்குப் பாராட்டு வழங்க முடிவு செய்துள்ளது வரவேற்கத் தகுந்ததாகும். படைப்பாற்றல் மிகுந்த புதுத் தமிழ் எழுத்தாளர்கள் பண்படுத்தப்பட்ட பழந்தமிழைக் கருவியாகக் கொண்டு பணியாற்றுபவர்கள். புதியன படைக்கின்ற எழுத்தாளருக்கு, இன்றுவரை வளர்ந்துள்ள பண்டை மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவை அவர்தம் உள்ளுணர்விலே நிழலாடவில்லையென்றால், எழுத்திலும் கருத்திலும் எழுச்சியும் மலர்ச்சியும் ஏற்படுவது இயலுமா? ஆகவே நிலைத்த பெருமைதரும் நெடிய இலக்கியங்களைப் படைக்க முனைந்துள்ள எழுத்தாளர்கள், பழமையையும் பண்பாட்டையும் மறந்தும் துறந்தும் முன்னே செல்ல முயலவில்லை. அவற்றை அணுகியும் அறிந்தும் நயந்தும் வியந்தும் பாராட்டுகின்றனர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டே இன்று இம்முதுபெரும் புலவரவர்களுக்குச் செய்யப்படும் சிறப்பாகும்.

வாழ்த்து

நாவீறுடையோன் நலமார் பெரும்புலவன்
பாவீறு காட்டுகின்ற பண்பாளன்—மே.வீ.வே.
செந்தமிழே சிந்தை செறிந்த திருவாளன்
சந்ததமும் வாழ்க தழைத்து.

PHONE : 25021 GRAMS : LEDGER

For your requirements of Paper & Boards

Contact :

PALANIAPPA & CO.,

45, BADRIAN STREET,

Post Box No. 179

MADRAS-1.

Sole Selling Agents for **"RAINBOW" Printing Inks for Madras City**

STOCKISTS :

- ★ ORIENT PAPER MILLS LTD.
- ★ SIRPUR PAPER MILLS LTD.
- ★ SESHASAYEE PAPER & BOARDS LTD.

Sales Depot :

2/53, Anderson Street, MADRAS-1.

இலக்கியப் பாலம் ரா. வீ.

[பி. எஸ். மணி]

'ரீடர்ஸ் டைஜஸ்டு' என்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு துணுக்கு வெளியாகி யிருந்தது. ஒருவர் தம் பிரபல டாக்டர் நண்பரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அவர் ஓய்வாக இருக்கும் நேரமே அபூர்வம். அப்படி அபூர்வமாக அந்த டாக்டர் ஓய்வெடுக்கும்போது.தங்கும் அறையில் அமர்ந்து கொண்டிருந்தார் வந்தவர். அந்த அறையில் பல அற்புதமான சித்திரங்கள் மாட்டப் பட்டிருந்தன. அந்த அழகிய சித்திரங்களில் தன் மனத்தைப் பறிகொடுத்தவாறு சிறிது நேரத்தைக் கழித்தார் அந்தப் புதிய மனிதர்.

டாக்டர் வந்ததும், "நீங்கள் டாக்டர் மட்டுமல்ல ; நல்ல கலையுள்ளம் படைத்தவர் என்பது இந்த அழகான சித்திரங்களை வைத்திருப்பதிலிருந்தே தெரிகிறது. இவைகளைப் படைத்தவர் யார் ?" என்று கேட்டார்.

"இந்தப் படங்களை வரைந்தது நானே தான். ஓய்வு நேரத்தில் இந்த வேலையில் ஈடுபட்டேன்!" என்றாராம் அந்த டாக்டர் சிரித்துக்கொண்டே. புதிய மனிதர் அப்படியே மூக்கின்மேல் விரலை வைத்து அயர்ந்து விட்டாராம். திரு. வீழிநாதன் அவர்களின் செயலாற்றும் திறனைக் காணும்போது, இந்தத் துணுக்கு அடிக்கடி நினைவிற்கு வரும். இந்தியில் அந்த மொழி வல்லவரே வியந்து பாராட்டும் அளவிற்கு எழுதும் ஆற்றல் படைத்த இவரது திறனை அந்தப் பிரபல 'டாக்டரோடு' ஒப்பிடத் தோன்றும். 'கல்கி' பத்திரிகைக்குக் கதைகள் எழுதிக் கொண்டிருப்பார் ; பிறகு வடநாட்டு இந்திப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும், கதைகளும் எழுதித் தள்ளுவார். அதே கையோடு ரேடியோவில் தமிழ் மொழியின் இலக்கிய வளத்தை வடநாட்டுக்கு வழங்கும் பேச்சிற்கு விஷயம் தயார்பண்ணிக் கொண்டிருப்பார். இத்தனை காரியங்களையும் இவரால் எப்படிச் சாதிக்க முடிகிறது என்பது நமக்கு வியப்பாக இருக்கும். இரவு நேரம் இவரைப் பொறுத்தமட்டில் பகற்போது. ஊண் உறக்கமின்றி எடுத்த காரியத்தை முடித்து விட்டே நகரும் வழக்கம் படைத்தவர். இல்லாவிட்டால் தமிழ் – இந்தி மொழிகளிலே இத்தனை படைப்புகளைச் சாதிக்க முடியாதுதான். ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கூறியதுபோல், 'தமிழுக்கும் இந்திக்கும் ஓர் இலக்கியப் பாலம்' அமைத்தவர் திரு. வீழிநாதன் அவர்கள்.

கலைகளின் பிறப்பிடம் என்று புகழ் பெற்ற தஞ்சை மாவட்டத்தில், விஷ்ணுபுரத்தில் 1920ஆம் வருடம் மே மாதம் 15ஆந் தேதி திரு. வீழிநாதன் பிறந்தார். 'தன் கையே தனக்கு உதவி' என்ற கொள்கையில் பற்றுள்ளவர். சின்னஞ்சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பேற்று நடத்தவேண்டிய நிலையிலும், அதைத் தைரியமாக ஏற்றுச் சமாளித்தார். தம் இளவயதிலேயே இந்திப் பிரசாரகராகப் பணியாற்ற ஆரம்பித்தார்.

அவர் முதலில் இந்திப் பிரசாரத்திற்காகச் சென்றபோது, வயது வந்தவர்களெல்லாம், "இந்தச் சிறு பையனிடமா இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் நாங்கள்? அப்படி இவன் என்ன கற்றுக்கொடுத்துவிடப் போகிறான்? வேறு யாராவது வயதான ஒருவரை அனுப்புங்களேன்" என்று சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன? இரண்டொரு நாட்களுக்குள் இளைஞர் வீழிநாதன் பாடத்தைப் பயிற்றுவித்த முறையால் அந்த வயது வேற்றுமை யெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தே விட்டது. பிறகு என்ன? திரு. வீழிநாதனை அவர்கள் சும்மா விடவில்லை. அவரை அங்கேயே இருக்க வேண்டுமென்று வெகுவாக வற்புறுத்த ஆரம்பித்துவிட்டனர். எப்படி இருக்கிறது கதை!

தமிழ் இலக்கியத்தில் இரட்டையர் மரபை ஏற்படுத்தியவர்களில் முதன்மையானவர் திரு. வீழிநாதன் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. இந்தி மொழியின் பிரபல எழுத்தாளர்களான சுதர்ஸன், பிரேம் சந்து, ரமணலால், வசந்தலால் தேசாய், ஆகியோரின் நாவல்களை மூலத்தின் சுவை குன்றாது தமிழில் கொணர்ந்து, 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில்

பெயர்த்தல் வேண்டும்' என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்கியவர். சுதர்ஸனின் 'இரு நண்பர்கள்,' 'பாதுஷாவின் காதல்,' 'அருவிக்கரை ஆசிரமம்'- ஆகிய உன்னத நாவல்களெல்லாம் இன்றும் தமிழ் மக்களின் மனத்திலே நின்று நிலவுகின்றன என்றால், அவற்றை அழகு தமிழிலே, தென்றல் நடையிலே, தேன் சுவை கூட்டி வழங்கிய திரு. வீழிநாதனது திறமே காரணம் எனலாம். அவரை வாசக நேயர்கள் பலர் 'சுதர்ஸன் ரா. வீ.யோ? பிரேம் சந்து ரா. வீ.யோ?' என்று கேட்டு அறிமுகப் படுத்திக் கொண்டதிலிருந்தே, அவர் எவ்வளவு தூரம் அவர்களைக் கவர்ந்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். 'கல்கி'யில் வெளிவந்த 'சித்திரலேகா' என்ற அருமையான நாவல் திரு. வீழிநாதன் அவர்களின் கைவண்ணம் பட்டு எப்படி வாசகர்களின் இதயத்தில் ஓர் இடத்தைப் பிடித்துவிட்டது என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நாவல் 'கல்கி'யிலே வாராவாரம் வெளிவந்த போது, 'அடுத்த வாரம் என்ன வரும்? அடுத்த வாரம் என்ன வரும்?' என்று வாசகர்களின் உள்ளங்களிலே ஒரு துடிப்புக் காணப் பட்டது என்றால், அது ஒன்றே போதும் சிருஷ்டிகர்த்தாவின் சாதனை வெற்றியைப் பறைசாற்ற. மனோரமா, கோகிலா, சந்திர ஹாரம் இப்படி இன்னும் பல இந்தி நாவல்களைச் சுவைபடத் தமிழிலே வடித்துக் கொடுத்தவர் இவர். திரு. ரா. வீ. யின் தமிழ், இந்தி சிறுகதைகளின் எண்ணிக்கையோ ஏராளம், ஏராளம். 'மண்பொம்மை' சாகித்திய அகாடமிக்காக இவர் தமிழாக்கித் தந்த நாவலாகும். 'தமிழுக்கும் இந்திக்கும் இடையே அமைந்த இந்த இலக்கியப் பாலம் ஒற்றைவழிப்பாதை'(One-way traffic) அல்ல.

இந்தி மொழியில் அந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்தான் எழுதுகிறாரோ என்று எண்ணும்படியாக எழுதும் ஆற்றல் படைத்தவர் திரு. வீழிநாதன். இன்றைய பல இந்தி மொழிப் பத்திரிகைகள் இவரது கதைகளையும், கட்டுரைகளையும் ஆவலோடு விரும்பிக் கேட்டு வாங்கி வெளியிடுகின்றன. பேராசிரியர் கல்கியின் 'சோலைமலை இளவரசி'யை இந்தி உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் நமது திரு. ரா. வீ. பிரபல தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளையெல்லாம் இன்னும் இந்தி மக்களுக்கு வழங்கிக் கொண்டே வருகிறார். தமிழ் இலக்கியத்தின் பழஞ் சிறப்புக்களையெல்லாம்இந்திமொழிக்கு அவ்வப்போது வழங்கி வருகிறார். இவர் மொழிபெயர்ப்பாசிரியர் மட்டுமல்ல; சொந்தமாகவே பல சிறுகதைகளும், நாடகங்களும் படைத்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றவருமாவர்.

திரு. சிதம்பர சுப்பிரமணியத்தின் 'இதய நாதம்' என்ற நாவலைத் தற்சமயம் இந்தியில் ஆக்கிக்கொண்டிருக்கிறார். இது புத்தக உருவில் தயாராகிக் கொண்டிருக்கிறது. சாகித்திய அகாடமிக்காகப் பேராசிரியர் கல்கி அவர்களின் 'பார்த்திபன் கனவு' என்ற நாவலின் சுருக்கத்தை இந்தியில் வடித்துத் தந்திருக்கிறார். அதுவும் விரைவில் வெளிவரவிருக்கிறது. சுலபமாக யாவரும் இந்தியைக் கற்றுக்கொள்ள 'சுலப இந்தி போதினி'யைத் தயாரித்திருக்கிறார். 'கல்கி' ஸ்தாபனத்திலுள்ளவர்களை ஒரு குடும்பம் போல் அன்போடு பராமரித்து வரும் 'கல்கி' அதிபர் திரு. சதாசிவம் அவர்கள் இவரது ஆற்றலை இந்தி மீரா திரைப்படத்திலும் பயன்படுத்திக் கொண்டார்.

வித்துவான் திரு. வீழிநாதன் சதா காலமும் தும்பியைப்போல் துறுதுறுவென்று இருப்பவர். சிறிது நேரமும் வீணாக்காது இந்திக்கும் தமிழுக்கும் தொண்டாற்று வதிலேயே முனைந்து நிற்பவர். இந்தியையும், தமிழையும் தமது இரு கண்கள் எனப் பாவித்துப் போற்றி வருபவர். தமது மாபெரும் இலக்கியச் சாதனைகளை, சேதுவைக் கட்ட அணில் ஆற்றிய தொண்டு என அவர் கூறிவருவதிலிருந்து அன்னாரின் அடக்கத்தை உணரலாம். தாம் உண்டு, தம் காரியம் உண்டு என்று ஒதுங்கி வாழ்பவர். விளம்பரத்தை விரும்பாதவர். எனினும் புகழ் அவரைத் தேடி வருகிறது.

தமிழ் எழுத்தாளர் சங்கம் அவரது நீண்ட காலத் தமிழ்-இந்தி இலக்கியப் பாலத் தொண்டை உணர்ந்து அவருக்கு வெள்ளிப் பதக்கம் அளித்துக் கௌரவிக்கிறது. நிறை குடமெனத் தளும்பாது நிற்கும் திரு. வீழிநாதன் அந்தப் பாராட்டுதல்களுக்கு மிகவும் பொருத்தமானவர். இவரது இலக்கியச் சேவைகள் என்றும் இவரது பெருமையைத் தமிழ் – இந்தி மக்களுக்கு அறிவுறுத்திக் கொண்டே யிருக்கும்.

தமிழில் சிறுகதை வளர்ச்சி

[நாரண. துரைக்கண்ணன்]

ஆறுண்டுகளுக்கு முன், சென்னை மகாஜன சபையில் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் 'புதுமைப் பித்தன் நினைவு நாள்' கொண்டாடப்பட்டது. அச்சமயம் 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி தலைவராயிருந்தார். அவரும், புதுமைப் பித்தனின் சிறு கதைப் படைப்புகளைச் சிறப்பித்துப் பேசிய மற்றும் சில எழுத்தாளர்களும், 'புதுமைப் பித்தன்போல் சிறந்த சிறுகதை எழுத்தாளர் பலர் தோன்ற வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறினர்.

நான் பேசுகையில், 'தலைவரும் எழுத்தாளச் சகோதரர் சிலரும் புதுமைப் பித்தன் போல் சிறுகதைப் படைப்பாளர் பலர் வர வேண்டும் என விரும்பினர். புதுமைப் பித்தனுடைய புதிய பாணியைப் பின்பற்றி அவருடைய பரம்பரையினர் எனச் சிறப்பித்துச் சொல்லத்தக்க விதத்தில் சிலர் வந்திருக்கின்றனர். ஆனால், அத்தகையவர்களுடைய சிறு கதைகளுக்குக் கதைகளை வெளியிடும் பத்திரிகைகள் எவ்வளவு தூரம் இடந்தந்து வெளியிடுகின்றன என்பதை இங்குள்ள பலர் அறிவார்கள். புதுமைப்பித்தன் சிறுகதைகளுக்கே இடங்கிடைக்காத காலம் ஒன்றுண்டு. எப்படியோ பிரபலமாய்விட்ட பின்னர்தான் பல பத்திரிகைகள் அவருடைய கதைகளை வெளியிடலாயின. ஆகவே, சிறுகதை இலக்கியத்தில் புதிய முயற்சிகளைச் செய்வோருக்கும் போதிய ஆதரவு காட்டினால்தான், புதுமைப் பித்தன் போல் பலர் இலக்கிய உலகில் தோன்றமுடியும்' என்று குறிப்பிட்டேன்.

'பெரும்பாலான பத்திரிகைகள் பொழுது போக்குக்காகப் படிப்பதற்கெனக் கதைகளை வெளியிடுகின்றனவே யொழிய இலக்கியத்தரமுடைய சிறுகதைகளை வெளியிட்டு எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தித் தமிழ் இலக்கியத்தையும் செழுமைப்படுத்த வேண்டும் என்று எண்ணி வெளியிடவில்லை. ஒவ்வொரு பத்திரிகையும் கதைகளை வெளியிடுவதில் ஒவ்வொரு கொள்கை, நோக்கம், விருப்பப் பாணி ஆகியவைகளைக் கொண்டிருக்கிறது. எழுத்தாளர்கள் தங்களுடைய கதை வெளியீட்டுக்கு ஆதரவு பெறவேண்டுமானால், அவ்வப் பத்திரிகைகளின் போக்குக்கு ஏற்றவாறு எழுதினால்தான் இடம்பெற முடியும். எனவே, தத்தம் கற்பனையாற்றல், படைப்புத் திறன் முதலியவைகளைக் காட்டிப் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு புதுமையாக முயற்சி செய்யும் எழுத்தாளர்களுக்கு இன்றைய சூழ்நிலையில் ஏற்றமும், ஆதரவும் கிடைக்கும் என்று எண்ணமுடியவில்லை' என்றும் நிலைமையைச் சுட்டிக்காட்டினேன்.

இந்நிகழ்ச்சியை இங்கு எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், தமிழில்சிறுகதை இலக்கியம் காலச்சுழற்சிக்கு ஏற்றவாறு வளர்ந்து கொண்டுதான் வருகிறது. புதிது புதிதாகக் கற்பனையாற்றல் மிக்க சிறுகதைப் படைப்பாளர்கள் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்று வலியுறுத்தித் தெரிவிப்பதற்காகவே யாகும்.

நம் தமிழ் மொழியில் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் முதலியவை தமிழ் இலக்கியத்தை வளமும் வனப்பும் உடையதாக்கும் முறையில் வேகமாக வளர்ந்து கொண்டுதான் வருகின்றன. பிறமொழி இலக்கியங்களின் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் பின்னடையாத விதத்தில்தான் தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

ஆனாலும் இலக்கிய சநாதனிகள் சிலர், 'தமிழ் இலக்கிய வளர்ச்சி சிறிது காலமாகத் தேக்கம் அடைந்திருக்கிறது. 5 ஆண்டுகளுக்குமுன் இருந்ததுபோல் இப்போதில்லை' என்றெல்லாம் பல்லவி பாடிவருகின்றனர்.

வேறு சிலரோ, 'இன்று தமிழ் இலக்கியம் 'ராக்கெட்' வேகத்தில் வளர்ந்து வருகிறது. குறிப்பாகச் சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சியை வாரப்பத்திரிகைகள், மாதமிருமுறை பத்திரிகைகள், மாதப்பத்திரிகைகளில் வெளி

வந்துகொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான கதைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்' என்று உற்சாகமாக உரைத்து வருகின்றனர்.

முதியவர்களாயிருப்போர், 'எங்கள் காலம் போல் உண்டா?' என்பதும், எதற்கெடுத்தாலும், 'அந்தக் காலத்திலே!...' என்று பல்லவி பாடத் தொடங்குவதும், இளைஞர்கள் இன்றைய நவநாகரிகப் போக்கைப்பற்றியே பெருமையாகப் பேசிவருவதும் உலக இயற்கையாக இருந்து வருவதைப் பார்க்கிறோம் அல்லவா? அது போன்ற மனப்பான்மை இலக்கிய உலகிலும் காணப்படுவதில் வியப்பில்லை.

ஃ ஃ ஃ

ஒன்றுக்கொன்று முற்றும் மாறான இவ்விரு விதக் கருத்துக்களையும் ஒருபுறம்ஒதுக்கி வைத்துவிட்டு, உள்ளதை உள்ளபடி கண்டு மதித்து உணர்ந்து இன்றைய தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியைப் பற்றி நடுநிலையில் நின்று கூறவேண்டுமானால், தமிழ் இலக்கியத்தில் சிறுகதைப் பகுதி, பிற இந்திய மொழிகளின் இலக்கியங்களுக்கு எந்த வகையிலும் பின்னடையாத அளவு வளர்ச்சியடைந்து வருகிறது என்று நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். ஒருசிலர் இலக்கியக் கூட்டங்களில் பேசும்போதும், பத்திரிகைகளில் எழுதும்போதும் பட்டியல் கொடுப்பதுபோல், நாலைந்து எழுத்தாளர்களின் படைப்புகளோடு தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி நின்றுவிடவில்லை. நாளுக்கு நாள் புதிது புதிதாகச் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் தோன்றிக் கொண்டே வருகின்றனர். அவர்களில் சிலர் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு புதுமையோடு கூடிய கருப்பொருளைக் கொண்டு புதிய சுவையுடன் புதிய நடையில் அற்புதமாகச் சிறு கதைகளை எழுதிவருகின்றனர். நீண்ட காலமாக எழுதிப் பெரும் புகழ் பெற்ற பிரபல எழுத்தாளர்கள் பலருடைய கதைகளைவிட, இன்று புதிதாக எழுதும் எழுத்தாளர்கள் சிலருடைய சிறுகதைகள் பல வகையிலும் சிறந்து விளங்குவதை நாம் காணலாம். பத்திரிகாசிரியர்கள் தயவாலோ, நாலு எழுத்தாளர்கள் குழுமனப்பான்மையில் தூக்கி வைத்துப் பாராட்டி வருவதாலோ பிரபலமாய் விட்ட சிறுகதை எழுத்தாளர்கள் ஒரு சிலரையே திருப்பித் திருப்பிப் புகழ்ந்து கொண்டிருப்பதனால்தான் நல்ல கதைகளை எழுதும் புது எழுத்தாளர்களைப் பலரால் இனங் கண்டு கொள்ள முடியாமலிருக்கிறது. ஓராண்டில் ஆயிரம் சிறுகதைகள் எழுதி வெளியாகின்றன என்றால், அவற்றில் குறைந்தது பத்து சிறுகதைகளாயினும் கருப்பொருளிலும் கதையமைப்பிலும் கையாளும் உத்திகளிலும் சிறந்து விளங்குவனவா யிருக்கின்றன. அந்த அளவுக்குத் தமிழில் சிறுகதை இலக்கியம் முற்போக்கான முறையில் வளர்ச்சியடைந்து வருகிறது என்று என்னால் துணிந்து கூறமுடியும்.

ஃ ஃ ஃ

தமிழில் சிறுகதை இலக்கியம் என்று ஏற்பட்ட காலம் ஏறக்குறைய நாற்பதாண்டுக்கு முன் இருக்கலாம். ஆயினும், சிறந்த சிறுகதை சகாப்தம் தொடங்கியது இருபத்தைந்து ஆண்டுக்கு முன்னர்தான் என்பதைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து வருபவர்கள் அறிவார்கள். மேனாடுகளில்கூடச் சிறுகதை இலக்கியம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் நல்ல முறையில் உருவாகலாயிற்று. ஆகவே, அம் மேனாட்டு இலக்கியங்களின் தொடர்பைக் கொண்டு நம் தமிழ் மொழியில் தோன்றிய புதுமை இலக்கிய வகைகளில் சிறுகதைப் பிரிவு நல்ல முறையில் கருக்கொண்டு உருவாவதற்கு இவ்வளவு காலம் ஆனதில் ஆச்சரியமில்லை.

கடந்த முப்பது ஆண்டுகளாக, பொதுவாகத் தமிழ் இலக்கியம்-சிறப்பாகச்சிறுகதை இலக்கியம் – படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. காலச்சூழலில், இடையிடையே இவ்வளர்ச்சியில் சிறிது தொய்வு ஏற்பட்டிருக்கலாமாயினும், ஒரு சிலர் அடிக்கடி கூறிவருவதுபோல், அடியோடு தேக்கமடைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. '25 ஆண்டுகளுக்கு முன் சிறுகதை இலக்கியம் படைக்கத் தொடங்கியவர்கள் பாரதியார், வ. வே. சு. ஐயர் போன்ற இலக்கியப் பிதாமகர்களை ஆதர்சமாகக் கொண்டு இலட்சிய வேகத்தோடு எழுதி வந்தார்கள். அந்த வேகமும் உற்சாகமும் இப்போதில்லை' என்று ஒரு சாரார் சொல்லி வருகின்றனர். அப்படியானால், இப்போது இலக்கியம் படைத்து வருவோர் எல்லாம் இலட்சிய வேகம் இல்லாமலா எழுதி வரு

கிறார்கள்? எல்லோருமே காசுக்காகவா எழுதுகிறார்கள்? மேற்குறித்த ஒரு குழுவினர் கூறி வருவது போல், இப்போது எழுதுவோரெல்லாம் சன்மானத்தை எதிர்பார்த்தே ஏதோ எழுதிவருகிறார்கள் என்றே வைத்துக்கொள்ளுவோம். இலட்சிய வேகத்தோடு அக்காலத்தில் எழுதினார்கள் என்று குறிப்பிடப்படும் எழுத்தாளர் பலர் இன்னமும் இருக்கத்தானே செய்கிறார்கள்? ஏன் அவர்கள் தொடர்ந்து இலட்சிய வேகத்தோடு எழுதி இன்றைய இலக்கியத்தை வளர்த்து வரக்கூடாது? ஏன் அவ்விதஞ் செய்யாமல் வாளா இருந்துவருகின்றனர்? இவ்விதக் கேள்விகளுக்கு, எப்போதும் குறைப்பட்டுக் கொண்டே யிருப்போரால் தக்க பதில் சொல்ல முடியாது.

° ° °

தமிழ் நாட்டில் இலக்கியப் படைப்பாளர்களுக்கு வாய்ப்பும் வசதியும் போதியபடி அமைந்திருப்பதாக யாராலும் சொல்ல முடியாது. எத்தனை எத்தனையோ இடையூறுகளுக்கும், வசதிக்குறைவுகளுக்குமிடையே எழுத்தாளர்கள் சிறுகதை, நாவல், கவிதை நாடகம் முதலியவைகளைப் படைத்து வருகிறார்கள். இவர்கள் பத்திரிகைகளையும், புத்தக வெளியீட்டாளர்களையும் நம்பித்தான் இலக்கியங்களைப் படைக்க வேண்டியிருக்கிறது. எவ்வளவு பெரிய எழுத்தாளராயிருந்தாலும் பத்திரிகைகளின் ஆதரவில்லையானால், பிரகாசிக்க முடியாது; பேரும் புகழும் பெற முடியாது. அதுபோலவே நூற் பதிப்பகத்தாரின் ஆதரவும் இருந்தால்தான் எப்பேர்ப்பட்ட எழுத்தாளரும் நிலையான பேர் பெற முடியும்.

° ° °

பத்திரிகை இலக்கியம், பத்திரிகை இலக்கியம் என்று 'மேதாவி'கள் இரண்டொருவர் பரிகாசஞ் செய்து வந்தாலும், பத்திரிகைகளால்தான் தமிழ்ப் புதுமை இலக்கியம் இன்று இந்த அளவாயினும் வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. பத்திரிகைகள் படைப்பு இலக்கியங்களுக்கு இடந்தந்து வரவில்லையானால், புதுமை இலக்கியமே தமிழில் வளர்ந்திருக்க முடியாது என்று கூடச் சொல்லலாம். பத்திரிகைகளின் ஆதரவு பெற்றுப் பிரபலமடைந்த எழுத்தாளர்களின் சிறுகதைகள், நாவல்களைத்தான் புத்தக வெளியீட்டாளர்கள் நூல் வடிவில் வெளியிட்டுப் பரப்ப முன்வருகிறார்கள். 'பத்திரிகை இலக்கியம்' என்று கதைப்பவர்கள்கூடப் பத்திரிகைகளில் எழுதிப் பெயர் பெற்றவர்கள்தான் என்பதை அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

ஆனால் ஒன்று. இன்று பத்திரிகைகளில் வெளிவருவனவெல்லாம் இலக்கியப் படைப்புகளாய் விடுவதில்லை. சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், நாடகங்கள் என்ற பெயரில் எத்தனையோ குப்பை கூளங்கள் வந்து குவிந்துகொண்டிருப்பதை நாம் அறிவோம். எந்த வகையிலும் சிறு கதைகளாக இல்லாதவை யெல்லாம் சிறு கதைகள் என்று சொல்லி வெளியிடப்பட்டு வருகின்றன. பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளில் பெரும்பாலானவை தோன்றிய வேகத்தோடேயே மறைந்துவிடுகின்றன. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது கதைகள் - ஏன்? – சில சமயங்களில் நூற்றுக்கு நூறு கதைகள்கூட வாசகர்கள் நினைவில் ஒரு கணங்கூட நிற்பதில்லை. அவ்வளவு அற்பாயுளான கதைகளே கணக்கின்றி வருகின்றன. எப்படியோ புத்தக உருவில் வரும் கதைத் தொகுதிகள் பலவுங்கூட இக்கதியைத்தான் அடைகின்றன.

இதே சமயத்தில் சிறந்த படைப்புத்திறன் மிக்கவர்களுடைய கதைகள் பல பத்திரிகாசிரியர்களுடைய கருணை நோக்கையும், பதிப்பகத்தாரின் ஆதரவையும் பெறுவதில்லை. இதற்கு முக்கியக் காரணம் இலக்கியப் படைப்புகளைத் தகுதியறிந்து தரங்காண்பதைவிட, அந்த இலக்கியப் படைப்புகளைப் படைத்த இலக்கியக் கலைஞர்கள் யார் என்று பார்த்தே அவர்கள் வெளியிடத் தேர்ந்தெடுக்கின்றனர். இதுவன்றியும், பெரும்பாலான பத்திரிகாசிரியர்களும் புத்தக வெளியீட்டாளர்களும், அவரவர்களுக்கு ஒவ்வொரு நோக்கமும் கொள்கையும் வைத்துக்கொண்டிருக்கின்றனர். தங்களுக்கென ஒரு சில எழுத்தாளர்களைக் குழுவாக வைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், கற்பனைத்திறனுடன் இலக்கியம் படைக்கவேண்டும் என்று ஆர்வத்தோடு வரும் புதிய எழுத்தாளர்களுக்குப் பத்திரிகைகளிலும், புத்தக வெளியீட்டிலும் இடம் கிடைப்பது அரிதாய் இருக்கிறது. அப்படியும் தப்பித்

தவறிப் புதிய எழுத்தாளர்கள் எழுதும் கதைகள் சில பத்திரிகைகளில் வெளிவருகின்றன என்றால், நாளுக்கு நாள் பெருகி வரும் பத்திரிகைகளின் பெருக்கந்தான் அதற்குக் காரணமாகும். நூல் வெளியீட்டகங்களும் இன்று பலவாகத் தோன்றியிருக்கின்றன; அவை தம் தேவையை நிறைவுபடுத்திக் கொள்ள இளம் எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் பயன்படுத்திக் கொள்கின்றன.

இவ்வளவு அசௌகரியங்கள், வசதிக் குறைவுகளுக்கிடையே, தமிழில் சிறு கதை இலக்கியம் இன்றுள்ள அளவுக்காயினும் வளர்ந்திருக்கின்றது என்றால், தமிழ்மொழிக்குள்ள வலிவும் செழுமையுமே அதற்குக் காரணம் என்பதில் மிகை இருக்க முடியாது.

ஃ ஃ ஃ

ஆனால் எனக்கு ஒரு குறைமட்டும் நீண்ட காலமாக உண்டு. நம் தமிழகத்தில் இலக்கியம் படைப்போரில் பலர் நாட்டில் அவ்வப்போது பல துறைகளிலும் ஏற்பட்டுவரும் எழுச்சிகளையும் மாறுதல்களையும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் கண்கொண்டு பார்த்து, காதாரக் கேட்டு, அவற்றைத் தங்கள் படைப்புகளின் கருப்பொருளாக வைத்து எழுதி, மக்கள் சிந்தனையில் புரட்சி உண்டு பண்ண முன்வரவில்லை; புதிய திருப்பங்களை ஏற்படுத்த முயலவில்லை. அப்படிச் செய்திருந்தால், நம் நாட்டில் நடந்த சுதந்திரப் போராட்டங்களும், மொழிப் போராட்டங்களும், சமுதாயச் சீர்திருத்தக் கிளர்ச்சிகளும் இரண்டாவது உலக மகாயுத்த நிகழ்ச்சிகளும், 'வெள்ளையனே! வெளியேறு' என்று முழங்கப்பட்ட ஆகஸ்டு புரட்சியும், -ஏன்?- இன்று நிகழ்ந்துகொண்டிருக்கும் சீன ஆக்கிரமிப்பும், இவை போன்ற முக்கிய சம்பவங்களும் தமிழ் எழுத்தாளர்களுடைய இலக்கியப் படைப்புகளுக்குக் கருப்பொருள்களாகப் பயன்பட்டிருக்கும். மேனாடுகளில் இலக்கியக் கலைஞர்கள் படைத்துள்ள இலக்கியப் படைப்புகள் பலவற்றால், நாட்டு நடப்பிலும் மக்கள் வாழ்விலும், எத்தனையோ மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. வங்காளி, மகாராஷ்டிரம், குஜராத்தி முதலிய மொழிகளின் இலக்கியப் படைப்பாளர்கள் மேனாட்டு எழுத்தாளர்களைப் பெரிதும் பின்பற்றி எழுதிவருவதனால்தான் தாங்களும் புகழ் பெறுவதோடு, தங்கள் இலக்கியங்களுக்கும் சிறப்பைத் தேடித் தருகிறார்கள். அதுபோல, தமிழ் இலக்கியக் கலைஞர்கள் பலர் இலக்கியத்தின் இலட்சியத்தை உணர்ந்து இலக்கியம் படைக்கத் தவறிவிட்டனர். இதற்குக் காரணம் பலர் இலக்கியத்தை ஒரு பொழுதுபோக்காகக் கருதி எழுதிவருவதுதான். 'இலக்கியம் மனித வாழ்க்கையையொட்டியே எழவேண்டும்; வாழ்வியலை விதவிதமாக வரைந்து காட்டுவதே இலக்கியம்' என்ற பேருண்மையைப் பெரும்பாலார் உணராமலிருந்து வருகின்றனர். இந்த இலக்கிய அடிப்படை உண்மையை மட்டும் அவர்கள் புரிந்து கொண்டிருந்தால், தமிழ்ச் சிறுகதை இலக்கியம் இன்று செழுமை பெற்றிருப்பதை விட, இன்னும் சிறப்பாக வளர்ந்திருக்கும்.

ஃ ஃ ஃ

இறுதியாக ஒரு கருத்தைக் கட்டாயம் சொல்லியாக வேண்டும். தமிழில் புதுமை இலக்கிய வளர்ச்சிக்குப் பத்திரிகைகளையும், வியாபார நோக்குடன் மட்டுமே நடக்கும் புத்தக வெளியீட்டகங்களையும் மட்டும் நம்பியிருந்தால், தமிழ் இலக்கியம் உரிய முறையில் வளர்ச்சியடைய முடியாது. இலக்கிய வளர்ச்சிக்கென ஏற்பட்டுள்ள தென்னிந்தியப் புத்தக டிரஸ்டு, சாகித்திய அகாடமி போன்ற ஸ்தாபனங்களைப் போல, நம் நாட்டில் பெருஞ் செல்வம் படைத்த நல்லுள்ளமுடையோர் சிலர் இலக்கிய வளர்ச்சிக்கென இலக்கியப் பண்ணைகள் சிலவற்றை நடத்த முன்வர வேண்டும். தம் இலக்கியப் படைப்புகளால் குஜராத்தி இலக்கியத்துக்குச் சிறப்புத் தேடித்தந்த திரு. கே. எம். முன்ஷி பம்பாயில் நிறுவி நடத்தி வரும் பாரதீய வித்தியா பவனம் போன்ற சிறந்த நோக்கமுடைய நல்லமைப்புகள் நாடெங்கணும் ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால், பழம்பெரும் எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகள் மட்டுமல்லாமல், புதிதாக இலக்கியப் படைப்புத் திறனுடன் எழுதும் இளம் எழுத்தாளர்களின் படைப்புகளும் வெளியாவதற்கு வழியுண்டாகும். தமிழ் இலக்கிய வளர்ச்சி ஒன்று கருதியே ஏற்படும் இவ்வித அமைப்புகளால்தான், காலவெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு நிலைத்து நிற்கக்கூடிய சிறுகதைகளும் நாவல்களும் நாடகங்களும் கவிதைகளும் உண்டாக இயலும்.